
# கவசங்களைதல்



எஸ். நஸீறுதீன்

# கவசங்களைதல்

(சிறு கதைகள்)

எஸ். நஸீறுதீன்

வெளியீட்டகம்

*Kavasang Kalaithal / Short Stories / Author S. Naseerudeen (c) / 72, Juniper Road, Langley Green, Carwley, West Sussex, RH11 7NT, U.K / First Edition: 05 January 2007 / Pages: xiv + 122 / Published by: Moonravathu Manithan Publication, 617, Avissawella Road, Wellampitiya, Sri Lanka / Phone: 077 3131627 / Price: 200/-*


***வெள்ளை நிறத்திலொரு பூனை — 01***

***இருக்கும் இடத்தை விட்டு... — 09***

***தொலைந்தவர்கள் — 23***

***அகவெளி தீண்டல் — 37***

***அவளும் இரு குறோட்டன்களும் — 78***

***கண்டு கொண்டேன் — 88***

***என் ஆசியமுத்தே — 95***

***அதனை, ஆராதனை செய் — 108***

# நஸீறுதீனின் கதைகள்

நல்லதோர் வீணை செய்தே (1996), பெண்ணே போற்றி (1999), மறைத்தலின் அழகு (2002) என்பன அவரது சிறுகதைத் தொகுதிகளாகும். இது நஸீறுதீனின் நான்காவது சிறுகதைத் தொகுதி.

நஸீறுதீனின் சிறுகதைகளை வாசிக்கும்போது, லயித்து வியப்புற்றிருக்கின்றேன். இங்குள்ளவைகள் எல்லாம் சிறுகதைகள்தானா என்னும் அவருடைய சந்தேகங்களையும் மீறி....

'எடுத்தாளப்படுகின்ற விஷயம் எதைப்பற்றியதாக இருந்தாலும் அந்த எழுத்து இயல்பானதாக, இலயிப்பைத் தருவதாக வேறு பயன் கருதாததாக இருக்க வேண்டும். இதைப்பற்றிச் சொல்லலாம் இதைப்பற்றிச் சொல்லக்கூடாது என்பது போன்ற கொள்கைச்சார்பு நிலைகள் கடந்து அவைகள் நிற்க வேண்டும்' என்பது புதுமைப்பித்தனுடைய நவீன கலை இலக்கியம் பற்றிய கொள்கை, குறிப்பாக நவீன சிறுகதை பற்றிய கொள்கை.

நஸீறுதீனின் படைப்புக்களுடன் இந்தக் கருத்து மிகவும் கூடுதலாகவே ஒத்துப்போகின்றது. இச்சாதாரிப்பாம்பு பெண்ணுரு கொள்ளும் 'அகவெளி தீண்டல்' என்னும் நாற்பது பக்க நீண்ட சிறுகதை கூட, நம்மை மறந்து அதனுடன் நம்மை ஒன்றவைத்துக் கொண்டு நமக்கும் இப்படி ஏதாவது நடந்து விடலாமோ என்னும் உணர்வலைகளை ஏற்படுத்தும் வல்லமை கொண்டதாக இருப்பது இதற்கு ஒரு சிறிய உதாரணம்.





எழுத்தின் இன்றியமையாத அந்த மைய சக்தி ஒன்றுபோதும், நஸீறுதீனை ஒரு வித்தியாசமான எழுத்தாளராக அடையாளப்படுத்தி, உயர்த்திக்காட்ட....

ஒரு தெளிவான இலக்கின்றி, எழுதும் வேட்கையினால் மட்டுமே எழுதுகின்றேன் என்று தொண்ணூறுகளில் கூறிய இவரின் பிந்திய படைப்புகள் தன்னை அறியாமலே சில இலக்குகள் நோக்கி எழுத்து, படைப்பினூடாகப் பயணிக்கத் தொடங்கியுள்ளதை உறுதிப்படுத்துகின்றன.

மனித வாழ்வின் அமைதிக்கும், மானுடப் புரிந்துணர்விற்கும், மனிதனை மனிதன் நேசிக்கும், மதிக்கும், மானுடப் பண்புகளுக்கும் வழி மறைக்கும், அல்லது வழி மறுக்கும் சமூக சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்கள், மரபுகள் போன்றவைகளை ஏற்றுக்கொள்ள முடியாதவராகவும் தொடர்ந்து அவைகளின் மீது கேள்விகளையும் விமர்சனங்களையும் வைப்பவராகவும் அவருடைய படைப்புக்கள் பரிமாணம் கொள்கின்றன.

இந்தக் கேள்விகள் விமர்சனங்கள் எல்லாம் ஆண் பெண் பாலுணர்வு சம்பந்தமான மன உணர்வுகளைச் சித்தரித்தல் என்னும் வட்டத்தைச் சுற்றியே வலம் வருவதனை இவருடைய பெரும்பான்மையான கதைகள் சுட்டி நிற்கின்றன.

"சந்திரனைப் பார்த்தாயிற்று, உலகைச் சுருக்கி ஒரு வலையமைப்பில் ஆக்கியாயிற்று, ஒலியை விட வேகமாகப் பயணம் போயாயிற்று, செவ்வாய்க்கும் தூது விட்டாயிற்று. நாம் இன்றைக்கும் மார் தட்டிக் கொள்ள பெருமைப்பட நிறைய விஷயங்கள் உண்டு. ஆனால் நமதருகான சக பெண்ணை அறிதலில் தோற்றே வந்திருக்கின்றோம். பெண்ணே போற்றி என்பதன் மூலம் நான் சொல்ல வருவதில் நிறைய பேருக்கு உடன்பாடு கொள்ளக் கடினமாக இருக்கும். உலகின் மிக அழகான அற்புதமான விஷயம் பெண். ... என்னால் பொய்யெழுத முடியவில்லை. விருப்பமும் இல்லை – (பெண்ணே போற்றி – முன்னுரை)" நஸீறுதீனின் இந்தக் கூற்றுக்கூட அந்த வட்டத்தை ஊர்ஜிதம் செய்வதாகவே அமைகின்றது.

'போதுமடி நீ எனக்கு' என்றொரு கதை, 1997ல் எழுதப்பட்டது. பெண்ணேபோற்றி தொகுதிக்குள் இடம் கொள்கிறது. இந்தக் கதைக்காக நிறையப் பேரிடம் ஏச்சு வாங்கியதாகவும் காயப்பட்டதாகவும் அவரே குறிக்கின்றார். "... அன்ரியுடன் ஒன்றித்துப்போன அந்த இரவு. அங்கு ஆணுமில்லை பெண்ணுமில்லை! இது சரியா தப்பா என்ற யோசிப்பின்றி இருவரும் மயங்கிக்கிடந்தோம்... ஒன்றுதல் என்பதை விளக்க வெளிக்கிடும் எவனுமே அந்த நிலைக்குத் துரோகம் செய்தவனாகவே ஆகிறான்..." என்று அக்கதையில் எழுதிச் செல்கின்றார் நஸீறுதீன்.

அங்கீகரிக்கப்பட்ட சமூக உறவுகள் மூலமாக மட்டுமே பாலியல் தேவைகள் நிறைவேற்றப்படல் வேண்டும் என்னும் பாரம்பரிய சமூகக் கட்டுக் கோப்புகளை உடைத்தெறியும் ஒரு கலகக்காரராகத் தன்னை இனம் காட்ட முயலுகின்றாரோ என்னும் நினைவுகள் எழுந்தாலும் இறுதியில் 'இல்லை அப்படி இல்லை' என்னும் உணர்வையே கதை முடிவுகள் தருகின்றன. அகவெளி தீண்டல் கூட இந்த அங்கீகரிக்கப்பட்ட குடும்ப உறவு முறைகள் பற்றிய விசாரணைகளையே முன்வைக்கின்றன.

"....நானும் கௌதமியும் அவரவர் தேவை எதுவென்பதில் தெளிவுடன் இருக்கின்றோம். சமூக ஆக்கிரமிப்பு அல்லது சட்டங்களினூடான எந்த விலங்குகளுமின்றிப் பழகுகின்றோம். பிடிக்கவில்லையாயின் எந்தச் சங்கடமுமின்றி நட்புடன் பிரிந்து கொள்கின்ற தெளிவுடன்..."

கல்விசார் குடும்பப் பின்னணி கொண்டவரும், விஞ்ஞானப் பட்டதாரியுமான எஸ். நஸீறுதீனின் லண்டன் வாசமும், தொழிலும் மேற்குலக நாகரீகங்களை ஆதரித்து நிற்கும் ஒரு மனப்பக்குவத்தை சன்னஞ்சன்னமாக அவரில் ஏற்றி வருகிறதோ என்னும் அச்சத்திற்கான மறுதலிப்பாக 'தொலைந்தவர்கள்', 'கண்டு கொண்டேன்,' 'என் ஆசிய முத்தே' போன்ற கதைகள் எழுந்து நிற்கின்றன.

"... நல்ல கணவன், தந்தை, நண்பன், அல்லது எல்லாமும் சேர்ந்த நல்லதொரு மனிதனாக நான் இருந்தேனில்லை. சாப்பிட்டீர்களா?, சுகமா? என்று கேட்க இங்கு சக மனிதரில்லை.





அவர்களின் அவசர ஆதாயம் பார்க்கிற வாழ்க்கையை விட, எனது தேட்டமும் அணுகுமுறையும் நல்ல மனிதர்களைப் பெறுதலில் எப்போதும் தோற்றேதான் வந்திருக்கிறது. மொத்தத்தில் முகம் குப்புற வீழ்த்தப்பட்டு எல்லாம் இழந்து நின்ற இலங்கை வேந்தன் போல் ஐரோப்பிய மண்ணில் அனாதையாக நின்றேனடி.... எனது கல்வியும் பட்டமும் என்னால் மதிப்பிடவே முடியாத பரிசாக உங்களை மட்டுமே எனக்குத் தந்துள்ளதாக நம்புகிறேன். எல்லாம் வல்ல இறைவன் உங்களை மனைவியாக்கியது மட்டுமே எனக்குக் கிடைத்த மிகப்பெரிய அருள்..."

'கண்டுகொண்டேன்' கதையில் அன்பின் கண்மணிக்கு என்று கடிதம் மூலம் உருக்கும் நெஞ்சினனாக தோற்றம் காட்டுகின்றார் நஸீறுதீன்.

கீழைத்தேய மேலைத்தேய நாகரீகங்களுக்கிடையிலான மோதல்கள் போன்ற எதற்குள்ளும் சிக்கிக் கொள்ளாத ஒரு சுதந்திர மனிதனாக இவரை அடையாளம் காண்பது, புதியதொரு தளத்தில் களிப்பைத் தருகின்றது.

'என்ன மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிவிட்டதா' என்று ஆரம்பிக்கும் 'இருக்கும் இடத்தை விட்டு' என்னும் கதை தோட்டத்தில் ஒரு மரத்துடன் உட்கார்ந்து கதைபேசி, கதைகேட்டு, கோபம் கொண்டு பிறகு சமாதானமாகி... என்று வியப்பைத் தருகின்றது. இக்கதைக்குள் மனைவி என்கின்ற பெண்ணைப் புரிந்து கொள்ள மரம் உபதேசிப்பது ஒரு குறுக்கீடு என்றே எனக்குப்படுகிறது.

புதுமைப்பித்தனின் வேதாளம் சொன்ன கதை பற்றிப் பேசும் ராஜமார்த்தாண்டன் கூறுகின்றார் 'ஒரு கலைஞனால்தான் வேதாளத்துடன் அமர்ந்து கதைபேச முடியும், கதை சொல்லக் கேட்டுவர முடியும். இதில் முற்போக்கு பிற்போக்கு பார்த்தால் கலை காணாமல் போய்விடும் என்று' (புதுமைப்பித்தனும் கயிற்றரவும் - ராஜமார்த்தாண்டன்)

'அவளும் இரு குரோட்டன்களும்' கதையில் வரும் அமீன் காதலியைக் கைவிட்ட பிறகு இருவருக்கும் வேறு வேறு இடங்களில் திருமணமும் ஆகிவிட்ட நீண்ட காலத்தின் பிறகு

— தான் காதலித்தபோது சாட்சியாக இருந்த இரு குரோட்டன்களையும் நேருக்கு நேர் நிமிர்ந்து பார்க்க சக்தி அற்றவனாகி குற்ற உணர்வு மேலிட்டவனாக இருக்கின்றான்.

செடி கொடி தாவரங்களைக் கூட ஒரு சக உயிராக மதிக்கும் உயர் குணம், மரத்துடன் உட்கார்ந்து பேசி அதையும் பேசவைக்கும் பண்பு நஸீறுதீன் அவர்களையும் விசேட எழுத்துக் கலைஞனாக உயர்த்தி வைக்கிறது. 'வெள்ளை நிறத்திலொரு பூனை' என்னும் இச்சிறுகதைத் தொகுதியின் முதல் கதையும்கூட இதை ஊர்ஜிதம் செய்கின்ற ஒரு அருமையான படைப்பு.

ஒரு படைப்பிற்கான மொழிகுறித்த அக்கறை பெரும்பாலான நமது எழுத்தாளர்களிடம் பிரக்ஞை பூர்வமாக இன்னும் வேர் கொள்ளவில்லை என்பது துயர் தரும் விஷயம். எழுத்தைச் செப்பனிட்டு ஒரு பொறுப்புடன் கையாளும் ஒரு சில படைப்பாளிகளில் நஸீறுதீன் முன்னிடம் கொள்கின்றார். ஓவியத்துக்கு வண்ணம் போல இலக்கியத்துக்கு மொழியே வெளியீட்டு சாதனம். எனவே ஒரு படைப்பில் மொழி நடையும் பிரதான பங்கு வகிக்கிறது. படைப்பிலக்கியத்தின் மொழி கருத்தை மட்டுமல்லாமல் அனுபவத்தையும் வெளிக்கொண்டு வரும் சக்தி கொண்டதாக இருக்க வேண்டும். நஸீறுதீனின் படைப்புக்களின் மொழி அந்த சக்தி கொண்டதாகவே இருக்கிறது.

மூன்றாவது மனிதன் பதிப்பகம் வெளியிடும் இந்தத் தொகுதியில் எட்டுக் கதைகள் அடங்குகின்றன. ஒரு இலயிப்புடன் மீண்டும் வாசிக்கத் தூண்டும் கதைகள். இந்தத் தொகுதி ஈழத்துச் சிறுகதை இலக்கிய உலகின் ஒரு ஆரோக்கியமான வரவு என்பது மறுக்க முடியாதது.

வாழ்த்துக்கள்.

**தெளிவத்தை ஜோசப்**

*119, Thimbirigasyaya*
*Hendala Road*
*Wattala.* *31.12.2006.*





# என்னுரை

'வாசிப்பது' என்பது இரு மனங்களிடையேயான மேம்பட்ட உரையாடல். எழுத்தாளனுக்கும் வாசகனுக்குமான தொடர்பு, அல்லது கருத்துப் பரிமாற்றம் என்பது, வாசகனைத் தன்புறம் சாய்த்து, 'இது இப்படி இல்லையா?' என அவனுக்கு எழுத்தாளனின் மனோநிலையை, அல்லது அவன் கண்டுகொண்ட நிலைக்குக் கொண்டு செல்கிற தளமாகும். எழுத்தாளன் சொல்லாது விட்ட நிலைகளுக்கும் வாசகன் ஒரு படைப்பினூடு செல்லக் கூடும்.

பணம், அந்தஸ்து, கௌரவமான வாழ்க்கை எனச் சொல்லப்படுபவற்றினைத் தேடும் போது..., எல்லை வகுக்க முடியவில்லை. மேலே... இன்னும் மேலே... இப்படிப் போய்க் கொண்டிருக்க, சுய ஆழ் மன நிறைவு ஒரு போதும் கிடைத்து விடாது. மனிதனுக்கேயான, சுய, உள்ளார்ந்த தேடுகையிலேயே இது சாத்தியமாகிறது. அதற்கு முழு சுதந்திர உணர்வும், தன்னுள் கேள்விகேட்டு சுயவிசாரணைக்குத் தன்னை உட்படுத்துகிற ஆற்றலும் தேவைப்படுகிறது.

இதில், நாம் இன்னும் சுதந்திர உணர்வை அனுபவிக்காதவர்தான் என்பதை நம்ப முடிகிறதா? தொடர்ந்து அடிமைப்பட்டிருந்ததனால், நமது எல்லா வாழ்க்கை விழுமியங்களையும் தொலைத்துவிட்டு, இரண்டாயிரம்

வருடங்களுக்கு மேலான பண்பாடுகளைத் தொலைத்துவிட்டு, வெளிநாட்டு - குறிப்பாக ஆங்கிலேய மோகத்திலேயே நமது வாழ்வு தேடுகைக்குரியதாயிற்று. எல்லா வீடுகளும் மதில்களால் மூடப்பட்டன. திண்ணைகள் ஒழிந்தன. களுக் குடும்பங்கள் கூடின. காலை முதல் இரவு வரை தனி மனித தேட்டங்களும், தனிமனித பாரங்களுமாக ஒவ்வொரு மனிதனும் தனித் தனித் தீவுகளாகி விட்டனர்.

இதற்கு 'ஜனநாயகம்' என்கிற லேபலும், திறந்த பொருளாதாரம் - அல்லது 'குளோபல் வில்லேஜ்' எனும் திட்டமிட்ட மேற்கைத்தேய ஒழுங்கமைப்பும் காரணமாயின. நமக்கு ஆங்கிலப் படங்கள் பெரிது. புத்தகங்கள், அவர்களின் பொருட்கள்,..., இதைச் சொல்லிக் கொண்டே போகலாம். அதன் தொடர்ச்சியாகவே இன்றைக்கு நிதர்சனமாக எல்லா வழிகளிலும் (அரசியல், பொருளாதாரம், கருத்துச் சிந்தனை, மதம்) சுதந்திரம் பலவந்தமாகவோ - அல்லது அறியாமையாலோ நமக்கு இல்லாதுவிட்ட போதும், அதையும் சுகித்தபடி நம்மால் வாழ முடிகிறது.

சுய சிந்தனைக்கு, ஆழ் மனத் தேடுகைக்கு கேள்வி அவசியமானது. கேள்வி கேட்கவும் அஞ்சப்பட்டு வாழ்கிற சமூகம் நம்முடையது, ஆயினும் எழுத்தாளன் இதை ஓரளவு நிவர்த்தி செய்ய முடியும். அவன் கதை சொல்கிற நேர்த்தி அவனுள் ஒரு பொறியையாவது எழுப்ப முடியும். அதற்கு பஸ் பயணத்திலோ, ஆரவாரங்களினிடையோ வாசிக்கக் கூடியதான, குமுதம், விகடன், ரமணி சந்திரன்..., போன்றவை பயன்படாது. வாசித்து முடித்த பின்னரும் அதன் தொடர்ச்சி, மனதில் பல நாட்களின் பின்னரும் அரற்றிக் கொண்டேயிருக்க வேண்டும். அதற்கு வெகுஜனப் பத்திரிகை என்பதை விடுத்து, அப்பால் தீவிர தேடுகைக்குரிய நிலைக்கு நாம் மாறவேண்டும்.

இவ்வளவு சொல்கிற என்னால் தரப்படுகிற இந்த எட்டுக் கதைகளும் எப்படியானவை? எனக்குச் சொல்லத்





தெரியவில்லை. ஆனால் சில விருப்பு, வாழ்வு முறைமைகளைக் கேள்விக்குட்படுத்த முயன்றிருக்கிறேன். அதன் தரம், பயன், நிலைப்பு என்பவற்றை, விமர்சகர்கள் பால் கொடுத்து விடுகிறேன், எது வரினும் ஏற்றுக் கொள்கிறேன்.

இந்தச் சிறு கதைத் தொகுதி ஒரு வருடத்திற்கு முன்னரேயே வந்திருக்க வேண்டியது. பிந்திய காரணம், கசப்பான தனிக்கதை, எனினும் காலதாமதம் கூட, மூன்றாவது மனிதன் பதிப்பகத்தின் இன்னொரு வெளியீடாக வெளிவருவதற்காகவேயானது வரையில் சந்தோசம்.

இறுதியாக, மிகவும் கூடிய சிரத்தையெடுத்து, இதை வெளிக்கொணருகிற நண்பர் பௌசர், ஆய்வுரை வழங்கிய எழுத்தாளர் தெளிவத்த ஜோசப், மூன்றாவது மனிதன், தினக்குரல், வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளுக்கும் எனது நன்றிகள்.

என்றும் அன்புடன் -

**எஸ். நஸீறுதீன்.**

# வெள்ளை நிறத்திலொரு பூனை

எங்கள் வீட்டுப் பூனைதான் அது. அப்படியொன்றும் உடம்பு மொத்தமே வெள்ளையானதல்ல. இரு சிறிய பரப்புகள் கறுப்பாலானது. குதிரையின் லாடம் போல, கழுத்தின் ஆரம் ஓரிடம், அதைப் பார்க்கின்ற போதெல்லாம் நண்பன் நௌபரின் மீசை ஞாபகத்திற்கு வரும். அப்படிக் கருகருவென்ற மீசை அவனுக்கு. மற்றையது, வலதுபுற அடிவயிற்றில் பாதி நீளச்சில், கிழிந்த வெற்றிலை வடிவில் ஒரு கறுப்பு. ஆக, பூனை பார்க்க ரொம்ப அழகாயிருக்கும். மொழுக்கென்ற அதன் உடல், 'என்னைத் தடவிக்கொண்டேயிரு' என்கிற சடை முடியமைப்பு, முன்னோக்கி எட்டெடுத்து நடந்து வரும் போது, மொத்த உடலுமே குலுங்க வருகிற பாங்கு... மிகவும் அழகாயிருந்தது அது. அதன் வெள்ளைக்கு உடலெங்கும் ஊத்தை அப்பி அசிங்கமாகவே திரியவேண்டும். அப்படி ஒரு போதும் அதை நான் கண்டதில்லை. அவ்வாறு அது இருக்கவும் முடியாது, ஏனெனில் இருக்கும் பிள்ளைகள் போதாதென்று அதையும் ஒரு பிள்ளையாகத் தாங்கினார், எனது உம்மா.

உம்மாவுக்கு, மூன்று பெண்களும், ஆறு ஆண்களுமாக மொத்தம் ஒன்பது பிள்ளைகள். பெண்களிருவர் ஏற்கனவே திருமணமானவர்கள். மிகப் பெரிய வளவில் அடுத்தடுத்ததாக அவர்களின் மூன்று வீடுகள். கூட்டுக் குடும்பம் மாதிரி, புதிதாக வந்து சேர்ந்த மருமகன்கள், பேரன்மார், பேத்திமார், என மிகப்பெரிய குடும்பம் அது. எங்கள் பூனைக்கு மொத்தக் குடும்பமே உறவாயிருந்தது. விரும்பியோ விரும்பாமலோ அதனை அங்கீகரித்திருந்தோம். மூன்று வீடுகளும் அவருக்குரியதுதான். யாரும்

அவரைத் தடுத்ததில்லை. எல்லா அறைகளுக்கும் சுயாதீனமாக நுழைந்துவருவார் அவரை யாரும் ஏசிவிடக் கூடாது. காலாலோ, சிறு கம்பாலோ அடித்துவிட்டால், உம்மாவிடம் பேச்சு வாங்க வேண்டியிருக்கும்.

அது இப்படி இருக்கும்

'வாயில்லாப் பிராணி, அது என்ன செய்யும்?'

'அதை அடித்து, ஏன் பாவத்தைச் சுமப்பான்?'

உம்மா அதிகாலையிலேயே சுபஹுத் தொழ எழுந்து விடுவார். பூனையும் சோம்பல் முறித்துக் கூட நிற்கும். கதவு திறந்ததும் முதல் ஆளாக வெளியேறும். 'வெளிக்கு' எங்கே போகிறார் என இதுவரை எங்களுக்குத் தெரியாது. கண்ணில் தெரிய இதுவரை எந்த அசிங்கமும் பண்ணியதில்லை அவர்.

எங்களுக்கு காலையில் 'ரீ' கிடைக்க முன்னரே, அவரது கிண்ணத்தில் பசும்பால் ஊற்றப்பட்டு விடும். பின்னர், இரவில் மீந்தது போடப்படும். அனைத்தையும் உண்டபின்னர் விளையாடத்துவங்கிவிடும். பாயும், நடனமாடும், 'கொசு ஏதும் கண்முன் பறந்து சீண்டுகிறதோ' என நினைக்கும்படியாக அதன் நடனமிருக்கும். பின்னிருகால்களும் நிலத்தில் படிந்தபடி முன்னோக்கி வர, முன்னிருகால்கள் உயர்ந்த முகத்தின் முன்னே வெறும் காற்றை அறைந்தபடி நடைபயிலும். ஆஹா... என்ன அழகு அது. இந் நிகழ்வுகள் ஒரு தினமும் தவறியதில்லை. எல்லா நாட்களையும் இவ்வாறு உற்சாகமாகவே அது வரவேற்கும்.

உம்மா, அல்லது ராத்தா மதியம், பகல் சமையலுக்கென அரிவாள்மணையில் உட்காரும்போது, கூடவே வந்து அவர்களின் முகம்பார்த்தபடி சற்றே தூரமாக உட்கார்ந்துகொள்ளும். ஒரு முறை கூட மீன் அல்லது இறைச்சியைக் கொள்ளை கொண்டதில்லை. பின் கால்மடிந்து அதன் மேலாக உடல் இருத்தி, முக்கோண வடிவில் உட்கார்ந்திருக்கும். தன் பங்கு எதுவென அதற்குத் தெரிந்திருந்தது. அதுவரை மௌனமாக விழிவைத்துக் காத்திருக்கும். சில வேளைகளில் கொஞ்சக் காகங்கள் அவ்விடம் வரும். மதிலின் மேலிருந்து கரையும். உடனே பூனை உடல் சிலிர்க்க எழும். முன் கால்களை உயர்த்தியபடி பாய்ந்து எழும்பும். அதற்குரிய உரிமைப்பிரச்சினை அது.





தனக்குரியவர்களிடம் வேறொருவர் பாத்தியதை கொள்வதைச் சகியாத குணம். அங்கிருப்பது ராத்தாவானால் அவருக்குக் கோபம் வந்து விடும். ராத்தா, 'இஞ்ச, ஆளப்பாரன்' என அதட்டுவார் பின்னர் வெட்டிய குடலையோ, கொழுப்பையோ காகத்தின் அருகாக உயர்த்தி வீசுவார். பூனை சாதுவாகிவிடும். வீறிடாது, துரத்தாது. மௌனமாக தன் பழைய இடம் நோக்கி வரும். ராத்தாவின் முகம் பார்க்கும். ராத்தாவுக்குப் பாவமாகப் போய்விடும். அதன் அருகாக வேலை முடியாமலேயே உள்ள மீதியைப் போடுவார். தலை தாழ்த்திச் சாப்பிடும்.

வீட்டை விட்டு ஒவ்வொருத்தரும் வெளியேறும் போது, வீட்டின் முன் கதவில் நிலையருகே ஓரமாக உட்கார்ந்திருக்கும். 'சொல்லிவிட்டுப் போவேன்?' என்கிறாப் போல முகம் பார்க்கும். நான் 'ஹாய்' என்றபடி போய்விடுவேன். எனது கடைசித்தம்பி அப்படியல்ல. உயர்தர விஞ்ஞானப் பிரிவில் இப்போதுதான் சேர்ந்திருந்தான். எண் சோதிடம், சாஸ்திரம் போன்றவற்றை நம்புகிறவன். அத்துடன் பூனையின் மீது அவனுக்குப் பெரிய ஈடுபாடுமில்லை. உம்மாவுக்காக பொறுத்துக்கொண்டிருக்கிறான் போலிருக்கிறது. ஒவ்வொரு காலையும் வெளியேறும் போது புலம்பியபடியே செல்வான்.

'ம்... இதுல முழிச்சிட்டுப் போனால், உருப்பட்டாப் போலதான்.'

கை வீசி அதனை விரட்டுவான். பூனை அசையாது. 'முடியுமானால் தொடேன்' என்பது போலிருக்கும் அது. 'உம்மா இருக்க பயமேன்' என்பதாயிருக்கும் அதன் செய்கை.

பகல் சாப்பாட்டிற்கென எல்லோரும் உட்கார்ந்திருப்போம். பூனையும் தரையில் சற்றுத்தூரமாக எங்களைப் பார்த்திருக்கும், உம்மா அதன் பீங்கானில் எங்களுக்குப் பரிமாற முன்னரே, எல்லாம் வைத்துவிட்டு வருவார். பூனையும் நாங்களுமாகச் சாப்பிடுவோம். அன்று ஒருநாள் இவ்வாறு சாப்பிடும்போதுதான் தம்பி சொன்னான்,

'சேர்' சொன்னார், பூனையக் கிட்ட எடுக்கவே போடாதாம். காச நோயப் பரப்புறதாம் அது'

உம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டது. சற்று உரக்கவே சொன்னார், 'மனுசன விடவாடா அது நோய்க்காவி. காசநோய்க்காரன் பூனைய ஏன் அண்டனும். பூனையத் தொட்டா முடி கையில ஒட்டும். கிருமி இருந்தாலும் ஒட்டும்தான். கையைக் கழுவிக்கோ. இல்ல குடலப்

புண்ணாக்கும். அத விட்டுட்டு இது என்ன பேச்சு. காச நோய்க்காரனுக்கு வைத்தியம் பார்கிறத விட்டுட்டு, பூனைய வதைக்கிறது என்ன நியாயம்.?'

தம்பி எதுவும் பேசவில்லை. உம்மாவுக்கு அப்போதும் மனது ஆறவில்லை போலும். மேலும் சொன்னார்.

'முஹம்மது நபி (ஸல்) அவங்கட ஒரே போர்வையில பூனை தூங்குது. தொழுகைக்கு நேரமாயிட்டுது. தூங்குற பாகத்த விட்டுட்டு, மிச்சத்தக் கிழிச்செடுத்துத் தொழுதாராம் தெரியுமா?'

தம்பியால் மேலும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. சத்தமிட்டுச் சொன்னான்.

'சரி... சரி... இனி ஒருக்காலும் ஒங்கட பூனையைப்பத்திப் பேசமாட்டன்...'

பந்தி சிரித்துவைத்தது. உம்மா இது மாதிரி நிறைய பூனை சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சொன்னதுண்டு, அது இவருக்குத்தான் என்றில்லை. மூத்தராத்தாவே ஒரு முறை பேச்சு வாங்கியிருக்கிறார்.

முட்டைக்கும், சில்லறைத் தேவைக்குமாக ராத்தா இருபது கோழிக்குஞ்சுகளை வாங்கினார். வளவின் பின்புறமாக அவை விடப்பட்டன. வாங்கிய முதல் இரவே ஒரு குஞ்சு காணாமல் போயிற்று. அடுத்த நாள் இன்னொன்று... ராத்தாவால் தாங்க முடியவில்லை. விடாக்கண்டனாயிருந்து - ஐந்தாம் நாள் திருடனைக் கண்டுபிடித்தார். எல்லாமே இந்த வெள்ளைப் பூனையின் வேலைதான். உடனே உம்மாவிடம் வந்து சத்தமிட்டார்.

'இத, எங்கேயாவது கண்காணாத இடத்த விட்டுட்டு வரணும். ஐந்து கோழியையும் இதுதான் சாப்பிட்டிருக்கு'

உம்மாவுக்கு உறைக்கவேயில்லை. வெகு இயல்பாகவே பதில் சொன்னார்.

'அதுர இயல்பு அது. அத ஏன் கோபிக்கிறாய்?'

'என்னம்மா நீங்க சொல்றீங்க?'

'கோழி வளர்க்கிறண்டா நாமதான் கூடு கட்டி வளர்க்கணும். பூனையின்ர அசல், கோழியத் தின்கிறது, நாம பிழை செய்திட்டு, அத ஏன் தண்டிக்கனும்?'





'என்ன கதை இது?' ராத்தா அலுப்புடன் சொன்னார்.

'கதைதான். ஒரு சூபி மகான்ர கதை இருக்கு. பிறந்தவுடனேயே ஒரு பூனைக்குட்டியை தூக்கிவந்து வளர்த்தாராம். மாமிசமே அதுக்கு காட்டல்ல. பாலும் பழமும், விதையும்தான் உணவு. பூனைக்கு, குர்ஆன் ஓதுறப்ப விளக்கப்பிடிச்சிட்டிருக்கப் பழக்கிறார். மூணு வருஷம் போக பூனை பெருத்துட்டுது. மனுசிக்கிட்ட சொன்னார், ஓதிட்டு இருக்கிறப்ப எலி ஒண்ட விடச் சொல்லி. எலியப் பூனை பார்த்ததுதான் தாமதம், விளக்க விட்டுட்டு, பாய்ஞ்சி புடிச்சிச்சாம்'

இதைச் சொன்ன போது உம்மாவின் முகத்தில் மந்தகாசம் தெரிந்தது. ராத்தாவுக்குப் பேச்செழவில்லை. அவர் மட்டுமல்ல நாங்கள் யாருமே உம்மாவுடன் மல்லுக்கு நின்றதில்லை. வாப்பா காலமான பின்னரும் எங்கள் குடும்பத்தைத் தூக்கி நிறுத்துகிற தூண் அவர். வாப்பாவின்மூலம் ஊட்டப்பட்ட வாசிக்கும் பழக்கத்தை ஒரு போதும் அவர் நிறுத்தியதில்லை. சமயப் புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் எதையும் விட்டுவைத்ததில்லை. பொழுது கிடைக்கிற போதெல்லாம் வாசித்தார். அதனால் தான் இத்தனை கஷ்டங்களுக்கிடையிலும் எங்களைப் படிப்பிக்கவைக்கிற துணிவைப் பெற்றிருக்க வேண்டும். எங்களுக்கு அவரிடம் நிறைய மரியாதை, அன்பு உள்ளது. எனவே முரண்பாடுகள் முகிழ்த்ததில்லை. அவர் வளர்ந்த - வாழ்கிற எல்லா இடங்களிலுமே அன்பான மனிதர்கள் கிடைத்தார்கள். அப்படி நேசிக்கத்தெரிந்த மனது அவரிடமிருந்தது. வீட்டின் மொத்த மகிழ்ச்சிக்கும் மூல வித்தாக அவரே இருந்தார். வீடு உறவினர் வருகையால் என்றுமே நிறைந்திருக்கும்.

உம்மாவின் மாலைப்பொழுது விஷேடமானது. அவரது சகபாடிகள் ஒன்றுசேர்கிற நேரமது. ஆண்கள் ஓய்வு வேண்டி, அல்லது அலுவல் நிமித்தம் வீட்டில் தங்காத சமயமுமது. முன் வராண்டாவில் பாய் விரித்து, சம்மணமிட்டு எல்லோரும் உட்காருவர். பெண்கள்தான், நடுவே வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, கராம்பு, புகையிலை நிரம்பிய வட்டா இருக்கும். குசல விசாரிப்புக்களுடன் கதை துவங்கும். நாங்கள் அதை 'வட்டாக் களரி' என்போம். அந்த களரியில் எங்களது வெள்ளைப் பூனையும் ஒரு அங்கத்தினன். அது உம்மாவின் அருகாக, சுவரில் பின்புறம் பட, பின்கால் மடிந்து உட்கார்ந்திருக்கும். சபை இடையிடையே அதனையும் பற்றிப் பேசும்.

'பாரன் அவர, ஒரு பயமுமில்லாம எப்படி இருக்காருண்டு?'

'என்ன விளங்குதுண்டு, இப்படி முகத்தப் பார்த்திட்டு இருக்கோ தெரியல்லியே...'

'சபீலாட கோழியத் திண்டுட்டு, இன்னும் அங்க போறார்தானா?'

பூனை எதற்கும் பதில் சொல்லாது. இடையிடையே முன் காலுயர்த்தி முகத்தை தடவும். மற்றப்படி அவர்களைப் பார்த்தபடியே இருக்கும்.

இந்த வட்டாக் களரியில் எனது தம்பிக்கு சுவாரஸ்யமிருந்திருக்க வேண்டும். இடையிடையே அருகில் கிடக்கும் கதிரையில் உட்கார்ந்தபடி கேட்டுக்கொண்டிருப்பான். உம்மா முன்னர்,

'தம்பி, வாயைப் பார்த்தவன் வாழ்விழந்தான் தெரியுமா? போய்ப் படி, இல்லாட்டி விளையாடு பார்ப்பம்.' என்பார், இப்போது அப்படிச் சொல்வதில்லை, பதிலாக,

'வளர்த்த பூனை முகத்தைப் பார்க்கிற மாதிரி, இங்கு என்ன வேலை உனக்கு?' எனச் சொல்லத் துவங்கினார். தம்பிக்கு இது போதுமானதாயிருந்தது. போயும் போயும் இந்தப் பூனையுடனா நம்மை ஒப்பிட்டுப் பேசுவது என்ற வேக்காடு போலும், அதன் பின் ஒருபோதும் அங்கு இருப்பதில்லை அவன்.

மூன்றாவது ராத்தாவுக்குத் திடீரென திருமணம் கைகூடி வந்தது. மாப்பிள்ளை மாமி மகன்தான். அவராகவே பெண்கேட்டு விட்டிருந்தார். வீடு கல்யாணக் களையைக் கட்டிற்று. ஏனெனில் ராத்தாவுக்கும் அவரில் விருப்பமிருந்தது. உம்மா, 'காதல்' என்றார். ராத்தா, பிகுபண்ணியபடி மறுத்தார்.

'சே... அப்படி ஒன்றுமில்லை'

உம்மா 'பூனை கண்ணை மூடிட்டுப் பால் குடிச்சாப் போலதான்' என்றார் ராத்தா மௌனமாய்ப் போனார். முகம் வெட்கத்தில் சிவந்து போயிற்று அங்கிருந்த தம்பி முணு முணுத்தான்.

'ம்... இதுக்கும் அந்தப் பூனைதானா?'

எங்கள் பூனையின் நிலைமை இப்போது ஓரளவு சங்கடமாயிற்று. விருந்தினர்களில் அனேகர் அதற்கு அந்நியர்களாயிருந்தனர். அவர்களை





விட, கூட வந்த சிறுவர்களின் சேட்டைகளைத்தான் அதனால் தாங்க முடியவில்லை நீண்ட நேரப் பொழுதுகளை குசினியில் கழித்தது. உம்மா அத்தனை அலுவல்களிடையேயும் அதற்குப் போசனையூட்ட மறக்கவில்லை, சுத்தம் செய்யாது இருந்ததில்லை.

திருமணம் நடந்தேறிற்று பூனை புதிதாக வந்த மச்சானுடன் வெகு சீக்கிரமே ஒட்டிக் கொண்டது. அவரும் நல்ல புலால் உண்ணி. சாப்பாட்டின் மீதிகளை 'இந்தாடா' எனச் சொல்லியபடி அதன் தட்டில் போடுவார். அதற்கு வாலாட்டவராது. அதற்கு எல்லாமே கண்கள்தான். அந்தக் கணங்களில் கண்கள் சற்றே விரிந்து, பின் சுருங்கும். விசுவாசத்தைச் சாப்பிடுவதில் காட்டும். மீதியின்றி உண்டு முடிக்கும். அவரது கால்களில் உடம்பு பட உரசுவதில் தெரிவிக்கும். வீட்டில் கல்யாணக் களை முடியவில்லை. மச்சான் புதிதாக ஒரு சைக்கிள் வாங்கினார். நாங்கள் வளவின் பின் மதிலைச் சுவரெழுப்ப செங்கல், சீமெந்து எல்லாம் வாங்கினோம். வீட்டின் முன் வளவில் மணல் கொட்டிக் கிடந்தது. பூனைக்கு மணலில் குளிப்பது மேலதிக விளையாட்டாக ஆயிற்று. சிலவேளை சாப்பாட்டு வேளையிலும் வராதபடி அங்கு கிடக்கும். மணலால், புதுச் சைக்கிள் தூரமாகவே நிறுத்தப்பட வேண்டியதாயிற்று. கறுப்புநிற, லுமாலா சைக்கிள் அது.

மச்சான் காலை எழுந்தாலும், சைக்கிளைத் துடைப்பது வழக்கம். யாருக்கும் இரவல் தர மாட்டார். 'மனைவி, வாகனம், வீடு' மூன்றையும் இரவல் கொடுக்கக் கூடாது என்பார். மிகவும் சுத்தமாக வைத்திருந்தார். இரு சக்கரங்களின் நடுவேயும் ஊத்தை அகற்ற பல வர்ணங்களாலான தும்புப் பந்து போட்டிருந்தார். ஒருபோதும் சுவரில் சாய்த்து வைத்ததில்லை. நிறுத்தியில் கம்பீரமாக நிற்குமது. அதுதான் பெரிய சோகத்தை எங்களுக்கு ஆக்கிற்று. அன்றைய தினத்தை எங்களால் மறக்க முடியவில்லை. பகல் சாப்பாட்டிற்கென எல்லோரும் கூடியிருந்தோம். பூனை வரவில்லை. மணல் அல்லது குசினியினுள் இருக்குமென நினைத்து சாப்பிடத் துவங்கினோம். அப்போதுதான் மூத்த ராத்தாவின் குரல் கேட்டது.

'இஞ்சப் பாரு, இந்தப் பூனை பார்க்கிற வேலைய, புத்தாப் புது சைக்கிள இப்படியா செய்றது...'

மச்சான் கதிரையை பின்னகர்த்தி படாரென எழுந்தார். கை கூடக் கழுவவில்லை. விரைவாக வெளியே வந்தார். பூனை சைக்கிளின் தும்புப் பந்தை உருவிக் கொண்டிருந்தது. முன் சக்கரம் முடிந்து, பின்புறம்

முடியும் தறுவாயில் இருந்தது. மச்சானுக்கு கோபம் உச்சியில் நின்றாடியது. திரும்பி குசினியினுள் வந்தவர் நீளமான விறகு ஒன்றைக் கையிலெடுத்தார். பூனையை நெருங்கினார். கை உயரே கிளம்பிற்று. பூனை மெதுவாக பின்வாங்கியது. சைக்கிளில் முதுகு இடற, அது தரையில் விழுந்தது. பூனை ஓடவில்லை. மச்சானின் முகம் நோக்கிற்று. எங்கள் எல்லோருடைய மனமும் பூனை ஓடிவிட வேண்டுமே என யாசித்தன, துடித்தன.

'படீர்' சரியாகப் பூனையின் பிட்டப் பகுதியில் ஓங்கி விழுந்தது அடி. பூனை ஒரு முறை கீழே உட்கார்ந்து எழுந்தது. தூரமாய் ஓடிற்று. மணலின் மேற்பரப்பில் நின்று திரும்பிற்று. மச்சானின் முகத்தைச் சற்று நேரம் பார்த்தபடி இருந்தது. அதன் கண் கலங்கியிருக்கிறதா? தெரியவில்லை. ஆயினும் கண்ணில் நீர்ப்பரப்புத் தெரிவதாகவே உணர்ந்தேன். மச்சானுக்கு இன்னமும் கோபம் தீரவில்லை.

'படவா..., வேலையைப் பாரு' என்றபடி அதன் அருகானார். யாரும் வாய்திறக்கவில்லை. பூனை ஓடத் துவங்கிற்று செங்கல்லில் இடறி எழுந்து, வேலியில் நுழைந்து ஓடிற்று. நான் அதன் பின்னே போய், அது போன வழி பார்த்தேன்.

ஒரு நாள் போனது. பூனை வரவில்லை, உம்மா யாருடனும் பேசவில்லை. சாப்பிடவும் இல்லை. இரு நாளாயிற்று. அப்போதும் பூனை வரவில்லை. உம்மா கொஞ்சமாய்ச் சாப்பிட்டார். சில வார்த்தைகள் பேசினார். மச்சான் இதை எதிர்பார்க்கவில்லை. அவருக்கு இப்போது வெட்கமாகப் போயிற்று. பூனையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் மௌனமாய்த் தலை தாழ்த்தினார். உம்மா, 'அது வந்துவிடும், வந்து விடும்' என அடிக்கடி சொன்னார். ஆனால் பூனை இன்னமும் வரவில்லை. வளவின் பின்புற கிடுகு வேலியை மதிலாக்கியாயிற்று ஆயினும் பூனை போன இடத்தில் ஒரு துவாரம் இட்டு வைத்திருக்கிறோம். ஏனெனில் உம்மாவின் நம்பிக்கை பொய்த்து விடக் கூடாது. அந்த நம்பிக்கைதான், அவரைப் பழைய ஆளாக்கி வைத்திருக்கிறது.





# இருக்கும் இடத்தை விட்டு...

'என்ன, மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிவிட்டதா?'

அவன் இதற்குப் பதில் சொல்லவில்லை. கதிரையை அதன் அருகாக நகர்த்தி உட்கார்ந்தான். நள்ளிரவு நேரம். வீட்டின் முன் 'போர்டிகோ' வில் தனியாக, உட்கார்ந்திருந்தான். வெளி விளக்கு எரியவில்லை. நிலவின் முழு வெளிச்சம் வெளியே பரவிக்கிடந்தது. வழமையாகவே அவன் தூங்க, நேரம் மூன்றாகிவிடும். இன்று வாசிக்கவில்லை, எழுதவுமில்லை. அவனது மனம் அமைதியின்றித் தவித்தது. அவனின் நிலை கண்டு 'அது'வும் பாவப்பட்டிருக்க வேண்டும். நெடுநேரமாக எட்டடி, பத்தடி செவ்வக சிமென்ற் பரப்பில், கைகளை வயிற்றில் கட்டியபடி உலாவியபின், பிரம்புக் கதிரையை நகர்த்தி அவன் உட்கார்ந்ததும் அது கேள்வி கேட்கிறது. அதற்குப் பதில் சொல்லவும் விருப்பமின்றி மௌனமாயிருந்தான். அது என்ன நினைத்ததோ தெரியவில்லை, பேசாமல் அவனையே நோக்கியபடி இருந்தது. சிலவேளை அவனது உணர்வுக்கு மதிப்பளிக்க வேண்டி, மௌனமாயிருக்கக் கூடும்.

இங்கு 'அது' என்பது அவரை மரத்தை. உண்மையில் அவன் அதன்மீது வைத்திருக்கிற மரியாதை நிமித்தம் 'அவர்கள்' என விழிப்பதுதான் பொருத்தமானது. மனிதர்களை விட மேலானதாக அதைக் கண்டான். இந்த ஒரு மாதத்தினுள் அவரை அவர்களிடமிருந்து அவன் பெற்ற போதனைகள், சமாதானங்கள், அரவணைப்புகள் அனந்தம். இப்படிப் படாரென இதனைச் சொல்வது அவனைப் பைத்தியமாக நமக்குக் காட்டும். ஆதலால் முதலிலிருந்து...!

அது, அவன் விதை நட்டு வளர்த்ததல்ல. சுமார் அரையடி உயரம் வளர்ந்த பின்னரே அதனை முதன் முதலில் அவதானித்தான். வாசலின் முன் மதிலிலுள்ள தண்ணீர்க் குழாயடியில், புற்களுடன் சேர்ந்து அதுவும் வளர்ந்திருந்தது. அதன் இலைப்பரப்பு புற்களை விட்டும் வேறானதாயிருக்க, இனம் கண்டு வேறாக்கி நட்டான். பாத்தி அமைத்தான். நாளாந்தம் தண்ணீர் ஊற்றினான். அது ஈராண்டுப் பயிராயிருக்க வேண்டும். நெடு நெடுவென வளரத் துவங்கிற்று. வீதிச் சுவருக்கும், முன்திண்ணைக்குமிடையே அது இருந்ததால் தினமும் அவனால் அதனை அவதானிக்க முடிந்தது. அதன் ஒவ்வொரு இலையுமே அவனறிய வளர்ந்தவைதான். அதற்கு நல்லதொரு மருத்துவனாக இருந்தான். இலையில் மஞ்சள் விழுகிறதாயின் நைதரசன் குறைவு எனக் கண்டான். நடு நரம்புகள் வெளிறியிருப்பின் பொசுபரசும், பொட்டாசியமும் தேடினான். எதற்கும் மருந்து வாங்கக் கடைக்கு ஓடவில்லை. வெட்கம் தொலைத்து, மாட்டின் சாணம், கோழியின் மீதி என சாக்கினுள் கொண்டு வந்து கொட்டினான். பட்டதாரி வாத்தியார் அங்கு காணாது போயிருந்தான். அவரை கூட அவனை ஏமாற்றவில்லை நாலரையடி உயரமாய் வளர்ந்து, அகலக்கிளை பரப்பி 'போதுமா இது?' என்பதாகச் செழித்து நின்றது. இதனால் தாழ்வாரத்தின் இடைப்பரப்பு இரண்டாகப் பிரிந்து, போக்குவரத்தே தடைப்பட்டது. அதனால் அவன் கவலை கொள்ளவில்லை. கிளைகளின் பாரம் தாங்க மாட்டாதே என்று, கம்பு நட்டு, தூண்களூன்றினான்.

அவனது மனைவி ஜெஸ்மினுக்கு இந்த நிகழ்வுகள் ஆச்சரியகரமானவை. எந்தச் செடிக்குமில்லாத மவுசு, இந்த மனிதரிடம் இதற்கெப்படி ஏற்பட்டது என்பதில் சம்சயம் இருந்து கொண்டேயிருக்கிறது, இருக்கும். ஜெஸ்மின் வாசல் கூட்டு முன்னரே, அவரையின் உதிர்ந்த இலைகளை ஒவ்வொன்றாகப் பொறுக்குவான். ஒரு இலை சுருண்டு கிடந்தால், துடித்துப் போய் விடுகிறான். கூரான கத்தியெடுத்து கணநேர வீச்சில் அதனைக் களைகிறான். ஏனெனில் கூடிய நேர மெடுப்பது, அதன் வேதனையை அதிகரிக்கச் செய்யுமென நம்பினான். பின், அந்த இலையை வேறாக்கி, தூரத்தே வெயிலில் காய வைத்து எரிக்கிறான். பச்சையாக எரிப்பதில் மன அமைதி குலைந்தான்.

அவனின் அந்தி நேர, பின்னிரவுப் பொழுதுகள் அதன் பார்வையிலேயே கழிந்தன. அதன் அருகாமை ஒரு ஆறுதலை அவனுக்கு அளித்தது. அதன் பசுமை மனதில் மலர்ச்சியை ஏற்படுத்தியது. அதனில் பட்டு வருகின்ற காற்றில் சுகந்தம் உணர்ந்தான். மன அமைதி குலைகின்ற பொழுதுகளில், அதன் அருகாமை தேறுதல் அளித்தது அவனுக்கு.





அதனருகாக நிறைய வாசிப்புகளை மேற்கொண்டான், ஓரளவு எழுதவும் செய்தான். ஒன்றுமில்லையானால் அதனைப் பார்த்தபடியே உட்கார்ந்திருப்பான். ஆக, அவனது பொழுதுகள், 'அவரையும் - அவனுமாகவே' கழிந்தன.

வீடு தேடி வரும் நண்பர்களை அங்கேயே உட்காரவைத்து அளவளாவத் துவங்கினான். ஒரு நாள் பேச்சினிடையே நண்பன் சபா கூறினான், 'நல்ல செழிப்பாயிருக்கிறதே.' அவனுக்குச் சீலிரென்றது. கண்பட்டு விடுமோ என அஞ்சினான். சபாவைப் பார்த்துக் கெஞ்சுதலுடன் கேட்டான், 'எங்கே, இன்னொரு முறை அதனைச் சொல்' 'நல்ல செழிப்பாயிருக்கிறது, இல்லையா?'

அவனுக்கு அப்போதுதான் அமைதி கிடைத்தது. இதன் பின்னர், முன் 'வராண்டா'வில் யாருடனும் அவன் உட்காருவதில்லை. உள் வரவேற்பறையில் வைத்துப் பேசியனுப்புவான். நாட்கள் செல்ல, அவரையைக் காணாத நாட்களில், மனது ஒரு வெறுமையை அடைவதாக உணர்ந்தான். இதனால் வெளியே தங்குகின்ற பொழுதுகள் வராதபடி பார்த்துக் கொண்டான்.

சென்ற வருடம், ஒக்டோபர் இரண்டாம் திகதியை அவனால் ஒரு போதும் மறக்க முடியாது. அவன் அவரையின் இருப்பிடம் வரும் போது இரவு பதினொரு மணி. எட்டரைக்கு ஜெஸ்மினுடன் வாய்த்தர்க்கம் ஆரம்பித்திருந்தது. இருவரும் ஆழமான, மனதைக் காயப்படுத்துகின்ற பேச்சுக்களைப் பரிமாறியபின், தங்கள் மீதே வெட்கம் கொண்டு, தங்களை மலமாக உணர்ந்து அடங்க நேரம் பதினொன்றாயிற்று. ஜெஸ்மின் கடைசியாக, 'நீ ஆண்மகனேயல்ல' என்றதும், சகலதும் உடைந்து சுக்கு நூறாகினான், வெறும் வார்த்தையில், இவ்வளவு விஷம் தடவ முடியுமா என மலைத்தான். மனது குமைந்தான். அவள் படுக்கையறையுள் கதவைத் தாளிட்டபடி புகுந்தாள். விசும்பி அழுகின்ற ஒலிகேட்டது.

அவன் தாழ்வாரத்தில் பிரம்பு நாற்காலியினுள் தஞ்சமடைந்தான். யோசனை பிடித்துக் கொண்டது. ஏற்கனவே ஒன்பது நாட்களாக முகம் பாராதபடி உள்ளே கொஞ்சம் கொஞ்சமாகப் புகைந்திருந்த நெருப்பு இன்று கனலாக வெளியேறிற்று எனக் கண்டான். இருவரது படிப்பும், அதிமேதாவித்தனமும், சுய ஈகோக்களை விட்டுக் கொடுக்கத்தடை செய்ய, போர் மூண்டு விட்டதாக அறிந்தான். ஜெஸ்மினுக்கு ஒரு ஆணை, எங்கே, எப்படித் தாக்கினால் அடிவேர் விழ வீழ்த்த முடியுமெனத் தெரிந்திருந்தது. அவனுக்கு வாழ்வே நரகமாயிற்றென்ற பயமெழுந்தது.

சிகரட்டை ஒன்றின் மேலொன்றாகப் புகைத்தான். மனசு மறுகிற்று. புகைந்தெழுந்தது. 'சே... இவ்வளவுதானா?..' என ஆர்ப்பரித்தது. அப்போதுதான் அந்த சப்தத்தைக் கேட்டான்.

'அஸ்வர், அழுகிறாயா?'

இந்த நடு இரவில் மரத்துள் மறைந்திருப்பது யார்? அவனுக்கும் தெரிந்து போயிருக்குமே. மனதில் அசூசையும், பயமும் எழுந்தன. ஆயினும் கேட்டான்.

'யாரது?'
'நான்தான், இலகுமினோசாரம்'
'என்ன உளறல் இது. யாரது?'
'நீதான், உனது மகளுக்குச் சொல்லிக் கொடுத்தாய் அவரையின் பெயர், இலகுமினோசாரமென்று'
'பகிடி போதும். வெளியே வா'
'பகிடி இல்லை. நான்தான்'
அவன் திடுக்கிட்டான். ஆச்சரியமடைந்தான். மரம் பேசுமா? ஆவல் எழுந்தது. விளக்கைப் போட எழுந்தான்.
'விளக்கைப்' போடப் போகிறாயா?'
'ம்...'
'சரி'

வெளிச்சத்தில் மரத்தைப் பார்த்தான். எந்த மாற்றமுமின்றி அமைதியாக அப்படியே இருந்தது. 'இப்போது இதுதானா பேசியது?' என்ற சந்தேகம் அவனில் எழுந்தது. அவன் கேட்டான்,
'எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது, நீ பேசுவது?'
'ஏன்?'
'தாவரம், எங்கேயாவது பேசுமா?'
'க்ளுக்' கென நீரலைகள் தளும்புகின்ற சப்தம் கேட்டது.
'சிரிக்கவும் செய்கிறாயா?'
'நீ மடையன். நீயாகவே சில பிம்பங்களைச் சிருஷ்டித்து வைத்து விட்டு, அதற்கு ஆதாரமானவற்றை மட்டுமே நம்பவும் செய்கிறாய். உண்மை என நிறுவியவற்றைக் கூட ஓரம் கட்டுகிறாய்'
அதனது பேச்சு அவனில் சினத்தை எழுப்பிற்று
'ஏய், இங்கே பார், முதலில் இந்த முட்டாள், நீ என்பதையெல்லாம் நிறுத்து, மரியாதையாகப் பேசுவதற்கென்ன?'





'என்னால் அது முடியாது. நான் உனது உணர்வுகளுடன் ஒன்றித்திருப்பவன். அங்கு மரியாதைக்கெல்லாம் சாத்தியமேயில்லை.' அவன் சிரித்தான். சற்று நேரத்தின்பின் கூறினான்.
'சரி அப்படியே இருந்து கொள். எப்படி உன்னால் பேச முடிகிறது'
'நான் தான் சொன்னேனே, நீ முட்டாளென்று. என்னருகே இருந்துதான் நீ ஞானியும் - புறாக்களும் சம்பவம் வாசித்தது. அதைவிட நாயின் குணம் தெரியுமா உனக்கு?'
'ஞாபகமில்லை'
'இது, நல்ல பதில். வீட்டு நாய் முன் தாழ்வாரத்தில் படுத்திருக்கிறது. கள்வன் பின் மதிலால் வருகிறான். அவனைக் காணாத போதும், அவனது உணர்வலை வீச்சைப் புரிந்து, குரைத்தபடி விரட்டுகிறது. கண்டிருக்கிறாயா?'
'ம்... அதனால்...'
'இன்னொன்று கேள், நீ முன்னர் சந்தித்தே இராத நபரைக் கண்டதும், ஆசை கொள்கிறாய், அல்லது எரிச்சல் கொண்டு விலகி ஓடுகிறாய். இந்த உணர்வு அலைகளின் கவர்ச்சிதான், தலைவர்களையும் ஆக்குவது. இது எல்லாமே நீ வாசித்ததுதான்...'

'ஞாபகம் வந்து விட்டது. அது என்ன ஞானியும் - புறாக்களும்'
'ஞானி, தவத்தில் உட்காரும் போது, புறாக்கள் உடம்பெங்கும் வந்தமருவது வழக்கம். ஒருநாள், பேரப்பிள்ளை, ஒரு புறா எடுத்து வரும்படி சொல்ல, 'ஓம்'பட்டு வந்தவர் அருகே, அன்று ஒரு புறாவேனும் அண்டவில்லை. ஞானியின் உணர்வு வீச்சு(க்)கள் புறாக்களுக்கு அத்துப்படி'
'சரி, அது எப்படிப் பேசும் ஆற்றல்?'
'அங்கும் அவைகள் பேசின. ஆனால் அறிவாரில்லை. அல்லது, உணர்வுகள் ஒத்தவராக எவருமில்லை'

அவன் மீண்டும் குழப்பமுற்றான். 'என்ன சொல்கிறது இது. உணர்வுகள் இழைந்தபின் எதுவும் துலங்குமென்றா? பேசுவதற்கென்று குரல்நாண், பற்கள், நாவு என இத்தனை உபகரணங்கள் தேவைப்படுகின்ற போது இது சாத்தியமானதா? இது என்ன பேதமையான உளறல் மீளவும் சிரிக்கிற சப்தம் கேட்டது.
'இப்போது எதற்காகச் சிரிக்கிறாய்?'
'உனது யோசனையை நினைத்துத்தான்'
'அதில், சிரிக்கும்படி என்ன இருக்கிறது?'
'இந்த உண்மையை நான் சொல்வதற்காக நீ கோபிக்கக் கூடாது. நீ தனிமை விரும்பி. அன்புக்கு ஏங்குகிறவன். ஆயினும் பெரிய

மேதாவித்தனமான நினைப்புகளால், மற்றவருடன் கீழிறங்கிப் பழக முடியாதவன். ஆயினும் மனிதன் சமூகப் பிராணியல்லவா? எனவே உனக்கும் உன்னைப் பகிர்ந்து கொள்ள ஒரு செல்லப் பிராணி தேவைப்பட்டிருக்கிறது...'

இடையே ஊடறுக்க அவனுக்கு எண்ணமெழுந்தது. அதன் வார்த்தைகள் கோபமூட்டின. எனினும் முடியட்டுமென மௌனமாயிருந்தான். அவரை மேலே பேசியது.

....'அது நானாக வந்து வாய்த்தேன். உனது அன்பான கவனிப்பு, என் மீதான பற்றுதல் எல்லாமே உனது இடைவெளியை நிரப்புவதற்கே. நானும் உன்னுடன் ஆட்பட, உணர்வு ஒன்றித்தாயிற்று. ஆக, இனிப் பேசுவது ஒன்றும் சிரமமானதல்ல, ஏனெனில் நீயே, நான்...'

அவன் சரியான பதில் கிடைக்காததில் ஆயாசமுற்றான். அவனது அகத்தை அது கண்முன் திறந்து வைத்ததில் கோபமே எஞ்சிற்று. 'நீ, நாசமாய்ப் போக...' என மனதுள் திட்டினான்.

'அப்படியென்றால் என்ன?, இதுவரை நீ வாசிக்கவோ, பேசவோ செய்ததில்லை. ஆனால் கூடாத வார்த்தை என்று தெரிகிறது'

அவன் மௌனமானான். அவனுக்குக் குழப்பமே மிஞ்சி நின்றது. கதிரையை பின்னே தள்ளியபடி எழுந்தான், தூங்கப் போனான். அவனுக்குத் தூக்கமற்ற இரவு அது.

படுக்கையை விட்டு காலையில் எழுந்த போது மேஜையில் தேனீர் இருந்தது. ஜெஸ்மின் இன்னமும் கோபத்துடனேயே இருந்தாள். தேனீர் ஆறிக்கிடந்தது. அதை அப்படியே விட்டு விட்டு எழுந்தான். காலைக்கடன் முடித்து வெளிக்கிட்டான். சைக்கிளை தள்ளிக் கொண்டு வெளியே வர,
'குட்மோர்னிங் அஸ்வர்' என்றது அது.
'குட்மோர்னிங்' என்றான்.
'குட்மோர்னிங் டடா' என்றாள் மகள் சிரித்தபடியே. அவரை, வணக்கம் சொன்னது மகளுக்குக் கேட்டிருக்குமோ என்ற சந்தேகம் வந்தது. எதுவும் பேசாமல் வீதிக்கு வந்தான். மகளை சைக்கிளில் ஏற்றினான். மிதிக்க ஆரம்பித்தான்.





அன்று பாடசாலையில் அவனால் சரியாக இயங்க முடியவில்லை. அவரையின் நினைப்பிலேயே இருந்தான். அஸ்வர் உயர்தர வகுப்பில் உயிரியல் கற்பிப்பவன். மாணவர்களுக்கு பரிசோதனைகளைச் செய்யும்படி ஏவி விட்டு, வாசிகசாலைக்கு வந்தான். தாவரங்களின் உணர்வுகளுக்கான ஆய்வுகளைத் தேடிப்படித்தான். தகவல்களைத் திரட்டினான். ம்ஹும்... இந்த மாதிரி நிகழ்வு சாத்தியமில்லை என்றே அவை கட்டியம் கூறின. அஸ்வருக்கு குழப்பம் கூடிப் போயிற்று. யாரிடமும் சொல்லச் சங்கடமாயிருந்தது. வினோதமாகப் பார்க்கக் கூடும். அரை நாள் விடுமுறை எடுத்து, வீட்டுக்கு வந்தான்.

மனைவி, மகள் யாருமற்ற நேரம். சூரியன் தலை மேல் நின்று எரித்தது. புழுக்கமாயிருந்தது. உடைகளைக் கழற்றி விட்டு சாறன் அணிந்தான். உடலைக் கழுவி சற்றே ஓய்வெடுத்தான். - அவரையின் அருகாய் கதிரையில் உட்கார்ந்தான். வீதியில் யாரும் இல்லை என்பதை உறுதிப் படுத்திய பின், பட படக்கின்ற மனதை அடக்கியபடி கூறினான்,
'ஹலோ, குட் ஆப்டர் நூன்'
'..........'
'கேட்கவில்லையா? வணக்கம் சொன்னேனே...'
'..........'

பதிலில்லை. மீண்டுமிருமுறை சீண்டினான். அது பேசவேயில்லை. அவனுக்கு எல்லாம் மனப் பிரமையோ என்ற சந்தேகம் எழத் துவங்கிற்று. அவரையை வெறித்தான். அது காற்றில் இலைகள் அசைய அழகாயிருந்தது. இலைகள் கூம்பி நிலம் பார்த்தபடி இருந்தன. அவன் மீதே அவனுக்குப் பயம் எழ ஆரம்பித்தது. மனது முழுக்கவாய் அவனுக்குக் குழம்பிப் போயிற்று. 'ப்ளடி ஷிற்...' என்றபடி எழுந்தான். படுக்கையில் வந்து வீழ்ந்தான். தூக்கம் வரமாட்டேனென்றது. யோசிப்பிலேயே கிடந்தான். எப்போது தூங்கினான் என்பது நினைவிலில்லை.

மகள், பகல் சாப்பாட்டிற்கென எழுப்பினாள், பின்னேரச் சிற்றுண்டியும் மகளாலேயே பரிமாறப்பட்டது. ஜெஸ்மினின் கோபம், இன்னமும் ஆறவில்லை. அஸ்வரும் வீம்பு கொண்டான். 'பெண்ணாகிய உனக்கே, இவ்வளவு திமிர் இருப்பின், எனக்கெவ்வளவு இருக்கும்' என்ற நினைப்பில் பாராமுகமாயிருந்தான். இன்றுடன் பனிரெண்டாவது வெற்றிநாள் கொண்டாடப்படுகிறது. அஸ்வருக்கு மனசு கொள்ளவில்லை. மனசு சூம்பிக்கிடந்தது. மகள் கூட, உம்மாவின் பக்கமாய் நிற்பதாகவே உள்மனதில் நினைத்தான். சிலவேளை சிறுமிகள் தாயை அண்மித்தே

வளர்வதால், இந்த நெருக்கம் தவிர்க்க முடியாததே என்றுமுணர்ந்தான். தான், அவரை சொன்னதைப் போல, தனிமையாகிவிட்டோமோ என்பதில் மனசு கிடந்தழுதது. முகம் சோபையிழந்து போனது.

இரவு வந்தது. பகல் தூக்கம், இரவுத் தூக்கத்தைக் கொண்டு போயிருந்தது. அஸ்வர் மௌனமாக, கண்கள் மூடியிருக்க, தலையை கதிரையில் சாய்த்தபடி கால்களை நீட்டிச் சாய்ந்திருந்தான். மனசு அமைதியை வேண்டி யாசித்தது. அவரையில் பட்டு வருகின்ற காற்றின் சுகந்த வீச்சு சந்தோசம் தரவில்லை. பால் நிலவு மன அமைதியைத் தரவில்லை. மனச் சுமைகள் அவனை நிம்மதியிழக்கச் செய்திருந்தன. திடீரென அந்த சப்தம் அவனுக்குக் கேட்டது.

'ஹலோ...'

அவன் இப்போது திடுக்கிடவில்லை. பேசாதிருந்தான்.

'என்ன, என்மீது கோபமா?'

இதற்கும் அவன் பதில் சொல்லவில்லை. தலையை நிமிர்த்தினான். அவரையை வெறித்து நோக்கினான். அது கூட அவனுடன் சீண்டி விளையாடுவதாகவே தோன்றிற்று. அவரை மீண்டும் கேட்டது.

'என்ன, மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறி விட்டதா?' அஸ்வர் இதற்கும் பேசவில்லை. நீண்ட நேரம் அமைதியில் கழிந்தது. அவனது வேதனையை அவரை புரிந்து கொண்டதுவா? தெரியவில்லை. அமைதியின் வன்மம் தாளாது, அவரை கேட்டது.

'எதுவானாலும் பேசித் தீர்க்கலாம். இப்படியே மௌனமாயிருந்தால் எப்படி?'

இப்போதுதான் அஸ்வர் வாய்திறந்தான், அவனின் குரல் சற்றே காட்டமாயிருந்தது.

'உண்மையைச் சொல், யார் நீ? எதற்காக என்னுடன் இந்த விளையாட்டு?'

அவரை அதே சிரிப்பைச் சிந்திற்று. பின் கூறியது.

'நான் தான் இலகுமினோ...'

அஸ்வர், இடை மறித்தபடியே கூவினான்.

'ஸ்ரொப் இற். நான் நம்புகிறேன். பிற்பகல் ஏன் நீ என்னுடன் பேசவில்லை'

'உனது மனம் ஒரு நிலையிலில்லை. நீ சந்தேகப் புத்தியுடன், அலை பாயும் வீச்சிலிருந்தாய்'

'ஓஹோ, எனது மனம் முழுக்கவே தெரியுமாக்கும்?'

'இல்லாமலா, உன்னுடன் பேச முடிகிறது...'

'என்ன சொல்கிறாய் நீ'





'ஒன்றுமில்லை'

'தயவு செய்து நீயும் என்னைக் குழப்பாதே. ஏற்கனவே நான் நிம்மதியற்றிருக்கிறேன், தெரியுமா?'

'தெரியும். அத்தனையும் உன் பைத்தியக்காரத்தனத்தால் ஏற்பட்டதுதான்.'

அஸ்வர் மேலே பேசப் பயந்தான். அவனை நோக்கி சுட்டு விரல் நீட்டாததுதான் குறை. இந்த விடயத்தை அதனுடன் விவாதிக்கவே விருப்ப மற்றிருந்தான். ஆயினும் மனம் அதையே சுற்றிச் சுற்றி வந்தது.

'உனக்கு ரோசம் வந்து விட்டதுவா? ஏன் மௌனமாகி விட்டாய்?'

'அப்படியில்லை. எனக்கு ஆறறிவு. உனக்கு ஓரறிவு. அதை வைத்துக் கொண்டு, எனக்கே உபதேசிக்கிறாய். அந்த அளவு மோசமான நிலைமை எனக்கு!'

'ஆகா! ஒன்றை மட்டம் தட்டி, உண்மையை எதிர் கொள்வதிலிருந்து என்னமாய் விலகுகிறாய். இதுதான் ஆறறிவின் விஷேடமென்பது எனக்குத் தெரியாதா?'

திடீரென காற்று வீசத் தொடங்கிற்று, அவரையின் மணம் காற்றில் கலந்து பரவிற்று. வெள்ளைப் பூக்கள் அழகாக அசைந்தன. மொத்த அவரை மரமே பூரிப்பில் தத்தளிப்பதாக நினைத்தான். அஸ்வர் கூறினான்.

'இத்தனை செழிப்பாக இருக்கிற உனக்கும் இப்படித்தான் பேசவரும். இறைவனின் படைப்பில் நீங்கள் எல்லோருமே ஒன்றுதான்'

அவரை சற்று நேரம் மௌனமாயிருந்தது. அஸ்வர் கதிரையை விட்டும் எழுந்தான். அவரையின் அருகானான். அதன் இலையொன்றை விரல்களால் பற்றினான். மெதுவாகத் தடவிக் கொடுத்தான். மெல்லிய பூனை மயிர்கள் விரல்களில் சிலிர்ப்பூட்டுவதை அனுபவித்தான். அவரையே மீண்டும் பேசிற்று.

'தயவு செய்து, இந்தப் பழக்கத்தை விட்டு விடு. எல்லாவற்றுக்குமே மௌனமாயிருப்பது நல்லதென நினைக்கிறாய். மௌனத்தின் பெறுமதியை உணர்ந்தவர்க்கே அது சரி. இங்கு நிலைமை அதுவல்ல. வாழ்க்கையே போராட்டமாக மாறிவிட்டபின், நிராயுத பாணியாய் நின்று, மறு கன்னத்தையும் காட்டிக் கொண்டிருப்பது உன்னை அழிக்கவே துணை செய்யும். உன்னை, அவளிடம் திறந்து வை'

அவனுக்குச் சற்றே சினமெழுந்தது. அவரையை முறைத்தான்.

'என்ன, விட்டால் தொடர்ந்து உபதேசமாகவே பொழியப் போகிறாய் போலிருக்கிறது'

'சரி, இனி நான் வாயே திறக்கவில்லை'

அவ்விடம் மீள அமைதியாயிற்று. அவன் வானத்தை அண்ணாந்து பார்த்தான். நட்சத்திரங்கள் மின்னின. தென்னை மர இலைகள் காற்றுக்கு நடனமாடின. குளிர் காற்று உடலை வருடிற்று. ஆனால், அவனின் மனம் குழம்பியே கிடந்தது. நினைவு அதிலேயே சுற்றிச் சுழன்றது.

'குட் நைட்' என்றபடி படுக்கைக்கு வந்தான். அவரையின் பதிலை அவன் எதிர்பார்க்கவில்லை. தூக்கமின்றிப் புரண்டான். எண்ணம், அவனையே நோட்டமிட்டது.

'ஜெஸ்மினுடன் பிரச்சினை என்பது முதன் முறையானதல்ல. கூடிப் பிரிந்து, கூடிப் பிரிந்து...., இது தொடர் சங்கிலிதானா? இருவருமே எதற்கு இந்த வளையை மாட்டியபடி உக்கிச் சாகிறோம். பிரச்சினையின் அடிவேரை அலசிக் கொள்ள - நாகரீகமாய்ப் பேசிக் கொள்ள தடையாய் எது நின்றது? கேவலமான சொற்களை முகத்தெதிரே வீசி, பின் எப்படி மீண்டும் சேர்ந்து கொள்ள முடிகிறது? ரெஸ்ரெஸ்ரரோனின், ஈஸ்ரஜினின் வீதம் உடல்களில் கூடியதும் எண்ணம், அறிவு, ரோசம் யாவும் மறந்து, மற்றவர் உடலை யாசிக்கத் துவங்கி விடுகிறோமா? பின்னர் எல்லாம் அடங்க நிஜம் தெரிந்து, பிறாண்டிக் கொள்கிறோமா? வெறும் பட்டப்படிப்பு, அவளின் பணத்தில் விலை போன பாவத்தைச் சுமக்கிறேனா?

என்னை, எனது மனைவி அனுசரிக்க வேண்டும், 'கணவனின் - சந்தோசத்தை முதன்மையாக மனைவி கொள்ள வேண்டும்' என்ற எனது பாரம்பரியப் படிப்பினைகள் பொய்யா? அவளின் குடும்ப பாரம்பரியம் அவளுக்கு வேறானதாயிருக்கலாம். ஆயினும் பெண்ணெனபதால் என்னையல்லவா அவள் அடியொழுக வேண்டும். அல்லது நான் தவறா? எனது படிமங்கள் பிழையா? அஸ்வர் யோசித்தான். குழப்பமே எஞ்சும் போலிருந்தது. நேரம் மூன்றரை ஆகியிருந்தது. தூக்கம் வர ஆரம்பித்தது.

மூன்று நாட்கள் எதுவித ஆரவாரமுமின்றி ஓடிப் போயின. அஸ்வருக்கு வீடு நிம்மதியைத் தரவில்லை. மனதில் அலுப்பும், சலிப்பும் குடி கொண்டிருந்தன. இரவுகளில் அவரையின் அருகாக உட்கார்ந்திருப்பதில் மட்டுமே ஓரளவு அமைதி கிடைத்தது. அன்று அவரை இரண்டு இழப்புக்களைச் சந்தித்திருந்தது. வீதியால் வந்த உழவு'மிசின்' அதனைக் காயப்படுத்திவிட்டுச் சென்றிருந்தது. ஜெஸ்மின், அஸ்வரிடம் சொல்லாமலேயே அதன் காய்களைக் களைந்து சுண்டல் செய்திருந்தாள். 'அவனால் அதனைச் சாப்பிட முடியவில்லை. பாவமாக இருந்தது.





அதனருகே ஓடிப்போய்விட எண்ணம் வந்தது. இரவுப் பொழுதை ஆவலுடன் எதிர்பார்த்தான்.

இரவும் வந்தது. எப்படி அத்னுடன் பேச்சைத் துவங்குவது என யோசனை வந்தது. பின் கூறினான்,
'மன்னித்துக் கொள். மனைவி இப்படிச் செய்வாள் என நான் எதிர்பார்க்கவில்லை'
அவரை சிரித்தது. அவன் வியப்புடன் கேட்டான்.
'வேதனையே இல்லையா? உழவு மெசின் கூட உன்னைக் காயப்படுத்தியிருக்கிறதே...'
'நீ என்ன நினைத்திருக்கிறாய். இந்த வருடத்துள் நான் அழியப் போகிறவன். நீ கூட எப்போதோ. அதுவரை மற்றவருக்கு உதவியாயிருப்பது தானே இயல்பானது. இதில் துக்கம் ஏது?'

'என்ன சொல்கிறாய் நீ'
'இங்கே பார். எனது எல்லா விதைகளுமே எனது பிரதிகள். அவர்களை நல்ல போசாக்குடன் உருவாக்கவே, நிலத்தில் வேர் பரப்பி நீருறுஞ்சினேன். இலை விரித்து ஒளி உறுஞ்சினேன், காற்று வாங்கினேன். எனது வித்துக்கள் வீரியமாய் வாழ வழி சமைத்துள்ளேன் என்ற திருப்தியையே எனது கடமையாகக் கொள்கிறேன்'
'பொய் சொல்கிறாய். உனக்குச் சுயம் என்பதே இல்லையா?'
அவரை சிரித்த படியே கூறியது.
'எனது பெற்றோர், இதையே எனக்குச் செய்தனர். அதை நான் திருப்பிவிட வேண்டாமா? இன்று என் மக்களுக்கு நான் செய்கிறேன். வாழ்க்கை என்பதை அதுவாகவே நான் காண்கிறேன்.'

அஸ்வர் மௌனமானான். பின் கூறினான்.
'உனக்குக் குடும்பம் என்றில்லை. ஆதலால் என்பக்க நியாயங்களை மறுக்கிறாய்'
'அப்படியல்ல. உன்னை நேராக எதிர் கொள்ள உனக்குப் பயம். பயந்துபயந்து, இன்னும் வாழவே இல்லை நீ'
'உண்மைதான். வாழ்க்கை இந்த மாதிரியே போய் விடுமோ என அஞ்சுகிறேன்'
'இவ்வாறு நீ மட்டும் வேதனைப்படுவதாக நினைத்துக் கழிவிரக்கம் கொள்வதை முதலில் நிறுத்து. நீ, உன்னை, உனது சுகத்தை மட்டுமே யோசிக்கிறாய்'
'அப்படியானால் அவளில் தவறே இல்லை என்கிறாயா?'
'இல்லை. அவள் புறமாக நின்று, அவளின் நிலையை யோசி என்கிறேன்'

'இப்படி வன்மம் கொள்ளுமளவு அப்படி என்ன தப்புச் செய்தேன்?'
அவரை சற்றே நிதானித்தது. பின் கூறியது.
'ஒன்றா, இரண்டா? முதலில் உனது வாழ்க்கைப் படிமங்களைத் தூக்கி எறி. அவளில் உனது மூத்தம்மாவைத் தேடாதே. நீ மூத்தப்பாவும் அல்ல. வாழ்க்கையின் மாறுதலை அங்கீகரிக்க முயல். அவளில் அன்பு செலுத்து...'
'என்ன சொல்கிறாய் நீ. எனக்கு அவளின் மீது அன்பில்லை என்கிறாயா?'
'ச்சே..., அவளில்லாத நிலையை உன்னால் தாங்கவே முடியாது. ஆயினும் அவளறியக் கூடியதாக ஒரு போதும் வெளிக் காட்டியதில்லை என்கிறேன்.'

'இதில் பகிரங்கத்தனம் தேவையா?'
அவரைக்குக் கோபம் வந்து விட்டது. குரல் காட்டமாயிருக்கக் கூறிற்று.
'ஒரு வாத்தியாரா இதைக் கேட்பது? எதற்கு வகுப்பில் 'கெட்டிக்கார மாணவன்' எனப் புகழ்கிறாய். மனிதன் இயல்பால் மற்றவரின் அங்கீகாரத்திற்கு ஏங்குபவன். நீ ஒரு போதும் அந்த ஏக்கம் தீர்த்ததில்லை'
'உண்மையாகவே, வேதனைப்படுகிறேன்...' அஸ்வர் இழுத்தான். அவரை பொருட்படுத்தாமல் பேசியது.
'உனது விருப்பமறிந்து கஷ்டப்பட்டு சமைத்ததற்கு ஒரு நன்றி சொன்னதில்லை. அவளுடன் சமையலறையுள் அளவளாவியபடி துணை நின்றதில்லை. எத்தனை அலங்காரம் பண்ணி, உன் முன் வந்த போதிலும், 'நீ என்ன அழகு' என ஒரு சொல் சொன்னதில்லை'

அஸ்வர் எதுவும் பேசவில்லை. அவனது முகத்திலறைந்த மாதிரி இருந்தது. பின் கூறினான்.
'எனக்கு விருப்பமிருக்கிறது. ஆயினும் பழக்கமில்லையே'
அவரை அவனை மறுத்தது.
'அப்படியில்லை. உனது ஆண் திமிர் உன்னை விடவில்லை. அது அவள் கடமை என நினைத்தாய். அவள் கூட ஒரு மனுஷி, அன்பு, காப்பு, அங்கீகாரத்திற்கு ஏங்குபவள் என்பதை மறந்து போனாய். நீ உன்னை மாற்றிப்பார். அவளை நேசி. வெளிப்படையாகவே அன்பு செய். பெருமைப்படுத்து..'
'என்னால் இது முடியுமா?'
'செய்தே ஆக வேண்டும். மாறுதல் என்பது தான் வளர்ச்சியின் முதல் படி...'
'இன்னும் திமிர் ஏறப் போகிறது அவளுக்கு'





'அதை அவளிடம் விளங்கச் செய். பணத்தில் வளர்ந்த ஏக புதல்வி அவள். அதிகாரமும், பகட்டும் கொண்டு வாழ்ந்தவள். உணர்வு வடிந்ததும், தன் தவறை உடனேயே உணருகிறாள் அவள். ஆயினும் உனது நன்றி கெட்டதனமே அவளை மாற்றிவிடுகிறது'
'நீ சொல்வது உண்மைதான். ஒவ்வொரு முறையும் 'மன்னியுங்கள்' என அழுகிறாள்தான். ஆயினும் மனைவிக்குக் கூடவாய் இடம் கொடுப்பது...'
'அடப்பாவி, நீ திருந்தவே போவதில்ல'

அவரை மௌனமாயிற்று. அஸ்வரும் கூட. அவன் நிதானமாக யோசித்தான். அவனின் தவறுகள் புலப்படத் துவங்கின. மனதில் கவலைகள் விலகத் துவங்கின. அவரையிடம் மெல்லிய குரலில் கேட்டான்,
'சரி, இப்போது என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?'
அவளிடம் 'நான்', 'ஆண்' என்கிற போர்வையைக் கழற்றி விட்டுப் பழகு. அதிகாரம், வெட்கம் என்பதெல்லாம் மனைவியிடம் தேவையில்லை. உனது மனதை முழுக்கவாய்த் திறந்துவை, பேசு. முதலில் உன்னை முழுக்கவாய் விளங்கச் செய். அப்போது அவளின் மாற்றங்களைப் பார். உன்னைக் குழந்தையாக்கித் தாங்குவதைக் காண்பாய். உன்னை, உனது மனதை பொத்திப் பொத்திப் பாதுகாப்பாள். அப்போது அன்பின் வல்லமையை உணருவாய். உனதருகான மனுசியை நேசிக்கத் தெரியாத உனக்கெதற்கு இத்தனை வாசிப்பும், எழுத்தும்...'

அஸ்வர் தலை தாழ்த்தினான். அவனுக்கு வெட்கமாகப் போயிற்று. ஓரறிவு ஜீவன், அல்லது இந்த அவரை மரம் புத்தி சொல்லுமளவில் தாழ்ந்ததை நினைக்கக் கூச்சமாயிற்று. எனினும் அதனிலான அன்பு வெறுப்புக் கொள்ள இடம் கொடுக்கவில்லை. நன்றி சொல்ல ஆயத்தமானான்.
'நீ என்னை முழு மனிதனாக்கியிருக்கிறாய். நான் தெளிந்து விட்டேன். அவளிடம் உன்னை அறிமுகம் செய்து வைப்பேன். பேசுவாயா?'

இப்போது அவரை பதில் சொல்லவில்லை. அது காற்றுக்கு அசைந்தது. அவரையின் வாசம் எங்குமே பரவிற்று. 'ஆசீர்வதிக்கிறதா?' அஸ்வருக்குத் தெரியவில்லை. மீண்டும் கேட்டான்,
'என்ன, நீ பதிலே சொல்லவில்லை?'
'அவளுடன் நான் பேச முடியாது'
'ஏன்?'
'மரம் எங்கேயாவது பேசுமா?'
'அப்படியானால், இத்தனை நாட்கள் என்னுடன் பேசியதெல்லாம்?'

அவரை சிரித்தது. அஸ்வருக்குக் கோபமெழுந்தது.

'என்ன, அவமானப்படுத்துகிறாயா?'

'அப்படியில்லை. உனக்கு உன் மீதே கழிவிரக்கம். நமக்கு யாருமில்லை. தனியனாகி விட்டோம் என்ற சுய பச்சாதாபம். அன்புக்கு, ஆறுதலுக்கு ஏங்கினாய். இதை வெளியே சொல்லவும் கூச்சம். அவர்கள், 'மனைவியை அடக்க முடியாதவன்' எனப் புறம் பேசுவார்களோ என்ற சந்தேகம். ஆக, உள்ளாய்க் கிடந்து புழுங்கினாய். தூக்கம் கெட்டு இவ்விடம் வந்து புலம்பித் தவித்தாய். யாருடைய துணையாவது உனக்குத் தேவைப்பட்டது...'

அவரைக்கு மூச்சு வாங்கிற்று. சிறிது நேரம் மௌனமாயிருந்தது. அஸ்வா் ஆவலுடன் கேட்டான்.

'அதனால்...'

'நீயாகவே சிருஷ்டித்துக் கொண்ட பாவனைதான் இது. உனது குருட்டு நம்பிக்கையே இது. அதற்கு சான்றுகளும் வைத்து, ஆறுதல் பெற்றாய். உனது மனசுக்கு ஒத்தடமாயிருந்ததால், நம்பத் துவங்கினாய்'

'என்ன சொல்கிறாய் நீ. எனது காதால் கேட்டதெல்லாம்...'

'அத்தனையும் நீயே. உனது உள்ளம் சிருஷ்டித்தவையே. எய்த அம்பு, எய்தவன், அம்பை நெஞ்சினில் வாங்குகிறவன் அத்தனையும் நானே, என்பதைப் போல. உன்னில் தர்க்கிக்கிற மறுபகுதிக்கு என்னை ஆக்கிக் கொண்டாய்..'

'எனக்கு விளங்கவில்லை'

'பொய் சொல்லாதே, உனக்குத் தெளிவும், சுய நம்பிக்கையும் கிடைக்க, பழைய மன விம்பங்களிலிருந்து விலக முயல்கிறாய், இனி நீ மாற முடியாது என்பதால், எனது பேச்சு என்ற திரையிலிருந்து கழன்று கொள்கிறாய்...'

அஸ்வா் அவரையை உற்று நோக்கினான். அதன் தண்டுப் பகுதி காற்றிலாட அப்படியே இருந்தது.

அவனது மனதுள் எல்லாக் கேள்விகளும் விடைபெற்றுப் போயின. ஒரு தெளிவு கிடைத்த நிம்மதி பிறந்தது. புத்தன் மட்டுமல்ல தனக்கும் ஒரு போதி மரம் கிடைத்ததை நினைக்கப் பெருமையாகவுமிருந்தது.





# தொலைந்தவர்கள்

அந்த நாயின் தலை ஆடுகின்ற விதம் தான் முதலில் என் கவனத்தை ஈர்த்தது. வலது புறம் தலையைத் திருப்பி மேலும் கீழுமாக ஒரு முறை, பின்னர் தொண்ணூறு பாகையில் கழுத்தை இடது புறம் திருப்பி அதே போல மேலும் கீழுமாக ஒரு முறை. எனக்கு அதன் லயம் தப்பாத ஒழுங்கு முறை ஆச்சரியம். தந்தது. 'ஹாலிங்டன் ஜங்சன்' என்கிற நாற்சந்திக்கு, அண்மித்த பஸ் தரிப்பிடத்தின் ஒரு மூலையில் பிட்டப்பகுதி தரையில்பட, பின் காலிரண்டும் தரையில் மடிந்து கிடக்க, உயர்த்திவைக்கப்பட்ட முன்கால்கள் உடல் தாங்க, அது குந்தியிருந்தது.

உலகில் அதிக எண்ணிக்கையிலான விமானங்கள் வந்து, செல்கிற ஹீத்ரோ விமான நிலையத்தை அண்மித்த சந்தியது. ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் நாற்புறமும் வியாபித்திருக்க (வாகனங்கள், நடைபாதை மனிதர்கள் எனப் பரபரக்கிற இடமது.விரைவான இயக்கங்களுடன் எப்போதும்) இவை எதுவுமே அந்த நாய்க்கு பொருட்டாக தெரியவில்லை. 'தான் இதற்காகவே படைக்கப்பட்டு ஏவப்பட்டுள்ளோம்' என்றாற்போல எந்தவித அலுப்போ - ஓய்வோ இன்றித் தலையை இரு புறமுமாக ஆட்டியபடியே அது இருந்தது. அதன் அருகாக பஸ் தரிப்பிட இருக்கையில் சிலர் உட்கார்ந்திருந்தனர், அதன் முன்னாகக் கூட நடந்து கடந்தனர். ம்ஹும்... இவை எதனாலும் அதன் மாறாத இயக்கம் குழம்பவில்லை. எனக்கு சுவாரஸ்யம் கூடிப்போயிற்று. இரவு வேலை முடிந்த களைப்பில், கண் அயர்வில் அறை சென்று தூங்க பஸ்ஸை எதிர்பார்த்திருந்த நான் எல்லாவற்றையும் மறந்து அதன் அருகானேன்.

நல்ல கறுப்பு நிற நாய் அது. பெரிதாகப் போசிக்கப்பட்டு வளர்க்கப்படாததாயிருக்க வேண்டும். இடுப்பு, நெஞ்சு, தலைப் பிரதேசங்களில் துருத்தியபடி எலும்புகள் வெளித் தெரிந்தன. நிச்சயமாக வளர்ப்பு நாயுமில்லை. அதற்குரிய கழுத்துப்பட்டியோ, சுத்தமோ அதனிடம் தென்படவில்லை. அதனை மேலும் அண்மித்தேன். அப்போதுதான் அதன் வாயிலிருந்து விழுந்த வார்த்தைகளை என்னால் கேட்க முடிந்தது.

'ப்ரீடம்... பெமினிசம்'
'ப்ரீடம்... பெமினிசம்'

எனது கண்கள் மேலும் ஆர்வமுடன் விரிய அதனை நோட்டமிட்டேன். அந்தக் குரல் எனக்கு மட்டும்தான் கேட்கிறதா? அருகே நின்றவர்களை அவதானித்தேன். அவர்கள் எந்தவிதச் சலனமுமின்றி நின்று கொண்டிருந்தார்கள். சந்தேகமெழ, மீண்டும் நாயைப் பார்த்தேன். அதே தலையாட்டுதலுடன் அதே வார்த்தைகள். யாரும் பழக்கி விட்டிருப்பார்களோ? இதில் அதிசயம் கொள்ள ஏதுமில்லையோ? என்ற சந்தேகம் எழுந்தது. எனது இந்த நினைப்பையே தவிடுபொடியாயிற்று அதனிடமிருந்து வந்த அடுத்த கேள்வியினால்.

'நீங்கள் இலங்கையரா?'

சுத்தமான இலங்கைத் தமிழ், எனக்கு அதனிடம் பதில் சொல்லச் சங்கடமாயிருந்தது. போயும் போயும் இந்த நாயுடனா சம்பாஷிப்பது என்பதனாலல்ல, அருகிலுள்ளவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற சங்கோஜத்தால். ஆயினும் மனதின் ஒரு மூலையில் ஆர்வமுமிருந்ததால் 'ஆம்' என்பதாகத் தலையசைத்து வைத்தேன்.

'அதுதான், பார்த்தாலே தெரிகிறதே'

நாயின் இந்தப் பதிலில் நக்கல் தொனிப்பதாக எனக்குப்பட்டது. ரோசம் பொத்துக்கொண்டு வந்தது. அதனை முறைத்தபடி கேட்டேன்.

'அப்படி என்ன தெரிகிறது?'

'இத்தனை பேர், சும்மாவே இருக்க, உங்களால் மட்டும் தாங்க முடியவில்லை. விடுப்புக் கேட்க வந்து விட்டீர்'





அது, இப்படி அதன் இருபுறச் செவிகளும் காற்றிலாட, தலை சாய்த்துச் சொன்னவிதம் எனக்குச் சிரிப்பு மூட்டிற்று. பதிலேதும் சொல்லாமல் அதனைப் பார்த்தபடி இருந்தேன்.

மணிபார்த்தேன். ஏழுக்கு ஐந்து நிமிடங்கள் இருந்தன. சூரியன், ஒளிக்கதிர்களை சிதறவிட்டபடி இப்போதுதான் வெளிக்கிட்டிருந்தான். கூதலான காற்று முகத்தில் ஊசியாய் அறைந்தது. குந்தியிருந்த நாய், திடீரென உடம்பைச் சிலிர்த்தபடி எழுந்தது. நின்றபடி மீண்டும் உடலைக் குலுக்கிற்று. பின் என்னைத் தலைசாய்த்து நோக்கியது.

'உங்களுக்கு அவசரமில்லையே? கொஞ்சம் பிந்தலாம்தானே'

இதைச் சொல்லிவிட்டு, என் பதிலை எதிர்பாராமல் விளையாடத் துவங்கிற்று. முன்கால்களை உயர்த்தி காற்றுக்கு உதைத்தது. பின்னர் தலையும், முன்கால்களும் நிலத்தில் பட, பின்புறம் உயர்த்தி, பின் காலகளை வீசி காற்றை அளைந்தது. தரையில் முன், பின் கால்கள் நீண்டு கிடக்க 'டம்' மென்று படுத்து உடலை வலது புறமாக ஒரு முறை உருட்டிற்று. பின் அதே போல இடது. மீண்டும் பழையபடி உட்கார்ந்து கொண்டதும், வாயை அகலப் பிளந்து காற்றை உள்வாங்கியது. நான் மௌனமாக அதன் அத்தனை செய்கைகளையும் பார்த்தபடி இருந்தேன். அதன் முன் மண்டைப் பிரதேசத்தில் முடி சீரற்று, சடைந்து வளர்ந்திருந்தது. இடையிடையே வலது முன் காலை உயர்த்தி அந்த முடிக்கற்றையைக் குழப்புவது அதன் 'மெனரிஸ்ஸமாயிருந்தது' அதன், அன்றைய தினத்தை வரவேற்கிற, சூரிய வரவேற்பு முடிவதற்கு பதினைந்து நிமிடங்கள் தேவைப்பட்டிருந்தது. அது, பழையபடி பின்கால் மடிந்து உட்கார்ந்ததும் நான் கேட்டேன்.

'இது எங்கு பழகியது? தினமும், இதே போல்தானா?'

'அதை ஏன் கேட்கிறீர்கள். அதைச் சொல்வதானால் ஆரம்பமிருந்து சொல்ல வேண்டும்'

நான் இதற்கு பதிலேதும் சொல்லவில்லை. அதுவே தொடர்ந்தது.

'ம்... கதை கேட்டு, கதை சொல்லி வளர்ந்தவர்களல்லவா நாம். பெரிய ஆவலாய்த்தானிருக்கும். எனக்குக் கூட இதை யாரிடமாவது சொல்லாவிட்டால் மனது ஆறாது போல்தானிருந்தது'

எனக்கு இந்த நாய், இலேசுப்பட்டதில்லை என்றுபட்டது. அது சொன்னது முழுக்க உண்மையே. இந்த ஒருவருட இயந்திரத்தனமான வாழ்க்கையில் முதன் முதலாக இப்போதுதான் பழைய கால சுவராஸ்யத்தை அனுபவிப்பதாக நினைத்தேன். எனது துக்கம், சந்தோசம், ஏக்கம், தாபம் எல்லாமே இங்கு எனக்கு மட்டுமேயானவை. யாரும் அதை நின்று விசாரிக்கப் போவதில்லை. அவர்களுக்கும் இதே போலத்தான் ஆயிரம் மன உழைச்சல், எண்ணங்கள் உள்ளாக இருக்கும். அப்படியான வாழ்க்கை முறையும், அவசர ஓட்டமும் லண்டன் மாநகரால் திணிக்கப்பட்டிருந்தது. உள்ளாய் எல்லாவற்றையும் இறுக மூடி வைத்துக் கொண்டு, வெளியே சிரிப்புடன்,

'ஆர், யூ, ஓல்) ரைட்?' என்ற கேள்விக்கு,

'யாஹ்... பைன். ஆர் யூ ஓகே?' எனச் சிரித்தபடி பதில் சொல்லிவிட்டு நகர்ந்து விட வேண்டும். எல்லா உணர்ச்சிகளையும் உள்வாங்கி, உணர்வுகளை வெளிக்காட்டாதபடி வளர்கிற பிள்ளைதான் இங்கு சமத்துப் பிள்ளை. வந்த புதிதில் எனக்குக் கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டது போல இருந்தது. எத்தனை குசல விசாரிப்புகளுடன், அரட்டைகளுடன் வம்பு, தும்புகளுடன் ஊர்க்கதை பேசி, சுற்றம் சுகம் விசாரித்து வாழ்ந்த வாழ்வு நம்முடையது. இங்கு நின்று பேச எவனுக்குமே நேரமிருக்கவில்லை. காலில் சக்கரம் கட்டிவிட்டது போல அப்படி ஒரு வேகம், பறந்து கொண்டிந்தார்கள். எல்லோருக்கும் மலையைப் பிளக்கிற அப்படிக் கொத்த வேலை என்னதான் இருக்கும்? என முதலில் மலைப்பாகத்தானிருந்தது. பின்னர் அல்ல,

நாள்கள் கடந்து வாரமாகி, மாதமாகிய போதுதான் நானும் அவர்களுடன் இயைந்து, என்னையும் தொலைத்து விட்டிருந்தேன். அவ்வாறு என்னதான் மாறினாலும், பளீரென்ற வெள்ளைக் கிளாசில் உயர்தர 'சம்பெயன்' சாராயத்தைப் பருகியபோதிலும் தென்னைமரத்தின் கீழ் உட்கார்ந்தபடி கண், மூக்குப் பொத்தியிருக்க பழைய சிரட்டையில் பழம் கள் குடித்த சுகானுபவத்திற்கு மனம் ஏங்குவது போல எப்போதும் அந்த வாழ்வு பற்றிய அரிப்பு இருந்துகொண்டேயிருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த நாயிடம் இவ்வளவு ஆர்வமும், ஈடுபாடும் எனக்கு வ' திருக்காது.

'என்ன யோசிக்கிறீர்கள்?'

நாயின் திடீர் கேள்வியினால் நினைவு மீண்டேன்.





'ஒன்று மில்லை. நீங்கள்தான் உங்கள் கதையைச் சொல்வதாகச் சொல்லிவிட்டு, என்னைக் கேட்டால்?'

'கொழும்புவில் நான் வேலை செய்ததில் இருந்து துவங்குகிறேனே...' எனத் தலையாட்டிச் சொன்ன நாய், என் பதிலை எதிர்பாராது, மேலே பேசிக்கொண்டு போனது.

'ஒரு 'காமென்ற்' இல் சுப்பவைசர் ஆக அப்போது வேலை செய்தேன். அங்குதான் வெளிநாட்டுக்கு ஆட்களை ஏற்றுமதி செய்கிறவரின் தம்பி அறிமுகமானான். நல்ல சிரித்த முகம். விரைவாகவே என்னுடன் அறிமுகமானான். அவன் தான், 'இந்தத் தொழிலில் உழைத்து, சகோதரிகள் இருவரையும் கரையேற்றுவது எக்காலம்? கூடவே, நீ உருப்படுவதுவும் எந்தக் காலம்? எனக் கூறி, மேற்கே செல்ல ஆசை காட்டினான். எனக்கும் ஐரோப்பிய ஆசை, ஆவல் இல்லாமலில்லை. வட்டிக்குப் பத்து லட்சங்கள் கடன் வாங்கினேன். முதலில் ரஷ்யா வந்து சேர்ந்தேன். அங்கு துவங்கிய விழுக்காடு முடிய ஆறுமாதங்கள் தேவைப்பட்டது. லண்டன் வரும்வரை பட்டபாடு... ஓ! அதுவே ஒரு தனிக் கதையப்பா...!'

இவ்விடத்தில் நாய் சற்று நேரம் கண்களை மூடி மௌனமாயிருந்தது. அதன் சோகம், இந்த மௌனத்தினூடு வெளித் தெரிந்தது. நான் குழப்பவில்லை. சற்று நேரத்தின் பின் மீண்டும் தொடர்ந்தது.

'இங்கு வந்ததும்தான், எனது கற்பனைகள் எத்தனை அபத்தம் என அறிந்தேன். இங்கு பணம் தேடல் என்பது தவிர மீதி அத்தனையும் போலி என உணர்ந்தேன். மிக மோசமான காலநிலை, அவசர, ஆங்காரமான பண்பாடு எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லை. இலங்கையைவிடவும் அழகிய நாடு வேறேதும் உளதா? உலகின் சொர்க்கத் தீவன்றோ அது?'

நாயின் வடிவு மிகுந்த வார்த்தைகளில் ஆச்சரியமுற்றேன் ஆவல் பீறிடக் கேட்டேன்.

'நீங்கள், இலக்கியம் செய்வதுண்டா?'

நாய் ஆஹா...ஹா வென முன்னிறு கால்களையும் தூக்கி 'கால்' கொட்டிச் சிரித்தது. எனக்கு வெட்கமும், கோபமும் ஒன்றாக எழுந்தது. எனது கேள்வியில் அப்படி சிரிக்கும்படியாக என்ன உளது? முறைத்தபடி இருந்தேன். சிரித்து ஓய்ந்ததும், நாய் கேட்டது,

'யாராலும், இலக்கியம் சமைக்க முடியுமா? அத தானாகவே வந்து வாய்ப்பது. உள்ளாக அடக்க முடியாதபடி கொந்தளிக்கிறபோது, வெளிப்படுத்துகிற வடிகாலது. அந்த வெளியேறுகையும் சேர்ந்துதான் என்னை இப்படி நடுத்தெருவுக்குக் கொண்டு வந்து விட்டிருக்கிறது?'

'அப்படி என்னதான் நடந்தது, உங்களுக்கு?'

'அதைப் பிறகு சொல்கிறேன். ஐந்தாம் செனல் வழியாக லண்டன் வர என்னைப் பிடித்து அகதிகள் முகாமில் போட்டு விட்டார்கள். இங்கு என்னைப் போலவே அனேக நாடுகளிலிருந்து வந்த, எத்தனை தினுசான நாய்கள் தெரியுமா? எங்களை வைத்தே கலப்புக் கலாச்சாரம் என்றொரு பகுதியை அவர்கள் பல்கலைக் கழகத்தில் கற்குமளவு மாற்றியிருந்தார்கள். அந்த முகாமில்தான் ஒரு ஒழுங்கு முறையைப் பயின்றேன். 'தொண்டைக்' கின் தியறி' யில், மணிக்கு இயங்கின பூனை மாதிரிப் பழக்கவழக்கங்கள். முதல் மணிக்கு எழும்பி, மைதானத்துக்கு வந்துவிட வேண்டும். கொஞ்சம் பயிற்சி, பிறகு ஆகாரம். அதில் பழகியதுதான் நீங்கள் இப்போது பார்த்தது.'

'நல்ல 'ட்ரெயினிங்' தான்'

'ம்... அவர்களிடம் ஆறுமாதம். பிறகு வேலை செய்ய அனுமதியும் தந்து வெளியில் விட்டார்கள். இரவு பகல் என்றில்லாது, பதினாறு மணித்தியாலங்கள் ஒரு நாளைக்கு வேலை செய்தேன்...'

'இரண்டு ஷிப்ட்'

'ம்... 'வெள்ளைகள்' கிழமைக்கு நாற்பதையே தாண்டமாட்டார்கள். என்னை, ஏற்கனவே இடுங்கிய கண்ணை இன்னும் இடுக்கி மறை கழன்ற 'கேசோ' என்பதாகப் பார்ப்பார்கள். அவர்களிடம் சொல்லலாமா? நான் வேலை செய்யவில்லையப்பா, வாங்கின கடன், அதற்கான வட்டி, இரண்டு சகோதரிகளின் ஏக்கமான முகம்தான் வேலை செய்விக்கிறதென? எனது நிட் மதி அத்தனையும், இலங்கையில விட்டு விட்டு வந்த மாதிரி, இயந்திரத்தனமாக இயங்கினேன்...'

'என்ன வேலை செய்தீர்கள்?'

'எந்த வேலை என்றில்லை ஓடி ஓடித் தூக்கம் தொலைத்துக் காசைத் தேடினேன். மூன்று வருடங்கள் நான் பட்டபாடு சொல்லி மாளாது...'





நாய் சற்றே ஓய்வு கொண்டது. நான் சொன்னேன்.
'பெரிய, நாய் படாப் பாடுதான்...'

திடீரென நாயின் செவிகள் முன்னோக்கிக் குவிந்தன. என்னை 'உர்'ரெனப் பார்த்தது. நான் வேண்டுமென்று அந்த வார்த்தையைப் பிரயோகம் பண்ணவில்லை, ஆனால் எனது வாய் முந்திவிட்டது.

'நீங்கள் கிண்டல் செய்தாலும், உண்மை அதுதான். எந்தச் சந்தோசமுமின்றி ஒரு வெறியில் பணத்தைத் துரத்தினேன். கடைசியாக பதினெட்டு மாதங்கள் மட்டுமே ஒரு துணிக்கடையில் இலகுவான வேலை எனக்குக் கிடைத்தது.'

'கடைசியாகச் செய்தேன் என்றால், இப்போது?'
'இப்படி வலதும் இடதும் பெமினிசம், பிறீடம் எனத் தலையாட்டிக் கொண்டிருக்கிற எனக்கு எவன் வேலை தருவான். இது சரிவராது. என்பதாகத்தான் பார்ப்பார்கள், அவர்களுக்கெங்கே என் சோகமும் இழப்பும் தெரியப் போகிறது.'

'அது சரி துணிக்கடையில் அப்படி என்னதான் பிரச்சினை உமக்கு?'

'எல்லாப் பிரச்சினைக்கும் கால்கோல்போல இதற்கும் ஒரு பெண்தான் காரணமாய்ப் போனால்...'

நாயின் ஒர வஞ்சனையான பேச்சில் எனக்கு உடன்பட முடியவில்லை. அவரவர் பிரச்சினையை, அவரவரே தேடிக்கொள்கிறார்கள் என்பது என் நினைப்பு. இதைச் சொல்லி நாயைக் குழப்ப மனமில்லை. மேலே சொல்லுங்கள் என்பதாக அதனைப் பார்த்தேன்.

'எனது கடைசி ஐந்து மாதமிருக்கும் போதுதான் அவள் புதிதாகக் கடையில் வேலைக்குச் சேர்ந்தாள்...'

'அவளென்றால்...'

'ஏஞ்சல் என்று பெயர். வயது இருபது என்று சொன்னாள் பெயறுக்கேற்றாற்போல ஒரு தேவதைதான் அவள். வெள்ளைக்காரி. 'ஓவல்' வடிவ முகம். சிக்கென்ற உடம்பு. தினமும் என்னமாகக் கடைக்கு உடுத்து வருவாள் தெரியுமா அவள்? அவளைப் போல ஒரு பெண்ணை என் வாழ்நாளில் நான் கண்டதேயில்லை.'

நாய் இதைச் சொன்னபோது, அதன் கண்களில் கிறக்கமிருந்தது. ஒவ்வொரு வார்த்தையையும் அனுபவித்துச் சொல்வதாக எனக்குப் பட்டது. அதே மயக்கத்துடன் தொடர்ந்தது.

'அவள் அத்தனை அழகாயிருந்தும், அதைப் பறையறிவிக்கிற மாதிரி ஏன் உடுத்து வருகிறாள் என்ற கோபம் எனக்கிருந்தது. ஒரு நாள் அடித் தொடை, மறுநாள் ஒருசாண் இடுப்பு, மறுநாள் மேல் மார்பு எனக் காட்டுவாள். நான் காலை வணக்கம் சொல்வதோடு சரி. அவளை நிமிர்ந்து பார்ப்பதேயில்லை...'

'இதை நான் நம்பமாட்டேன்...'

'நிமிர்ந்து பார்ப்பதில்லை என்றுதான் சொன்னேன். மற்றப்படி அவள் கடைக்கு வந்தது முதல் அவள் புறமாகவே எனது நினைப்பு இருக்கும். ஆயினும் அனைத்தையும் இறுக மூடி வைத்திருந்தேன்...'

'ஏன்... எதனால் அப்படி'

'எனது முப்பத்தெட்டு வயதுவரை, குடும்பத்துக்காக ஓடி ஓடி உழைத்திருந்தேன். பாடசாலை வாழ்வில் தோழியுடன் பேசிப்பழகியது தவிர, வேறு பெண்ணே பழகி அறியாதவன் நான். அவளுடன் 'ஹலோ' சொல்லவே எனக்கு இரு மாதங்கள் தேவைப்பட்டது. பின்னர், பின்னேரப் பொழுதுகளில் அவளை அவள் வீதியில் தேடிப்போவதுண்டு. கண்களால் பரிபாசை பரிமாறுவதிலேயே 'கிக்'கேறிப் போன அழகிய நாட்களவை. ஆனால் இங்கு எல்லாமே தலைகீழாக இருந்தது...'

'எதைச் சொல்கிறீர்கள்?'

'அவள் கடையில் சேர்ந்ததும், எல்லா ஆண் மகன்களுமே அழகானவர்களானார்கள். தங்கள் அழகிய மீசையை மழித்தார்கள். புதிது புதிதாக நறுமணங்களுடன் புத்தாடை புனைந்தார்கள். தினமும் சப்பாத்துக்கு 'பொலிஷ்' பண்ணி அணிந்து வந்தார்கள். ஆக, கடைக்கே ஒரு மலர்ச்சியும், புத்துணர்வும் அவளால் வந்துவிட்டிருந்தது. ஆனால், நான் மட்டும் மாறாமலேயே இருந்தேன்.

'கடும் ஆள்தான் நீர்'





'அப்படி அதைக் கொள்ள முடியாது. அதற்கு நான் இலாயக்கானவனில்லை என நினைத்தேன். இவர்களைக் கனவு தேவதைகளாக மட்டுமே நாம் கொள்ள முடியுமென நம்பினேன். எல்லாவற்றையும் விட, மிகச் செலவுக்குரிய விஷயமாகவும் இங்கு அது இருந்தது.'

'கடைசியில், அவள் உமது புறம் சாய்ந்து விட்டாள் போலிருக்கிறது.' நான் இதைச் சொன்னதும் நாய் ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்தது. அதன் முகத்தில் திடீரென ஒரு பரவசமும் கண்களில் ஒளியும் பிரகாசித்தது. குரலில் ஆவல் தொனிக்கக் கேட்டது.

'நீர், எப்படிக் கூறுகிறீர்? உண்மையில் அதுவேதான் நடந்தது.'

'இதில் பெரிதாகக் கண்டு பிடிப்பென்ன உள்ளது. மனித இயல்பே உள்ளதை விட்டு விட்டு, கிடைக்காததற்கு ஆலாய்ப் பறப்பதுதானே, அதைவிட எந்தப் பெண்ணுமே தன்னிடம் இறங்கிப் பழகுகிற ஆணைவிட, அலட்சியம் செய்கிறவனிலேயே அதிகம் ஈர்ப்புக் கொள்கிறாள். அவளின் அத்தனை கால நம்பிக்கையை, அழகின் கர்வத்தையே சிதைத்ததாகாதா உமது நடவடிக்கைகள்? ஆக, கடைசியில் தன் மீது மயங்காத உம்மீது மோகம் வந்து விட்டிருக்கும்.'

'மோகம், உண்மைதான். மிகச் சரியான வார்த்தைதான் அது.' என ஆமோதித்த நாய், சற்றே இடைவெளி விட்டு,

'மோகம்... அத்தனையும் மோசம்' என முணுமுணுத்தது.

'ஏஞ்சலால் என்ன பிரச்சினை என இன்னமும் சொல்லவில்லை நீங்கள்?'

'ம்... அவளாகவே என் புறம் நெருங்கி வந்தாள். ஒன்றாகவே ஓய்வு எடுத்தாள். மாதாந்த வேலை நேரப் பட்டியலை (றோஸ்டர் என்றது நாய்) எனதுடன் ஒத்ததாக மாற்றியெடுத்தாள். வந்த மூன்றாம் மாதமே அவளின் அறைக்குக் கூட்டிப்போனாள்.'

'மிக விரைவான பெண் போலிருக்கிறது.'

'இங்கு அது ஆச்சரியமேயில்லை. எல்லாமே திறந்தபடியான வாழ்க்கை அவர்களுடையது. ஒரு முறை வேலை நேரத்தின் போது, எனது முதுகில்

அவளின் மார்பு அழுத்தியிருக்க, அவள் உடலை என் முதுகு தாங்க என் காதில் கிசுகிசுத்தாள்.

'என்னவென்று'

'உனக்கு எனது உடம்பு வேண்டுமா? எனக் கேட்டாள். எனக்கு அந்த வார்த்தைக்கு அப்போது, அர்த்தமே தெரியவில்லை, தெரியுமா?'

'சின்னப் பையன் என்கிற நினைப்பு, இன்னமும்?'

'அப்படியல்ல. நான் வேண்டுமா எனக் கேட்காது, ஏன் உடம்பு என்கிறாள் என்பதில் குழப்பமுற்றேன்...'

'ஏன், நீர் அவளை விரும்பவில்லையா,'

விரும்பினேன். மிகவும் ஆழமாக நேசம் கொண்டிருந்தேன். ஆனால், அவளின் உடம்பை மட்டுமல்ல'

'அதைச் சொன்னீர்களா?'

'சொல்லவில்லை. அவளை எனக்குரிய துணையாக மனதில் வரித்திருந்தேன்... படிப்படியாக அவளின் உடைகளை, அந்நிய ஆண்களுடன் பழகுகிற முறையை, மாற்றி மனைவியாக்கிக் கொள்கிற முடிவிலிருந்தேன்...'

நாய் இதை இறங்குகிற தொனியில் ஏக்கம் பீறிடச் சொல்லிற்று. நிலைமை இதனாலேயே குழம்பியிருக்கும் என எனக்குப்பட்டது. நான் கேட்டேன்.

'பிறகு, என்னதான் ஆயிற்று?'

'என்ன ஆகும்? நான் தோற்றுப் போனேன். மொத்தமாக இடிந்து போனேன் சகோதரா? எனது தேவதை, பொருளாதாரம், நிம்மதி எல்லாமே இழந்து போனேன், கடைசியில்'

'ஏன், ஏஞ்சல் காதலிக்கவில்லையா?'

'ஏன் காதலிக்காமல்? ஒரு வருடமளவில் எத்தனை கொஞ்சல்களுடன், நெருக்கமாக மூழ்கிக் கிடந்தோம், தெரியுமா? உண்மையாகவே, காதல்





செய்வதில் எங்களை யாரும் மிஞ்சவே முடியாது என இறுமார்ந்திருந்தேன். எல்லா நிகழ்வுகளுக்குமே நினைவாகப் பரிசு தருவாளவள். எனது எழுத்துகள் பிரசுரமானதும், எத்தனை சந்தோசப்படுவாள் தெரியுமா? ரெம்பவும் மென்மையான மன முடையவளாயிருந்தாள் அவள்...'

நாய் விட்டால் தொடர்ந்து பேசிக்கொண்டே போகும் போலிருந்தது. இடைமறித்தபடி நான் கேட்டேன்.

'பிரச்சினை, உங்களுக்கிடையில் எங்குதான் துவங்கிற்று.?'

'ஆம், ஒரு வருடத்துள் எல்லாமே முடிந்து போயிற்று மோகம் அறுபட்டோடிற்று. அது, என்னாலா, அல்லது அவளாலா என்பது புரிபடவேயில்லை எனக்கு. அவள் மீதான ஆசை, கவர்ச்சி, மோகம் எல்லாம் எப்படி விடுபட்டது? ஏன் இத்தனைக் காழ்ப்புணர்வுடன் பிரிந்தோம்? நான் அவளின் உடையை மறைப்பாக உடுத்தச் சொன்னேன். ஆண்களுடன் தொட்டுப் பேசாதே என்றேன். எங்கு செல்வதானாலும் சொல்லிவிட்டுச் செல் என்றேன். இது பிழையா? ஒரு கணவனுக்கு அந்த உரிமை கூடவா இருக்கக் கூடாது?'

நாய் இதைச் சொல்லிவிட்டு யோசனையில் ஆழத்துவங்கிற்று முகத்தில் கவலை அப்பிக் கிடந்தது. எனக்கு பஸ் வந்துவிடுமோ என்ற அவசரமெழுந்தது. கதையை இத்தனை சுவாரஸ்யமாகக் கொண்டு வந்து முடிவைத் தாமதிக்கிறதே என அசூசை கொண்டேன்.
'நான், நினைத்தேன், இப்படித்தான் ஆகுமென்று'

'எப்படி' நாய் சற்றே எரிச்சலுடன் கேட்டது.

'நீர் அவளை மாற்ற வெளிக்கிட்டிருக்கிறீர்கள். காதலுக்காக தனது கலாச்சாரத்தையே மாற்றியபடி வா என்பது சுயநலமல்லவா?'

'ஆம் இதையேதான் அவளும் சொன்னாள். பதினான்கு மாதங்கள் வரை என்னிடம் எதுவுமே எதிர்க்காதவள். கடைசியாக எல்லாவற்றையும் சேர்த்து, ஒரு நாள் கொட்டினாள். எல்லா ஆங்கிலேயரையும் போல நிறைய வாசிக்கிறவள் அவள். ஆதலால்தான் அவளின் எதிர்ப்பைக் கூட அழகாகவே வெளிப்படுத்த அவளால் முடிந்தது. உள்ளாய்ச் சேர்த்துவைத்த விஷமனைத்தும் வெளித்தள்ளியபடி, அழகான பாம்பு, படமெடுத்தாடுவதாகவே அன்று அவள் எனக்குத் தெரிந்தாள்.'

'அது, உங்களது மனப்பிரமை. நீங்களாகவே தேடிக் கொண்டவை அனைத்தும். அவள் புறமாக நின்று யோசித்தீர்களா?'

'சகோதரா, நீங்கள் யாரையாவது காதலிக்கிறீர்களா?'

'இது என்ன, கேள்விக்கு, எதிர்க் கேள்வி கேட்டுக்கொண்டு நீங்கள் எந்த ஊர் அ...றுவா?'

நாய்க்கு புன்முறுவல் வெளிக்கிட்டது. பின் மீளவும் ஒரு முறை 'முன் கால்' கொட்டிச் சிரித்தது.

'நன்றாகப் பேசுகிறீர்கள். அது சரி காதலிக்கிறீர்களா?'

'ஆம், ஸ்பானிய தேசத்தவள். இப்போதுதான் ஆரம்பம்.'

'எனது நல் வாழ்த்துக்களும், ஆழ்ந்த அனுதாபங்களும் உரித்தாகட்டும்...'

'அது கிடக்கட்டும். ஏஞ்சல் என்னதான் சொன்னார்?'

'அவள் அப்போதும் புன் முறுவலுடனேயே சொன்னாள். 'அன்பானவரே, அன்பு என்பதைக் காட்டி என்னைக் கட்டிப்போட முயலாதீர்கள். நான் இதுவரை எனது மனமறிய அன்பாக விசுவாசமாகவே உங்களுடன் இருந்தேன். ஆயினும் எனது சுயத்தை, சுதந்திரத்தை எதனாலும் என்னால் இழக்க முடியாது. நீங்கள் எனது துணையேயாயினும் உங்களுக்குக் கூட என்னிலிருந்தான ஒரு தூரமுண்டு. அதனுள் நான் யாரையும் அனுமதிக்க முடியாது. அதேபோல உங்களுக்கும்'.

'நான் பெண் என்பதனால், எனக்கு சுதந்திரம் மறுக்க நினைப்பது என்ன நியாயம்? நான் என்னை, எனது அழகை, அதனால் விளைந்துள்ள கர்வத்தைக் விரும்புகிறேன். அதனை மேலும் அழகுபடுத்துவதில் இன்பமடைகிறேன். என்னை விரும்புகிறபோதுதான், மற்றவரையும் அதேபோல என்னால் விரும்ப முடியும். எனக்கு வேஷம் போட முடியவில்லை. உங்கள் எல்லாக் குறை, நிறைகளையும் அங்கீகரித்தவளாக உங்களை விரும்பினேன். ஆனால் நீங்கள் அப்படியில்லை. என்னில் வேறுயாரையோ தேடுகிறீர்கள்'. 'பெண் விடுதலை என்பது நீங்கள் எழுதுவது போல சாயம் பூசியலைவதும், ஆண் தேடுகையுமல்ல. உங்களால் இப்போது நான் உடைந்து போயுள்ளேன். இத்தனை நாட்களும் நாம், ஆளை ஆள்





சகித்துக்கொண்டிருந்தது போதும். என்னால் சில நாட்களில் தேறிவிட முடியும். நாம் நண்பர்களாகவே பிரிந்துவிடுவோம்.' இப்படி என்னவெல்லாமோ சொன்னாளவள்...'

நாய் தொடர்ந்தும் பிலாக்கணம் பாடிக் கொண்டேயிருந்தது. நான் இடையே உட்புகுந்து கேட்டேன்.

'அவள் புறமாக நியாயமே இல்லை என்கிறீர்களா?'

நாய் தலையைச் சாய்த்து என்னைப் பார்த்தது. குரலில் உஷ்ணமெழப் பதில் சொன்னது.

'நமது வாழ்வு முறையே வேறு தெரியுமா? நடிகையின் தொப்புளில் பம்பரம் விட்டதையே வருடக்கணக்காகப் பேசியவர்கள் நாம். இங்கு சாயம் பூசி, அதில் சித்திரம் கீறி, கடுக்கணும் போட்டு அழகு காட்டுவது வாழ்க்கை முறை. அவள், வாழ்க்கை என்பது ஒரு முறைதான் அது சந்தோசகரமாகவே கழியவேண்டுமென்கிறாள். வாழ்நாள் பூராகத் தொடரவேண்டிய குடும்ப அமைப்பை விட, இளமையும், செல்வத்தினூடு பெறுகிற விடுதலையும் சந்தோசமும் முக்கியமென்றாளவள். கடைசியில், என்னைப் ஆழப் புதைத்துவிட்ட - கடுஞ் சொற்களையும் வீசி விட்டுப் போனாள் அவள்.'

'அப்படி என்ன சொன்னாள்?'

'பணம் ஒன்றிற்காக வாழ்வையே தொலைத்து நிற்கிற கபோதி என்றாள். எத்தனை வசதி வந்தபோதிலும், நடுக் கடலில் கூட, நாய் நக்கியே குடிக்கும் என்பதைப் போல, என்னை அப்படியே இருங்கள் என்றாள். அவளையும் சிதைத்து - என்னையும் சிதைத்துப் போட வேண்டாம் என்றாள் அவள்.'

பஸ் தூரத்தே வருவது தெரிந்தது. நாயிடம் பஸ் வருவதைத் தெரிவித்தேன். கடைசியாக அதை தேற்ற வேண்டி, இப்படிக் கூறினேன்.

'ஏன், மீளவும் ஒரு வாழ்வைத் துவங்கலாம் தானே...?'

நாய் சற்றே யோசிப்பது போலிருந்தது. பின் கூறியது.

'நான் ஆசைப்பட்ட பணம் , வீடு, நிம்மதி எல்லாமே அவளால் போயிற்று. எனக்கு நமதூர் பெண்தான் சரிப்பட்டு வரும். பத்திரிகையில் 'கௌரவமான வேலை பார்க்கும்' என இனி விளம்பரமும் செய்ய முடியா.

ஏனெனில் ஊர் பூராக என் கதை தெரியும். அதில் எனக்கு இஷ்டமுமில்லை. என்னதான் சுதந்திரம், பெண் விடுதலை பேசிப் பிரிந்து போனாலும், எனது தேவதை இருந்த இடம், இன்னொருத்திக்கு எப்படி போகும்? நான் இன்னமும் அவளைக் காதலிக்கிறேன், தெரியுமா?'

பஸ் அருகாகிவிட்டிருந்தது. நாயிடம் விடை பெற்றேன். எனக்கு அதன் மீது அனுதாபமெழுந்தது. எனது காதலில் கூட, கவனம் கொள்ள வேண்டுமென்ற நினைப்பை அது ஊட்டிற்று. அதனைத் திரும்பி நோக்கினேன். மீளவும் தனது தலையை இரு புறமாக ஆட்டத் துவங்கியிருந்தது. எனக்குக் கூட அதை ஒரு முறை செய்துபார்த்தால் என்ன எனப்பட்டது. செய்து பார்த்தேன். அது சொல்வதுவும், அதன் செய்கையும் சரிதானோ என்கிற எண்ணமும், அதில் ஈடுபாடும் எழத்துவங்கிற்று எனக்கும்.





# அகவெளி தீண்டல்

(சற்றே நீண்ட கதை)

தெஹிவலை பிரதான நாட்சந்தியில் கடற்கரையை நோக்கி வழிந்து செல்கிற புகையிரத வீதி. தினமும் இங்குதான், அவன் 'வேன்' எடுத்து, வேலைக்குச் செல்வது வழக்கம். அதில் நிறைய சௌகரியம் இருந்தது. வாயிலில் தொற்றியபடி பயணிக்க வேண்டியிராது. உடுப்பு கசங்கலில்லை. குறித்த வரிசைப்படி இருக்கை பிடித்து சௌகரியமாக உட்கார முடியும். மனித வெக்கை நாற்றமில்லை. எல்லாவற்றையும் விட அமைதியான, திட்டமிட்ட ஒழுங்குமுறை. திங்கள் முதல் வெள்ளிவரை கடந்த நான்கு வருட தின ஒழுங்கில் இதுதான் நடந்து வந்தது.

அவன் தெஹிவலை - கல்கிசை பிரதேச இலங்கை மின்சார சபையில் இளம் பொறியியலாளனாகக் கடமையாற்றுகிறான். பெயர் அரூஸ். நீண்ட உயரம், செவ்வக வடிவிலான, முழுக்க சவரம் செய்யப்பட்ட முகம். பிரகாசமான தீட்சண்யமிக்க கண்கள். கவலை ரேகைகள் இன்னும் படியாத அகல நெற்றி. ஓரமாய் வகிடெடுத்து படிய வாரிவிடப்பட்ட முடி. கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அணியப்பட்ட உடையொழுங்கு. பெரும்பாலும் சதுரமிட்ட அல்லது அகலவாக்கில் கோடுபோடப்பட்ட சட்டை. எப்போதும் கருப்புநிற சப்பாத்து. அரூஸ் அழகானவன் மட்டுமல்ல, அழகை மெருகேற்றவும் தெரிந்தவனாயிருந்தான். வறுமை அவன் வாசித்தறிந்தது. அவன் வாழ்வு இதுவரை எவ்வித தடங்கலுமின்றி ஒழுங்காகவே சென்றுகொண்டிருந்தது. நண்பன் சமீம், வாசிகசாலை,

வாரம் ஒரு சினிமா, உறவினர் வீடு செல்லல்... இப்படி எந்த சிக்கலுமற்ற ஒரு செல்லுகை அவனிடம் இருந்தது.

எல்லா நிகழ்வுகளும் - அதிர்வுகளும் ஒரு எதேச்சையான சாதாரண நிகழ்வில்தான் துவங்குகிறது என்பர். நாம் பார்க்கிற பார்வை, அப்போதைக்கு நம்மில் விழுகிற எண்ண வித்து சம்பவங்களில் மூலவித்தாயிருக்குமென்பர். இது, அரூஸ் அறியாததல்ல. எனினும் மனதும் அது தேடுகிற, போடுகிற கணக்குகளும், நம்மை மீறியதாகவே இருந்துவிடுவதில்லையா? அப்படித்தான், அன்றைய புதன் காலை அவளின் வருகையும் இருந்தது. அவளுக்கு சற்றே மெலிந்த நீண்ட உடல் வாகு. வெளிர் நீல நிறத்தில் உடலைப்பற்றிய சல்வார் கமிஸ். நீலமும், மஞ்சலும் கலந்த துப்பட்டா, மார்பை மூடியிருந்தது. இடது தேளில் தோல்பை தொங்கியது. வலது கையில் புத்தகம், தினப்பதிவேடு (டைரி?) என்பவை தாங்கப்பட்டு, வலது மார்புடன் அணைக்கப்பட்டு இருந்தது. 'வேனுக்காகக் காத்திருந்த வரிசையில் அவளும் நின்றிருந்தாள். அவளின் பின்னாக சற்றே இடைவெளி விட்டு அரூஸ். அவன் அவளின் பின்புறம் நோக்கினான். தோளின் பின்னே கூந்தல் விரிந்துகிடந்தது. இடுப்பின் வளைவு, பிட்டப்பகுதியின் மேலெழுந்து தாழ்ந்த ஒழுங்கு, குதிப்பாத வெண்மை, திண்மை அனைத்தும் பார்த்தான். பாத நீட்சி பார்க்கத் தூண்டிற்று. அவளிடமிருந்து மல்லிகை வாசம்... அதுவல்ல அது, ஏதோ ஈர்க்கிற வாசம் அவனை அலைக்கழித்தது. திடீரென அவள் பின்புறம் திரும்பி அவனை நோக்கினாள். அவன் அவளின் பார்வை தவிர்த்தான்'.

ஆட்களின் வரிசை முன்னகர்ந்தது. அவள் வேனினுள் உள்ளானாள். அரூஸ் படியேறினான். அவளின் புறம் பார்த்தான். இடது கைப்பையை மடியினுள் முன்னகர்த்திக் கொடுத்தது. வலதுகை பிட்டப்பகுதியில் தாழ்ந்து துணியை காலுடன் அணைத்து கொடுத்தது. பின் சட்டென உட்கார்ந்தாள். முகம் மலர்ச்சியுடன் வீற்றிருந்தது. காலை நேர உற்சாகம், அதிகாலைக் குளியல் எல்லாம் சேர்ந்து புத்துணர்ச்சியைக் கொடுத்திருந்தது. அரூஸுக்கு இது புது அனுபவம். எந்தப் பெண்ணும் அவனை இப்படி அலைக்கழிக்கிற, எண்ணத்தைச் சிதைக்கிற மாதிரி இருந்ததில்லை. மனம் அவள் புறம் அலைபாய, உடல் மட்டும் இருக்கை தேடி உட்கார்ந்தது. ஒவ்வொரு தரிப்பிடம் வந்தபோதும் 'இறங்குகிறாளா?' எனப் பார்த்தபடி பயணித்தான். எட்டாவது தரிப்பிடத்தில் இறங்கினாள். இருக்கை விட்டு எழுந்ததும், அவன் புறம் முகம் திரும்பினாள். மெல்லிய புன்முறுவல் அதில் இருந்ததாகப் பட்டது. அவனின் மனம் உற்சாகக் கூக்குரலிட ஆரம்பித்தது. அடக்கினான், 'சக பயணிக்குரிய மரியாதை





அவ்வளவுதான் அது' இன்றைய திங்கள் சந்தோசமாகத் துவங்கிவிட்டிருந்தது அவனுக்கு.

அரூஸ், அடுத்துவந்த இரு காலைகளிலும் அவளைப் பார்த்தான். புதிதாக மலர்ந்த பூப்போல மாசறு அழகில் இருந்தாள். மிக எளிமையான அலங்காரம் அவளுடையது. நடு வகிடெடுத்து, பின்னால் வாரிவிடப்பட்ட கூந்தல். 'ஓவல்' வடிவ முகம். நீண்ட நாசி. உருண்டையான, முட்டைக் கண்கள். நீண்ட கழுத்து. அதில் மெல்லியதாக செயின், மெல்லிய வர்ணங்களில் உடலை இறுக்கிப் பிடிக்காதபடி உடுத்து வருகிற பாங்கு. எளிமையான பாதணிகள். சிறு இடைவெளிவிட்டு மெல்லிய அடியொற்றுகிற நடையொழுங்கு. அப்பப்பா எத்தனை அழகு அவள். அதைவிட அந்த ஆழ் அமைதி. இருக்கையில் உட்கார்கிற நேர்த்தி. அரூஸ் எந்தப் பெண்ணிலும் இப்படி உருகியதில்லை. சும்மா ஆடுகிற பேய்க்கு சலங்கை கட்டிவிட்டது போல அவள் வைத்திருந்த புத்தகம் இருந்தது. இரு சகோதரர்கள், என்கிற தலைப்பு அவள் புறம் ஆவலை இன்னும் கூட்டிற்று. அவளை அண்மிக்க முடிவுசெய்தான். மெல்லிய புன்முறுவல் செய்தான். அவளும் புன்னகைத்தாள்.

'ஹலோ...'

'ஹலோ...'

'எங்க வேலைக்கா?'

'ம்... நீங்க?'

'நானும்தான். எங்கே வேலை செய்கிறீர்கள்?'

இதற்கு அவள் பதில் தரவில்லை முகத்தில் மந்தகாசம் தெரிய சிரித்தாள். அரூஸுக்கு கிடைக்கவேண்டிய பதிலை விட அது அழகாயிருந்தது.

கிழமையின் கடைசி நாட்களான வியாழன், வெள்ளி இரு தினங்களும் அவள் வரவில்லை. சனியும் ஞாயிறும் இடையிடையே அவளின் முகம் வந்துபோனது. அடுத்த திங்கள் பெரிய எதிர்பார்ப்புகளுடன் வந்தது. காத்திருந்தான், குறித்த நேர வண்டியை விட்டும் காத்திருந்தான். ம் ஹூம் வரவேயில்லை அவள். மனதில் சற்றே சோர்வு படர்ந்தது. சுகமில்லையோ? இடமாற்றமா? குழப்பமாயிருந்தது. அவளின் தொலைபேசி இலக்கத்தையாவது பெற்றிருக்கலாம். அந்த அளவில் -

தான் யோசிக்கிற அளவில் அவள் நெருங்கி வரவில்லை என்பது நினைவில் பட, வெட்கமுற்றான். எவ்வித உட்சாகமுமின்றி அன்று அலுவலகம் போனான். அடுத்த நாளின், செவ்வாய்க்கிழமை பிற்பகல் பொழுது அது. இன்னும் அரை மணியுள் அலுவலகம் மூடப்பட்டு விடும். அப்போதுதான் அரூஸ் காதில் அந்த இனிமையான குரல் வந்து விழுந்தது.

'தயவுசெய்து, உங்களால் உதவ முடியுமா?'

'ஏன், இல்லாமல்?'

நண்பன் சமீமின் பதில் வெளிவரவும் அரூஸ் தலைநிமிர்த்தி அவளைக் காணவும் பொழுது சரியாயிருந்தது. அவள்தான். தஸ்லீமா. வெளிர் நீல உடுப்பில் பளீரிடுகிற சிரிப்புடன் நின்று கொண்டிருந்தாள். அரூஸ் கதிரையை பின்னகர்த்தி எழுந்தான். அவர்களை அண்மித்தான். அவள் அவன்புறம் திரும்பினாள்.

'ஹலோ' என்றாள்.

'ஹலோ..., என்ன ஆளைக் காணவே இல்லை?'

நண்பன் சமீமின் முகத்தில் ஆச்சரியம் இருந்தது. தவிர்த்தான். இன்னும் அவளின் அருகானான்.

'உம்மாவுக்கு சுகக்குறைவு. இப்போது பரவாயில்லை'

'இங்கு என்ன வேலையாக...'

'எனது மாமா வீடு அருகில்தான் இருக்கிறது. நீங்கள் இப்போது 'ப்ரீ'யா?'

'என்ன கேள்வி இது? விஷயத்தைச் சொல்லாமல்?' அவசர அவசரமாக அவளது மாமா வீட்டுக்கான மின்சார மாதப் பற்றுச் சீட்டின் குழறுபடியைச் சரி செய்து கொடுத்தான். கடைசியாக,

'ஒரு பத்து நிமிடங்கள் காத்திருங்கள். வந்துவிடுகிறேன்' என்றபடி உள்ளாய்ப் போனான். சமீம் எவ்வித சுவாரஸ்யமுமின்றி அவன் இயங்குதலை வேடிக்கை பார்த்தபடி இருந்தான்.





அரூஸும் தஸ்லீமாவும் ஐந்துமணிக்கு ஒன்றாகக் காரியாலயம் விட்டு வெளியாகினர். நடந்தே ஹோட்டலை அண்மித்தனர். சிற்றுண்டி எடுத்தனர். பேசினர், பேசினர்... பேசிக்கொண்டே..., ம் ஹூம் அப்படி இல்லை அவள் தொடர்ந்தும் பேசிக்கொண்டிருக்க அரூஸ் ஆச்சரியம், வியப்பு மேலிட 'உம்' போட்டுக் கொண்டிருந்தான், என்பதுவே சரியானது. அரூஸைப்பற்றி சகலதும் தெரிந்திருந்தாள் அவள். இத்தனை வயதில் இன்ன சம்பவம் எனப் பழையது பேசினாள். அவனது விருப்பம், தேடுகை எல்லாமே விலாவாரியாக ஒப்புவித்தாள். அரூஸினால் ஆச்சரியம் தாள முடியாதிருந்தது. தன்னை முழுக்கவே மறைந்திருந்தபடி ஒரு பெண் - அதுவும் இத்தனை சௌந்தர்யமான மடந்தை வேவு பார்த்தபடி வளர்ந்திருக்கிறாள் என்ற நினைப்பே புல்லரிக்க வைத்தது. அவளை அறிய அவனில் அவா எழுந்தது. அது அவா... என்பது உண்மையே..., ஏனெனில் அவள், அவளை அறிய ஒருபோதும் இடம் கொடுத்தாளில்லை. எல்லாவற்றிற்கும் 'அது எதற்கு?' என்பதைப் பதிலாக்கி விட்டு முகம் மலர்ந்த சிரிப்புடன் நின்றாள். அவள் போட்டிருந்த திரையை விலத்தி அரூஸால் அப்போதைக்கு உள்ளே செல்ல முடியவில்லை, அவள் அதை அனுமதிக்கவுமில்லை. கடைசியாக எட்டு மணியளவில், நாளை சந்திப்பதாகக் கூறி இருவரும் பிரிந்தனர்.

'நாளை' என்பது 'இன்றாகி' வந்தது. ஆனால் அவள் வரவில்லை. அரூஸுக்கு தன்னைப்பற்றிய எல்லா விபரமும் இவளால் விரல் நுனியில் வைத்திருக்க எப்படி சாத்தியம் என்கிற ஆச்சரியம் இன்னமும் இருந்தது. எப்படி அறிந்தாள்? யார் இவள்? அவனின் இயல்புகளான புத்தகப் புழு, ஆன்மீகம், கராத்தே, உதைபந்தாட்டம் மட்டுமன்றி காதல் தோல்வியைக் கூட ஒப்புவிக்கிறாள். கடைசியில் எதற்கு இந்த மறைத்தொழுகும் கண்ணாமூச்சி ஆட்டம்? அரூஸ் வெள்ளி மட்டும் இதே தவிப்புடன் இருந்தான். அவள் அதுவரை வந்தாளில்லை, சமீமுக்கு அரூஸைப் பார்க்க பாவமாயிருந்தது. எத்தனை சந்தோசகரமான பேர்வழி அவன். இப்படி தீவிர சிந்தனையில், வெறித்தபடி உலாவுவது காண மனதுக்குள் வேதனையாயிருந்தது. வேலை முடிந்து செல்லும் போது அவனையும் தன்னுடன் அழைத்துச் செல்ல முடிவு செய்தான்.

தெஹிவலை கடற்கரை, கொன்கோட் சினிமா, ஹோட்டலில் இரவுணவு முடித்துவிட்டு, அரூஸுடன் சமீம், அறைக்கு வந்துசேர பதினொரு மணியாயிற்று. சமீம் அப்போதும் திருப்தி அடைந்தானில்லை. அரூஸுக்கு அவனின் இத்தனை பீடிகையும் எதற்கு என்பது தெரியாமலில்லை. தன் பொருட்டு அவனும் கவலை கொள்கிறான் என்பது கூச்சம் தந்தது. தனது அந்தரங்கத்தில் தலையிடும் பொருட்டல்ல

அது என்பதை அவன் அறிவான். ஏனெனில் சமீம் அந்த வகை ஆளல்ல.

சமீம், யதார்த்தவாதி. மனதில் படுவதை, உள்ளபடியே சொல்கிறவன். எதையும் திறந்து, நிர்வாணமாக்கிப் பார்க்க முனைபவன். நிறைந்த தைரியசாலி. அவனது அறிவும் மனதும் சரியென்று சொல்வதை நம்புகிறவன். அதில் எந்தக் கூச்சமும் கொள்ளாதவன். யாரையும் மனதறிய ஏமாற்றியதில்லை. ஏமாற்றப்பட்டதுண்டு. ஆனால் அடுத்த பயணம் அதே நபரால் ஏமாற்றப்பட சாத்தியமேயில்லாதவன். தவிர்... தவிர்த்தல், உனக்குச் சந்தோசமாக இல்லையா விட்டொழி., இதுதான் சக மனிதத் தொடர்பில் அவன் போக்கு. அதைவிட அவனிடம் துகிலுரிந்து தம்மைப் பார்க்கிற தைரியம் அனேகம் பேருக்கு இல்லாததால் அவனது நட்பின் வட்டம் மிகச் சிறியது. அரூஸுக்கு அவன் வியப்பானவன், விரும்பத்தக்கவன். நம்பிக்கையானவன் எந்த வேஷங்களுமற்று, சிக்கலுக்கும் உட்படாத, உட்படுத்தாத நட்பு விசுவாசம் மிக்கது. வாழ்க்கையைச் சந்தோசமாகப் பார்க்க, சில தைரியங்கள், சமூகத்தின் மீதான எதிர்வினைகள் வேண்டும். அது அவனிடமிருந்தது. அரூஸுக்கு ஜே. கிருஷ்ணமூர்த்தி, இப்னு அரபி (ரஹ்) எல்லாம் தெரியவைத்தவன் அவன். அவன் நட்பு ஆதரிக்கத்தக்கதே என சிலாகிப்பான்.

'உடை மாற்றிக் கொள்கிறாயா? சற்றே முகம் கழுவினால் என்ன?...'

'வேண்டாம் சமீம்... வீடு போனதும் பார்த்துக் கொள்ளலாம்...'

சமீம் சாரண் அணிந்து, கட்டிலில் தலையணையை முட்டுக் கொடுத்து, உடலைச் சாய்த்திருந்தான். அரூஸ் அவன் முகம் பார்க்கும்படி கதிரையில் உட்கார்ந்திருந்தான். சமீம் இனியும் காலம் கடத்த விரும்பவில்லை. நேரடியாக விடயத்தைத் துவங்கினான்.

'சரி, இப்போதாவது சொல், உன் பிரச்சினை என்ன?...'

'என்ன கேட்கிறாய் நீ?...'

'நீயும், முட்டாளாகி, என்னையும் ஆக்க நினையாதே...'

சமீம் இதை உரத்த குரலில் சொன்னான். இரு அறை கொண்ட வீடு அது. கூட யாரும் இல்லை. எவ்வளவு சத்தமிட்டாலும் அங்கு கேட்க





ஆளுமில்லை. தனிமனித சுதந்திரம் அத்தனை உசத்தி அவனுக்கு. வாழ்வின் முழு அனுபவிப்பை, சிக்கலற்ற தன்மையை கொண்டாடுகிறவன். அரூஸை இரக்கமொழுக நோக்கினான். பின் சிகரட் ஒன்றை எடுத்து நீட்டினான். அவன் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான். அரூஸ் பற்ற உதவி செய்தான். மீளவும் கேட்டான்,

'யார் அந்தப் பொண்ணா?...'

அரூஸ் மௌனமானான். 'சரி' என்பதாக சமீம் எடுத்துக்கொண்டான்.

'நான் உன்னிடம், இந்த விடலைத்தனம் இருக்குமென எதிர்பார்க்கவேயில்லை. கண்டவுடனேயே காதலா... என்ன அபத்தமிது?...'

அரூஸுக்கு அவனின் கிண்டல் கொஞ்சம் கோபம் கொள்ள வைத்தது.

'நீதான் இப்போது மடத்தனமாகப் பேசுகிறாய். என்னைப் பற்றிய எல்லா விபரமும் சொல்கிறாள், அத்தனையும் தெரிந்திருக்கிறாள். எல்லாவற்றையும் விட அவளின் அமைதியான அழகு.... உண்மையில் நான் அவள்பால் வீழ்ந்து விட்டேன் சமீம்...'

கடைசி வார்த்தையில் அவன் தலை தாழ்ந்திருந்தது. சமீம் உடனேயே சொன்னான்,

'அவளிடம் சொல்லியிருக்கலாம். முடிவு தெரிந்திருக்கும். உனக்கும் இத்தனை குழப்பமிராது...'

'என்னால் முடியவில்லை. அந்தக் கண்களின் வசீகரம் சொல்ல விடவில்லை.'

சமீம் ஒரு திகைப்புடன் அரூஸை நோக்கினான், பின் சொன்னான்.

'அதேதான் நானும் சொல்கிறேன். அந்தப் பெண்ணின் கண் எனக்கும் சந்தேகம் அளித்தது. அதன் தீவிரம் பலமாயிருந்தது. இத்தனை சந்தேகப்படுகிற உனக்கு எதற்கு, தேவையற்ற முயற்சி. வேண்டாம் விட்டுவிடு. அதைத்தான் பட்டினத்தாரும் சொல்லியிருக்கிறார்., படமெடுத்தாடும் பாம்பை நம்பலாம், சேலை கட்டிய மாந்தரை நம்பாதே என்று...'

சமீம் மேலே பேச இடம் வழங்காதபடி அரூஸ் சப்தமெழக் கத்தினான்.

'தயவுசெய்து, நிறுத்து உன் உபதேசத்தை. நான் வசீகரிக்கிற கண் என்கிறேன், நீ விஷம் தேய்ந்ததென்கிறாய்...'

சமீம் அமைதியானான். சற்று நேரம் அவனைத் தீவிரமாகப் பார்த்தான். பின் சொன்னான்,

'சரி, அப்படியானால் நல்லதே, அடுத்தமுறை சந்திக்கும்போது, உனது எண்ணத்தை அவளிடம் சொல்ல மறந்து விடாதே...'

அரூஸ் மௌனமானான். சமீமுக்கு இனி இதில் பேச எதுவுமில்லை எனப்பட்டது.

அரூஸ் அன்றிரவு வீடு செல்ல இரண்டு மணியாயிற்று. அவனின் வீடு. (அதை 'அனெக்ஸ்' என்பர்) மாடியில் இருந்தது. ஒரு அறை, முன்கூடம், சமையலறை, குளியலறை கொண்ட தனிப்பரப்பு அது. மாடி போய்வர தனியாகப் படிக்கட்டு இருந்தது. அரூஸ் அறைத் தொகுதியை அண்மித்தான். அது, முழு இருளில் மூழ்கிக் கிடந்தது. மாடிப் படியில் கால் வைத்தான்.

"யாரது?" வீட்டுக்காரர் ஜன்னல் திறந்து குரல் கொடுத்தார். அருமையான சிங்களச் சகோதரர். ஜன்னல் வழியினூடு மொத்தக் குடும்பமும் தொலைக்காட்சியில் மூழ்கியிருக்கக் கண்டான். 'நான் தான்' எனச் சொன்னபடி ஏறத்துவங்கினான். கடைசிப் படியில் கால் வைத்தபோது அந்த வாசத்தை உணர்ந்தான். வராண்டாவில் நடந்து முன் கதவை அண்மிக்க வாசத்தின் செறிவு கூடியிருந்தது. மரவள்ளிக் கிழங்கை அவிக்கிறபோது வெளிப்படுகிற வாசமது. அரூஸ் காற்றை உள் இழுத்து மூச்சு வாங்கினான். காரணமின்றி அந்த வாசம் அவனுக்குப் பிடித்திருந்தது.

கதவு திறந்ததும், 'சுவிச்' போடும்படியாக அறையொழுங்கு இருந்தது. இரு முறை அழுத்தினான். ஒரே நேரத்தில் வெளிவராண்டா, முன் கூடம் இரண்டும் பிரகாசமாகின, கூடவே அவனுக்கு அதிர்ச்சியும் ஏற்படலாயிற்று. அவனின் அசையும் நாட்காலியில் அந்த அழகு தேவதை உட்கார்ந்திருந்தாள். இரவின் ஒளியில் பளிரிடும் மஞ்சள் நிற சல்வாரி அவளின் உடலைக் கவ்வி இருந்தது.





தோள்களினூடு வழிந்த துப்பட்டாவின் இரு துண்டுகளிடையே நீண்ட கருங்கூந்தல் படிந்து, பரவிக் கிடந்தது. அவனுக்கு அவளின் இருப்பும், வசீகரமும் மயக்கிற்று. யோசிக்க மறந்தான் அவன், முகத்தில் பரவசம் மேலெழ, அவளின் முன்னானான். அவள், அவன் ஏதாவது பேசட்டுமென முகம் பார்த்தபடி இருந்தாள். கதவு தாளிட்ட அறையுள், இத்தனை அழகிய இளம்பெண், தன்னந் தனியே... அரூஸுக்குப் பேச உடனேயே பொருள் கிடைத்துவிட்டது.

'மூடிய வீட்டினுள் எப்படி வந்தீர்கள்?'

'அப்பாடா, இப்போதாவது பேசினீர்களே...'

'இது, என் கேள்விக்குப் பதில் அல்லவே...'

'ம் ஹும், ஒரு இளம் பெண் நினைத்தால் உலகில் எதையும்...'

அரூஸ் அவளை இடை மறித்தபடி சொன்னான்,

'இதைத் தமிழ் நாட்டில் சொன்னால் எடுபடக் கூடும்'

'ஓஹோ.., அப்படியானால் இங்கு என்ன வாழ்கிறதாம்?'

அவள் - தஸ்லீமா இதைச் சொன்னபோது அவளின் இதழ்க் கடையோரம் புன்னகை இருந்தது. அரூஸுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

'ஏழு நாட்களும் தேடு, தேடென்று தேடினீர்கள். அதுதான் ஒரு 'விசிற்' தந்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்'

'உங்களுக்கு யார் சொன்னது? அப்படித் தேடினோமென்று?'

'நான்தான், தினமும் பார்த்தேனே...'அவள் முகத்தில் மீண்டும் பரிகாசச் சிரிப்பு வந்து உட்கார்ந்தது. பரம கள்ளி என அவன் நினைத்தான். முழுக்கவாய் வேவு பார்த்துவிட்டு, அவனைப் பலவீனமாக்கிய பின், முகத்திலறைந்தபடி சிரிக்கிறாள். அரூஸ் பேச்சை மாற்ற நினைத்தான்.

'அது சரி, வீட்டில் தேடமாட்டார்களா?'

'எல்லோரும் பேருவளை நானா வீடு போயிருக்கிறார்கள். வீட்டில் நானும் தம்பியும் தான். தம்பி வெளியே நிற்கிறார்'

அடுத்து பேச்சு எந்தத் திசையென்றில்லாது வேகமாகப் படர்ந்தது, வளர்ந்தது. நேரம் போவது தெரியாமல் இருவரும் பேசியபடியே இருந்தனர். அரூஸுக்கு அறைக்குள் எப்படி வந்தீர்கள் என்பதை மீளக் கேட்க மறந்தே போய் விட்டது. பின்னர் ஒருபோதும் அதைக் கேட்கும் அவசியமே அவனுக்கு ஏற்படவில்லை. அவளின் அழகில், கொஞ்சும் குரலில், நளினத்தில், வளைவுகளில், பார்வையின் வீச்சில் (கடைசி மூன்றையும் ஞாபகம் கொள்ளுங்கள்) மயங்கிக் கிடந்தான் அவன். அவளது வருகையால் அவன் வீடே அலங்காரம் கொண்டிருந்தது, புது அழகு பெற்றிருந்தது. எல்லாப் புத்தகங்களும் சீராக அடுக்கப்பட்டிருந்தது. எல்லாத் தூசு, குப்பைகளும் அகற்றப்பட்டிருந்தன. கட்டில் விரிப்பு சரியாக. தலையனைகள் குறித்த இடத்தில். பாதணிகள் சமர்த்தாக... அவற்றின் இடத்தில், அறையைப் பார்க்க சந்தோசமாயிருந்தது அவனுக்கு.

அரூஸின் சமையலறை, அவசர மின்சார வகைக்குரியது. அங்கும் தஸ்லீமாவின் கைவரிசை தெரிந்தது. கறி, கரிப்படிவுகள் காணாமல் போயிருந்தன. கோப்பை, பீங்கான், கரண்டி, கத்தி எல்லாமே கழுவப்பட்டு சுத்தமாக துடைக்கப்பட்டு சிறிய பரப்பில் அழகு செய்தன. அரூஸின் மனதில் மகிழ்ச்சி துளிர்விட்டது. வாயில் 'ஆஹா என்ன நேர்த்தி' என வார்த்தைகள் வந்தன. அவளாகவே முன்வந்து பால் காய்ச்சினாள். கொண்டு வந்திருந்த 'பெற்றீசை' 'மைக்ரோ அவனில்' சூடு செய்து பரிமாறினாள், கூடவே வாழைப்பழமும். வந்த முதலன்றே வரிந்து கட்டிக் கொண்டு இயங்கிய விதம் அவனை வியப்பின் உச்சிக்குக் கொண்டு போயிற்று. அவள், அவன் சாப்பிடுகிற அழகைப் பார்த்தபடி இருந்தாள். பின்னர் வெறும் பாலை மட்டுமே அவள் பருகினாள். அதுவும் உதட்டில் மொதுவாக வைத்து, சப்தமெழக் கூடாதே என்கிற எச்சரிக்கையுடன் உறுஞ்சினாள். மீளவும் சமையலறையை ஒழுங்கு செய்தாள். பின் அவள் அவசரமாகினாள்.

'வீட்டில் வந்து விடுவார்கள். நான் போகவேண்டுமே..' எனப் பரபரத்தாள்.

'இவ்வளவு சீக்கிரத்திலா?'

இதற்கு அவள் பதில் சொல்லவில்லை. சுவர்க் கடிகாரத்தைக் கை சுட்டிற்று. நேரம் நான்கு நாற்பது. அரூஸ் 'அப்படியானால், சரி' எனப் பதில்





சொன்னபடி எழுந்தான். அறைக் கதவைத் திறந்தான். வழியை சற்றே மறைத்தபடி நின்றான். அவள் அவன் மீது உடல் படவே வெளியேற வேண்டும். அவள் முன்னோக்கி நடந்தாள். அவனின் அருகானதும் நின்றாள். அரூஸ் அவளின் வலது கையைப் பற்றினான். அவள் பிகு பண்ணவில்லை. விரல்பிடித்து உயர்த்தினான். வாயிலில் வைத்து முத்தமிட்டான். அவளின் தலை தரை பார்த்தது. பின், கைகளை மெதுவாக விடுவித்தபடி சொன்னாள்,

'நான் போய் வருகிறேனே...'

'நாளை, வர முடியுமா?'

'சரி'

விரைவாக வெளியேறிப் போனாள் அவள். அரூஸுக்கு அன்றிரவு தூக்கம் தொலைந்து போயிற்று. மனது முழுக்கச் சந்தோசமாக இருந்தது.

அடுத்தநாள் வந்தது. அதற்கு அடுத்த நாளும் வந்தது, ஆனால் தஸ்லீமா வரவில்லை. வீதியிலும் தரிசனம் தந்தாளில்லை. அரூஸுக்கு மீளவும் 'சே' என்றாயிற்று. சமீமுக்கு இவனைப் பார்க்க வேடிக்கையாகக் கூட இருந்தது. சமீமுக்கு பெண் என்பது, சற்றே எப்போதும் தூரமாகவே பேணப்பட வேண்டியவள் என்கிற கருத்துண்டு. இந்த உருகுதல், பசலை படர்தல் என்பவை எழுத, வாசிக்க மட்டுமே இனிதானவை, தோதானவை என்பது அவன் வாதம். உணர்வு பூர்வமான பெண்ணுடன் மிக நெருங்குதல் வாழ்வைச் சிக்கலாக்கி வைக்கும் என அடிக்கடி சொல்வான். அவளின் தேவைகளை ஈடுசெய். மற்றப்படி உயிரே என உருகி வேஷமிடாதே என்பான். பாலியல் தேவையின் பொருட்டு சேர்கிறோம் - அதைவிடுத்து ஈருடல் ஓருயிர் என்கிற போர்வை எதற்கு? நீ அவளையோ, அவள் உன்னையோ விளங்கி ஆளை ஆள் சார்தலும், சகித்தலும், பின்னர் விகிதம் பேசி உள்ளாய் முறுகுதலும்... இவை எதுவும் எனக்கு வேண்டியதில்லை. என்னதான் தாம்பத்தியம், அன்பு கணவன் -மனைவி உறவு பேசினாலும் ஒவ்வொரு மனிதனும் தனித்தனி உலகு, அது, இன்னொருவருக்காக மாறுதல், மாற்றுதல் சாத்தியமில்லாதது...

அரூஸுக்கு சமீமைப் பார்க்க வியப்பாயிருக்கும். எத்தனை சிக்கலற்ற, இலகுவான தேற்றங்களுடன் வாழ்க்கையைப் பார்க்கிறான். சில வேளை இது தான் நிஜமானதா? இவன் சொல்வதைப் போல, எல்லா உறவுமே தேவையின் பொருட்டு என்பதாயின், எந்தத் தேவையின் பொருட்டு,

இத்தனை மனச்சிக்கலுக்கு ஆளாகி அவளின் தவிப்பில் அலைக்கழிகிறேன் நான். அரூஸுக்கு மனதில் குழப்பம் எழுந்தது. சமீமை நோக்கிக் கேட்டான்.

"நீ தத்துவ ரீதியில் வாழ்க்கையைப் பார்க்கிறாய். நமது குடும்பம், தாய், தந்தை, சகோதர, சகோதரி எல்லோரது வாழ்வையும் கொச்சைப்படுத்த முனைகிறாயோ என்று படுகிறது..."

சமீம் அரூஸைப் புன்னகை தவழுகிற முகத்துடன் பார்த்தபடி இருந்தான். அரூஸுக்கு கொஞ்சமாகக் கோபமெழுந்தது. அவனைக் கேட்டான்,

'இதற்கு என்ன அர்த்தம்?'

'அரூஸ் உண்மையை நிதர்சனமாக எதிர்கொள்ளத் தயங்குகிறாய், என்று அர்த்தம். என்னை அல்லது எனது தாயை, சகோதர உறவுமுறையை இங்கு பேசுவதனால், நான் வேறு திசையில் பேசுவேன் என எதிர் பார்க்கிறாயா? இதுவும் மனது, புத்தியை கீழாக்கி வைக்கப் போடுகிற பழைய தந்திரம்'

அரூஸ் மௌனமானான். அவனை வெறித்தான். பின்னர் கேட்டான்,

'அப்படியானால், தஸ்லீமாவை நான் காதலிக்கவில்லை என்கிறாயா?...'

'காதல்... அப்படியில்லை, அவளிடம் உனக்கு என்ன தேவையின் பொருட்டு ஈடுபாடு வந்தது என்று பார் என்கிறேன்...'

'அதாவது...'

'அதேதான், உனக்கு அவளைப் பிடித்திருக்கிறது, என்பது உடல் ரீதியான தேவையின் பொருட்டே என்கிறேன். உடல் மெலிந்த, முலை பருத்த, வெண்ணிறப் பெண் என்பதை விடுத்து வேறென்ன அவளைப் பற்றித் தெரியும், உனக்கு?'

'மிகவும் கொடூரமாய் பேசுகிறாய் நீ?...'

சமீம் இப்போதும் புன்னகையுடனிருந்தான். அரூஸுக்கு அவனிடம் மேலும் இதைப்பற்றிப் பேசப் பயமாயிருந்தது. எனினும் சிறிய ஆவல் மேலெழக் கேட்டான்,





'நீயாரையாவது காதலித்திருக்கிறாயா? உனக்கு பெண் என்பது வெறும் உடம்பு மட்டும்தான். அதை விடுத்து, இயந்திரத் தனமான உனக்கு இதையெல்லாம் புரிந்து கொள்வது கஷ்டமானது?...'

'தயவு செய்து, கோபப்பட்டு, பின்னர் நீயே வெட்கப்படும்படியான வார்த்தைகளைக் கொட்டிவிடாதே...'

'சரி, நீ கௌதமியைக் காதலிக்கவில்லையா? அது இல்லாமல்தானா படுக்கையைக் கூடப் பகிர்ந்து கொள்கிறீர்கள்?...'

அரூஸ் இதைக் கேட்டதும், சமீமின் முகம் இறுக்கமாயிற்று. சற்று நேரம் இருவரும் மௌனமாயினர், பின்னர் சமீம் சொன்னான்,

'அரூஸ், நீ என்னைக் கோபம் கொள்ள வைக்கிறாயா? முந்திய நாளிரவு கூட கௌதமி இங்குதான் தங்கினாள். எங்களிடையே வேஷமில்லை. எந்த விட்டுக்கொடுப்புமில்லை. அவரவர் தேவை எதுவென்பதில் தெளிவுடனிருக்கிறோம். சமூக ஆக்கிரமிப்பு அல்லது சட்டங்களினூடான எந்த விலங்குகளுமின்றிப் பழகுகிறோம். பிடிக்கவில்லையாயின், எந்தச் சங்கடமுமின்றி, நட்புடன் பிரிந்துகொள்கிற தெளிவுடனிருக்கிறோம்... அது சரி, நான் சொன்னது பிடிக்கவில்லையாயின் விட்டு விட உன்னிடம் சுதந்திரமிருக்கிற போது, எதற்கு காயப்படுகிற வார்த்தைகள்...'

அரூஸுக்கு வெட்கமாகப் போயிற்று. சிகரெட் தேவைப்பட்டது. பற்ற வைத்தான். வெளிவருகிற புகை மூட்டத்தை வெறித்தான். சற்று நேரம் விட்டுச் சொன்னான்,

'சமீம், மன்னித்துக் கொள். எனக்குக் குழப்பமாயிருக்கிறது. அத்துடன் அவளின் உடம்பை யாசிக்கிறேனா எனக் கேட்டதும் கோபப்பட்டு விட்டேன் போலிருக்கிறது...'

சமீம் அவன் புறம் கை நீட்டினான், பற்றிய சிகரெட்டை நீட்டினான். வாங்கிப் புகைத்தான். இருவரிடையே மௌனம் குடி கொண்டது.

அரூஸ் அறைக்குச் செல்ல நள்ளிரவு ஆயிற்று. படிக்கட்டில் கால் வைத்தபோது மரவள்ளி வாடையை இன்றும் சுகித்தான். காரணமின்றி தஸ்லீமா நினைவில் வந்து போனாள். தென் மேல் பருவக் காற்று வீசுகிற காலமது. கிழங்கு அறுவடைக் காலமல்ல அது. பின் வீட்டுக்காரருக்கு இன்னும் எப்படி? என்கிற சந்தேகத்துடன் அறையைத்

திறந்தான். ஒளி வெள்ளம் அறையுள் பரவியபோது, அவனைப் பார்த்தபடி, அதே மலர்ச்சியான சிரிப்புடன் தஸ்லீமா உட்கார்ந்திருந்தாள்.

தஸ்லீமா இன்று ஊதா நிறத்தை உடலெங்கும் வீசியிருந்தாள். சாறி, ஜக்கெற், காதுத்தோடு, மாலையின் பதக்கம், கை வளையல்கள்... எல்லாமே ஒரு கலரில் தேர்ந்தெடுத்து என்றுமில்லாதபடி இறுக்கமாக அணியப்பட்டு... என்ன அழகாக ஜொலித்து நின்றாளவள். அரூஸுக்கு முதலில் மலைப்பும், பின்னர் சற்றே கோபமும் எழுந்தது.

'உங்களைக் கண்டு மூன்று நாட்களாயிற்று. அடுத்த நாள் வருவதாகச் சொன்னவர்தானா நீங்கள்?'

அரூஸ் இதைச் சொல்லும் போது, அவள் கதிரையை விட்டெழுந்தாள். அவனருகாகினாள். அவனின் வாயில் விரல் வைத்து, 'மேலே பேசாதே" என சமிக்ஞை செய்தாள். குரலில் ஏக்கம் தெரிய கெஞ்சுகிற குரலில் சொன்னாள்.

'வீட்டை விட்டு எல்லா நாளும் ஒரு பெண்ணால் வந்துவிட முடியுமா? எனது தவிப்பும், பதட்டமும் உங்களுக்கெங்கே புரியப் போகிறது?...'

'சரி... சரி... பின்னேரத் தரிசனமாவது தந்திருக்கலாமல்லவா?...'

'உங்களுக்கென்ன ஆண் பிள்ளை. அத்துடன் இங்கு நீங்கள் தனி ஆள், நான் எதைக் காரணம் வைத்து வருவதாம்...'

அவளின் குரலில் இயலாமை தெரிந்தது. அரூஸ், தனது ஆசைக்காக அவளை வேதனைப்படுத்துகிறோமோ என நினைத்தான். தன்மீது எத்தனை விருப்பமும், தவிப்புமிருந்தால் இந்த நள்ளிரவில், இத்தனை அலங்காரங்களுடன் சந்திக்க வந்திருப்பாள் என நினைத்தான்.

'தயவுசெய்து மன்னித்துக் கொள்' எனச் சொல்லிய படி அவளின் இரு கைகளின் விரல்களையும் பற்றிக் கொண்டான். தன்னருகாக இழுத்தான். தலையை நெஞ்சினில் சாய்த்தான். அவள் அவனைவிட சற்றே உயரம் குறைவாயிருந்தாள். துவண்டு விழுகிற இடை. திண்ணெண்கிற முன், பின் புற பாகங்கள். அவளின் புறமிருந்து மெல்லிய பழ வாசம் வீசிற்று. கைகளை இடுப்பினூடு செலுத்தி உடலருகே சாய்த்தான். தஸ்லீமா மிகவும் மென்மையாக அவனின் நெஞ்சில் கைவைத்து அவனைத் தூரமாக்கினாள். அரூஸுக்கு சுய நினைவு திரும்பியது.





'ஓ... வெரி சொறி... உட்காரேன்...'

அரூஸ் திடீரென ஒருமையில் அவளை விழிக்க ஆரம்பித்தான். அவள் உடனே உட்காரவில்லை. அரூஸ் மீளக் கேட்டான்.

'அது சரி, இப்போதாவது சொல்லலாமே, மூடிய அறைக்குள் எப்படி? மாற்றுச் சாவி வைத்திருக்கிறாயா?'

இப்போதும் அவள் பதில் தரவில்லை. அவனைக் கிறங்க அடிக்கும் பார்வை பார்த்தபடி சொன்னாள்.

'ஒரு பெண், அதுவும் இத்தனை அழகான இளம் பெண் நினைத்தால் எதுவும்...'

அரூஸ் அவளை மேலே பேச விடவில்லை.

'சரி... அம்மணி! இனி ஒரு போதும் கேட்கவில்லை'

என்றபடி சிரித்து வைத்தான். தஸ்லீமா அவனைக் கதிரையில் உட்கார வைத்தாள். கட்டிலில் அவனருகாக ஓரத்தே கால் மடித்து உட்கார்ந்தாள். அவளின் மடியில் அவனின் தலையணை இருந்தது. இருவரும் பேசத் துவங்கினார்கள். சீண்டினார்கள். சிரித்தார்கள்.., நேரம் போவதே தெரியாமல் மயங்கிக் கிடந்தார்கள்.

அடுத்து வந்த, நான்கு கிழமைகள் இறக்கை கட்டிக் கொண்டோடின, அவன் எதையும் உள்வாங்கி வாசிக்கிற நிலையை இழந்திருந்தான். வேலை முடிந்ததும் அறையுள் அடைந்து கொள்கிறவனாயிருந்தான். எப்போதும் அவன் நினைவில், செயலில் தஸ்லீமாவே நிறைந்திருந்தாள். சமீமுடன் நின்று பேசக் கூட நேரமற்றிருந்தான்.. சமீமுக்கு அரூஸா இப்படி ஒரு பெண்ணுக்காக மாறிப் போனான் என்பது நம்ப முடியாதிருந்தது. ஊருக்கு தொலைபேசி எடுத்து மிகவும் நாட்களாயிற்று என்பது, உம்மா காரியாலயத்தை தொடர்பு கொண்டபோதுதான் புரிந்தது. அந்த அளவு அவனை ஆக்கிரமித்திருந்தாள். தஸ்லீமா இப்போது இரு நாட்களுக்கொருமுறை, சொன்னபடி அவன் அறைக்கு வந்துவிட்டுப் போனாள்.

பங்குனி மாதக் கடைசி இரவு அது. மழைக் காலம் விடை பெற்றிருக்க வேண்டும். மழை இன்னமும் தூறிக் கொண்டேயிருந்தது. ஒரு

விருப்பமுள்ள பெண்ணுக்காகக் காத்திருப்பதில் சுகம் அவன் அறிந்ததே. இது பத்தாவது முறை. அவளிடம் சொன்ன நேரத்தை விட முன்னராகவே வந்து, முன் கதவைத் தாளிட்டுவிட்டு, தூங்கும் பாவனையில் கட்டிலில் காத்திருந்தான். மாற்றுச் சாவியா? வேறேதுமா? என்பதைக் கண்டுபிடிக்கிற ஆவல் இருந்தது. கடையில் வாங்கிய நறுமணத்தை அறையுள் வீசியாயிற்று. சாப்பாட்டை சூடுபடுத்தியாயிற்று. அறையைச் சுத்தம் பண்ணியாயிற்று. கட்டில் ஒழுங்காக விரிப்புடன், மணம் பூசி நின்றது. அரூஸ் காத்திருந்தான். காலடிச் சப்தம் படிகளில் மேலெலுந்து வர மௌனமானான். கதவோரம் காலடி கேட்டது. சற்று நேரம் மௌனம். பின்னர் கதவு மெதுவாகத் தட்டப்பட்டது. கூடவே அறையின் வாசத்தை மேவி அவள் வர்வு சொல்லும் வாசம் குடி கொண்டது. அரூஸ் எழுந்துபோய், கதவு திறந்தான். வெளியே முகம் முழுக்கச் சிரிப்பைப் பூசியபடி அவள். அவளின் இதழ்க் கடையோரம் நக்கல் தெரிந்ததுவா? அப்படியில்லை என்று நம்பினான்.

'என்ன இன்று நேரகாலத்துடன் வந்து விட்டீர்கள்?'

என்றபடி அறையுள் நுழைந்தாள். அவன் கதவைத் தாளிட்டான்.

'எப்படி அறையுள் வருகிறீர்கள் என்பதைப் பார்க்கத்தான்.'

'ஓஹோ... கள்ளன் பிடிக்கவா?...' என்றபடி தலைசாய்த்துப் புன்னகைத்தாள்.

'கள்ளன் அல்ல, கள்ளி. அது சரி, அறை இருட்டாயிருந்தது, எப்படி நான் உள்ளே இருக்கிறேன் என்று தெரியும்?'

அப்பாவியாக முகமிருக்கக் கேட்டான்.

'ஒரு இளம் பெண் நினைத்தாள்...' என அவள் துவங்க அவன் அவளின் வாயை விரல் கொண்டு பொத்தினான்.

"சரி, உட்கார்" என்றான். கட்டிலில் ஓரமாக உட்கார்ந்தாள். நன்கு கனிந்த வாழைப்பழங்கள் கொண்டு வந்திருந்தாள். அவள் பெரும்பாலும் பழங்களையே விரும்பினாள். அதை விட பசும்பாலில் ரீ குடிப்பதை மிகவும் விரும்பினாள். அவன் பாலைச் சூடாக்கத் துவங்கியபடி யோசிக்கத் துவங்கினான்.

தஸ்லீமா அறைக்கு வந்த போதிலும், அவள் உடலில் தொடும் பரப்புக்கு ஒரு எல்லை இட்டிருந்தாள். தான் உணர்வு வசப்படுகிற போதெல்லாம்,





தன்னை, தனது எல்லையைச் சுட்டிக் காட்டுகிறவள் அவளாகவே இருந்தாள். அவளின் மீதான காதலை இது அவனுக்கு அதிகரிக்க வைத்தது. எந்த நிலையிலும் சுயம் இழந்து விடாத பெண் அவள் எனப்பட்டது. அரூஸின் மனசு காயப்படாதபடி, மென்மையாகவே இதுவரை பேசுகிறாள்.

'என்ன, திடீர் மௌனம்?'

கழுவிய கிளாஸை அவன் அருகாக வைத்தபடி தஸ்லீமா கேட்டாள்.

'வேறென்ன, உன்னைப் பற்றித்தான்...'

'இப்படி அறை தேடி வருகிறவளைக் கட்டி, என்ன பாடுபட்டப் போகிறோமோ என்றா?...'

அரூஸ் பதில் சொல்லாது சிரித்தான். தஸ்லீமா முகத்தில் ஆவல் தெரியக் கேட்டாள்.

'இப்படிச் சிரித்தால் போயிற்றா? பதில் சொல்லுங்கள்?'

'அத்தனை மோசமானவனா நான்...'

தஸ்லீமா, உடனடியாக அவன் அருகாகினாள். அவனின் தோளை மெதுவாகப் பற்றியபடி சொன்னாள்.

'என் செல்லமல்லவா? நான் அப்படி நினைப்பேனா?...'

'ரீ'யை எடுத்தபடி மீளவும் உட்கார்ந்து கொண்டனர்.

அறையில் குளிர் கூடிக்கொண்டு வந்தது. அவன் இப்போது அவளின் அருகாகக் கட்டிலில் உட்கார்ந்திருந்தான். ஒரு ஆணும் பெண்ணும் தனிமையில் சேர்ந்திருக்கும்போது சாத்தானும் அங்கு பிரசன்னமாவதாகச் சொல்வதுண்டு. அரூஸுக்கு சாத்தானை இதுவரை தெரியவில்லை. நாம் நம்பிக்கொண்டிருக்கிற நாகரீகப் பூச்சு அவனை வெளியில் பட்டவர்த்தனமாகக் காட்ட அனுமதிக்கவில்லையோ என்றும் பட்டது.

அரூஸ், தன் முகத்தை அவளின் முகமருகே கொண்டு வந்தான். அவளின் நெற்றியில், கண்களில் கன்னத்தில் என முத்தமிடத் துவங்கினான்.

கைகளை முதுகில் பின்புறம் கொடுத்து அவளை இன்னும் அருகாக்கினான். ஆழப் பதிந்து இதழ் கவ்வினான். தஸ்லீமா அவனுக்கு எந்தப் பிரச்சினையும் பண்ணவில்லை. கைகளை இடையில் படும்படி தாழ்த்தினான். தஸ்லீமா உடல் சரிந்து கொடுத்தாள். உடலிரண்டும் அறையின் குளிரைத் தாண்டி சூடுகொள்ளத் துவங்கின. தஸ்லீமா அரூஸின் கழுத்தில் கைகளை மாலையாக்கினாள். அப்படியே கட்டிலில் சரிந்து படுத்தாள். அரூஸ் மேலாக முன்னேறினான். அறையின் வெளியே ஜன்னலினூடு மின்னல் தெரிந்தது. இரு மேகங்கள் மோதியிருக்க வேண்டும். இடிச்சத்தம் தொடர்ந்தும் கேட்டபடியே இருந்தது. மழை சட சடவென பொழிய ஆரம்பித்தது.

அரூஸுக்கு இது முதல் அனுபவம். அது தந்த திகைப்பும், திருப்தியும் இன்னும் நம்ப முடியாததாயிருந்தது. அவனருகே வெற்றுடலாய்க் கிடக்கிற தஸ்லீமாவைப் பார்த்தான். தளதளவென்று, செதுக்கி வைத்த சிற்பம்போலக் கிடந்தாள் அவள். அவளின் முகத்தில் ஆத்ம திருப்தி தெரிந்தது. அவனுக்கும் அது கிடைத்திருக்க வேண்டும். அவனில் திடீரென பழைய நினைவு எழுந்து திருப்தி கொள்ளாமல் செய்தது. இருவரும் பின்னிக் கிடந்தபோது அவள் முனகிய முனகலை மீறி ஒலிப்பிய ஒலி எதனால் வந்தது. ஒரு சீறலாக கழுத்தருகே எழுந்த உஷ்... உஷ்... என்கிற சப்தம் எப்படி வந்தது. அரூஸ் குழப்பமுற்றான். மானுடப் பெண்ணின் ஒலிதானா அது? அரூஸ் போர்வையை எடுத்து, அவளின் திறந்த உடலை மூடினான். கை சாய்த்து படுக்கையை விட்டெழுந்தான். தஸ்லீமா 'என்ன?' என்பதாகப் பார்த்தாள். மெல்லியதாகச் சிரித்தபடி சாறன் அணிந்தான். சிகரட் பற்ற வைத்துக் கொண்டான். தஸ்லீமா சற்று நேரத்தில் கண் சொருகினாள். தூங்க ஆரம்பித்தாள். அரூஸ் குழம்பியவனாக, அறையுள் உலாவினான். பின்னர் திறப்பெடுத்து கதவை உட்புறமாகப் பூட்டினான். சிகரெட் தீர்ந்து போயிருந்தது. மீதியை வீசினான். மெதுவாக அவளருகாக படுத்துக் கொண்டான். போர்வையைத் தன் புறமும் ஆக்கி முகம் மூடினான். தூங்குமாப் போல் கண் மூடினான். நேரம் போய்க் கொண்டிருந்தது. அரூஸ் காத்திருந்தான்.

தஸ்லீமா பூனைபோல அவன் உடல் தன்னில் படாதபடி மெல்ல உடலை கட்டிலின் ஓரமாக்கினாள். அவன் உணர்ந்தான். தன்னிச்சையாக ஒதுங்குவது போல கால், கை கொண்டு போர்வையை அவன் புறம் போர்த்தினாள். அறிந்தான். சப்தமெழாதபடி பாதம் பதித்து நிலமிறங்கினாள். கண்கள் அவன் புறமிருக்க ஆடைகளை அணியத் துவங்கினாள். அவன் கண்களை மூடியிருந்தான். தஸ்லீமா கதவை





நோக்கிச் செல்வது கேட்டது. கண்களை ஓரளவு திறந்து பார்த்தான். கதவைத் திறக்க முயன்றாள். முடியவில்லை. சட்டென அவள், அவன் புறம் திரும்பினாள். அவன் மீளக் கண்மூடினான். ஆழ மூச்சுவிட்டுத் தூங்கிக் (?) கொண்டிருந்தான். தஸ்லீமா மேசையை நோக்கி திரும்பி நடந்தாள். கதிரையில் கால்வைத்து மேசையில் ஏறினாள். சுவரைப் பற்றி எம்பினாள். விழிகளை மேலுயர்த்தி, அரூஸ் வியப்புடன் பார்த்தபடி இருந்தான். சுவரின் மேலான வளை அவளின் பிடியிலிருந்தது. உடல் சுவரில் பட்டபடி இருந்தது. கால்களின் விரல் சுவரில் பற்றியிருக்க தொங்கினாள். அரூஸ் கண் மூட மறந்தான்.

தஸ்லீமாவின் உடல் முதலில் வலதும் இடதுமாக, மெதுவாக ஆடத் துவங்கியது. அவள் கைகளால் வளையைக் கெட்டியாகப் பற்றியிருந்தாள். உடல் வேதனை கண்டிருக்க வேண்டும். தலையை மறுதலித்து ஆட்டினாள். 'உஷ்' என்கிற பெருமூச்சுடன் முனகலாக வேதனை வெளிவந்தது. திடீரென கால்கள் சுவரை அழுத்தப் பற்றின. உடலின் அசைவு சமப்பட்டது. திடீரென பாதங்கள் இரண்டும் அருகாயின. கால்கள் மிக நெருக்கமாக இறுகின. பாதப்பரப்பு சுருங்கத் துவங்கிற்று. நீண்டதாக, நுனியில் கூராக பாதங்கள்... இல்லை இல்லை வால்கள் நீண்டு மாறத் துவங்கிற்று. தஸ்லீமாவின் சே... அதன் உடல் பரப்பு தூக்கிப் போட்டது. அதன் முனகல் கூடத் துவங்கிற்று.

கீழிருந்து - பாதம் தொட்டு உடல் பாம்பாக மாற, சுவரில் படியத் துவங்கினாள் தஸ்லீமா. கடைசியாக தலை திருப்பி, கண்களால் கட்டிலை நோக்கினாள். அரூஸ் போர்வையால் உடல் மூடி அசையாதிருந்தான். வியர்க்கத் துவங்கிற்று. பயமெழ ஆரம்பித்தது. நீண்ட நேரம் அப்படியே கிடந்தான். மனம் ஆர்ப்பரிக்கத் துவங்கிற்று. தூக்கம் வராத நெடும் இரவு அது.

அதிகாலை எழுந்தான். கிடைத்ததை உண்டு, உடுத்தபடி சமீமை நோக்கி ஓடினான். சமீமுக்கு முதலில் திகைப்பு. இத்தனை அதி காலையில்? முகம் சுரத்தின்றி.., கண்கள் சிவந்துபோய்.., தோல்பற்றி வீட்டினுள் கொண்டு சென்றான். அரூஸ் சற்றே நிதானமடைந்தான். எப்படிச் சொல்வது இதை? நம்புவானா? நக்கல் பண்ணுவானே...' மனதில் குழப்பமுற்றான். சமீம் அவனை விழித்துக் கேட்டான்,

'என்ன, சுகமில்லையா?'

'சே.., அப்படி ஒன்றுமில்லை...'

'சரி.. உட்கார்' சமீம் உள்ளாகினான்.

முன் அறையில் அரூஸ் யோசித்தபடி இருந்தான். சற்று நேரத்துள் ரீயும் சிகரட்டுமாக முன் நின்றான் சமீம். அரூஸுக்கு அவை தேவையாயிருந்தன. சமீம் கேட்டான்,

'சரி, இப்போது சொல்...'

'பெண்ணாக, பாம்பு உரு மாறி உலாவுவது, உண்மையா?'

சமீம் படீரென வெடிச் சிரிப்புச் சிரித்தான். அவன் கையிலிருந்த ரீ கோப்பை தழும்பிற்று.

'இதைக் கேட்கவா இத்தனை அதிகாலையில் நீ வெளிக்கிட்டு வந்தது?'

அரூஸ் மேலே கேட்கப் பயந்தான். சமீம் இப்போது சிரிப்பை விட்டுவிட்டு அவன் முகம் பார்த்தான்.

'ஏன், இந்த சந்தேகம் உனக்கு?'

'அது எதற்கு? கேட்டதற்கு உன் பதில் என்ன?'

'அது ஆண்டாண்டு காலம், மரபு வழி வந்த கட்டுக் கதை. பாமர கிராமத்துக் கதைசொல்லிகள் அடைந்த காமத்தின் திருப்திகளிலொன்று அது!'

அரூஸுக்கு இவன் என்ன சொல்கிறான் என்பது முதலில் பிடிபட வில்லை.

'என்ன சொல்கிறாய் நீ..'

'அந்தக் கதைகளை நீ பார்த்தாயானால் எல்லோரும் பேரழகிகளாக - இளவரசிகளாக இருக்கக் காண்பாய்.'

'அதனால்...'

'அவர்களை ஆசைப்படுகிற கிராமத்து கதை சொல்லி, அவனை அப்படிப்பட்ட நங்கை அழைத்ததாகச் சொல்ல முடியாதல்லவா?





எனவேதான் அவனுக்காகவே பாம்பு வேஷம் கொண்டு அவர்கள் துரையைத் தேடி வந்ததாகப் பீற்றினார்கள்... அரூஸின் முகம் பார்த்ததும் சமீம் மேலே பேசாது அவன் புறம் திரும்பினான். பின் கேட்டான்.'

'உன் பிரச்சினை என்ன?'

அரூஸ் அப்போதும் மௌனமாகவே இருந்தான். நடந்த நிகழ்வுகளை, உண்மையைச் சொல்கிற எண்ணம் வரவில்லை. யோசனை இன்னும் அவனில் கூடிற்று. 'உண்மையான அக்கறையுடன் விசாரிக்கிற நண்பன். தன் பொருட்டு கவலை சுமந்து நிற்கிறவன். இதைச் சொல்வதனால் உள்ளாய் உள்ள தவிப்பு, கவலை, பதட்டம் யாவும் ஓரளவு குறையக் கூடும். எனினும், இதைச் சொல்வதனால் நமது சுயம் கெட்டுவிடாதா? அவள் இனி மேல் வராது போய்விடவும் கூடும். சற்றே ஒத்திப்போட்டால் என்ன?' அரூஸ், சமீமை அண்மித்தான். அவனின் தோள் பற்றினான். குரல் தழுதழுக்கக் கூறினான்.

'உண்மைதான் மனது குழப்பத்திலிருக்கிறது. ஒரு கிழமை போகட்டும். எல்லாம் தெளிந்து விடும்...'

'என்ன குழப்பம்?...'

'தஸ்லீமா தான்...'

'என்ன?, உன் காதலை மறுத்து விட்டாளா?...'

அரூஸ் மெதுவாகப் புன்னகைத்தான், அதில் பாரிய சோகம் தெரிந்தது.

'அப்படி நடந்திருந்தால், எத்தனை பாக்கிய சாலி நான், தெரியுமா?...'

சமீம், அவனாகவே எல்லாம் சொல்லட்டும் எனக் காத்திருந்தான். அரூஸ் மௌனமாயிருந்தான். அவனின் முகம் இருண்டு கிடந்தது. சமீம் மேலே யோசிக்கத் திராணியற்றவனானான். அவன் ஆழமாகக் காயப்பட்டிருக்க வேண்டுமென நினைத்தான். அவனுடன் வெளியில் சென்றுவர முடிவு செய்தான்.

இருவருமாக, தெஹிவலையிலிருந்து வெள்ளவத்தை நோக்கி கடற்கரையோரமாக நடந்தனர். அரூஸுக்கு மனது ஓரளவு தெளிவுபடத்

துவங்கிற்று. சமீம் மேலும் இருமுறை கிளறிக் கேட்டபோதும், 'இப்போதைக்கு ஒன்றுமில்லை, விட்டுவிடு' என அவனால் சொல்ல முடிந்தது. சமீம், அவன் முடிவுசெய்ய முடியாது திண்டாடுவதாக எடுத்துக் கொண்டான். பேச்சை அரசியல், சினிமா, இலக்கியம் என்பவற்றில் திசை திருப்பினான். இப்போதும் எவ்வித இலயிப்புமின்றி அவன் உள்ளதை அறிந்தான். அவனுடனேயே பகலுணவு உட்கொண்டான். கடைசியாக,

'உன்பொருட்டு நிறைய வேதனை கொண்டிருக்கிறேன். உனக்கு எந்த உதவி, எப்போது தேவைப்பட்ட போதும் என்னைக் கேட்கத் தயங்காதே...' எனச் சொல்லி விட்டு, விடைபெற்றுப் போனான்.

அரூஸ் மீளவும் அறையுள் தனியாகினான். ஆமைபோல தலை உள்ளாய்ப் போக, மனது குமைய நள்ளிரவில் தூக்கமின்றிப் படுக்கையில் புரண்டு கிடந்தான். பகல் பொழுதுகள் நீண்டு கழிந்தன. இப்படியே மூன்று நாட்கள் அறையுள் அடைந்து அவிந்தான். அன்றிரவு கதவு மெதுவாகத் தட்டப்பட்டது: சத்தம் காதை எட்டுவதற்கு முன்னரே, மூக்கின் வாசம் வந்திருப்பவளை அடையாளம் சொல்லிற்று. திறக்க மனமில்லை. அவள் உள்ளேவர கதவு தடையான ஒன்றல்ல. மேலும் தான் உள்ளே இருப்பதுவும் தெரியும் அவளுக்கு. அரூஸ் எழுந்தான். கதவு திறந்தான். அவளிடம் கூட சந்தோசம் தொலைந்து போயிருந்தது. எதுவும் பேசாதபடி உள்ளாகினாள். அவனை நோக்கினாள். முழு அறையையும் நோட்டமிட்டாள். அவளின் முகத்தில் இன்னமும் கவலை அப்பிக் கொண்டது.

'என்ன சுகமில்லையா?'

அவளின் அதே இனிமைக் குரல், மெதுவாக ஒலித்தது.

'ஒன்றுமில்லை, வந்து உட்கார்'

வந்த பதிலில் வரவேற்கிற உட்சாகமின்மையை உணர்ந்தாள். அவன் மீளவும் கட்டிலில் தலைக்கு தலையணை கொடுத்துச் சாய்த்திருந்தான். அவள் அவன் அருகாக கட்டிலின் ஓரமாக உட்கார்ந்தாள். அவனை வெறித்தாள். நேரம் மௌனமாகப் போய்க் கொண்டிருந்தது. அதை அவளால் தாங்க முடியவில்லை.

'மூன்று நாட்களாக வேலைக்கும் போகவில்லை?'





'ம்...'

'நல்ல சாப்பாடும் இல்லை, போலிருக்கிறது?'

அவன் இதற்குப் பதில் சொல்லவில்லை. அவளை மீளவும் வெறித்தான். அவள் பரிவு மேலிட அவனை நோக்கினாள். பின் கேட்டாள்,

'நானா, காரணம்?'

அவன் பதில் சொல்லவில்லை. நிலை குத்திய பார்வையாய் அவளின் கண்களை நோக்கினான். அவள் அதை எதிர் கொள்ளத் தயங்கினாள். தரை நோக்கினாள். குரலில் பிசிறு தட்டப் பேசினாள்.

'எதுவானாலும் சொல்லுங்கள். இப்படி பேசாதிருந்தாள் எப்படி?'

அவனுக்குத் திடீரெனக் கோபம் வந்தது. கட்டிலை விட்டும் எழுந்தான். குரலில் ஆத்திரம் தெரியச் சொன்னான்.

'நான் அப்பாவி. கோழை. அதனால்தான் என்னைப் பிடித்துக் கொண்டாய் போலிருக்கிறது.'

தஸ்லீமா சற்று நேரம் பேசாதபடி இருந்தாள். பின் கேட்டாள்.

'நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?...'

'தயவு செய்து, என்னை ஏமாற்ற முனையாதே. எனக்கு எல்லாமே தெரியும்?...'

தஸ்லீமா பதட்டப்படவில்லை, அவளின் முகத்தில் அப்போதும் அமைதி கிடந்தது. சற்று நேரம் பொறுத்திருந்து விட்டுச் சொன்னாள்.

'எனக்குத் தெரியும். அன்றிரவு நான் வெளியே போகும்போது, நீங்கள் தூங்கவில்லை என்பது தெரியும்'

அரூஸ் சற்றே அதிர்ச்சியுற்றான். எத்தனை வீம்பு இது? சப்தமிட்டுச் சொன்னான்.

'என்ன சொல்கிறாய் நீ...'

'உங்களால் என்னைப் புரிய முடியுமென நம்புகிறேன். உங்களால் மட்டுமே இதை, விளங்கி ஏற்றுக்கொள்ள முடியுமென்ற எதிர்பார்ப்பிலிருந்தேன்... அதனால்தான் உங்களிடம் என்னைத் திறந்து காட்ட வெளிக்கிட்டேன்'

'எதை, நீ பெண்ணல்ல, பாம்பு என்பதையா?...'

தஸ்லீமா திடீரென ஆயாசமுற்றாள். இது அவள் எதிர்பார்த்ததுதான். ஆனால் அவளிடம் இத்தனை ஆக்ரோசம் இருக்குமென்ற எண்ணமில்லாதிருந்தாள்... குரலில் அமைதி தெரியச் சொன்னாள்.

'தயவுசெய்து, உட்காருங்கள். சற்றே அமைதியாகப் பேசினாள் என்ன?'

அரூஸ், கட்டிலை விட்டும் திடீரென எழுந்து கொண்டான். கதிரையை அருகே இழுத்து அதன் பின் புறம் பற்றியபடி நின்றான். அவள் முகம் பார்த்தான். அவளும் கட்டிலை விட்டும் எழுந்து. அவன் மேசையருகானாள். எதுவும் பேசாது மேசையின் 'இலாச்சி'யை இழுத்தாள். அவன் எழுதிய கட்டுரை ஒன்றை வெளியில் எடுத்தாள். அதன் தலைப்பு 'மனிதன் என்கிற உலகு'. அவனின் முன்னாக நீட்டினாள், கை நீட்டி வாங்கியபடி கேட்டான்.

'என்ன, இது?...'

'இதில், என்ன சொன்னீர்கள் என்று ஞாபகமிருக்கிறதா?...

அரூஸ் பதில் சொல்லவில்லை. உலகும், ஐம்பூதங்களும் மனிதனுள் எப்படி அடங்கியுள்ளது என்பதை, இச்சை சூழ் மனதை விட்டும் மனிதன் மேலான நிலையாகும் போது, தன்னைச் சூழ உள்ள உலகை பரிபூரணமாக உணருதலைச் சொல்கிற கட்டுரை அது. ஆசை கொள் மனதைக் கொல்கிறபோது, குழந்தை மனநிலை எய்தப் பெறுதலையும், உலகின் ஒவ்வொரு கணமும் சந்தோச ஆர்ப்பரிப்புடன், ஞானவாழ்வு வாழ்வதை எடுத்தேதுவது. எல்லா விலங்குகளும், தாவரங்களும், ஏன் மொத்தப் பிரபஞ்சமுமே மனிதனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவை, அவனின் அடக்குதலுக்கு உட்பட்டது என்கிற இறை வசனம் ஏன் சத்தியமானது என்பதை விதந்துரைப்பது. மனிதன் ஏன் இறைவனுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவன் என்பதைச் சொல்வது. அரூஸுக்கு இதை ஏன் தூக்கிப் போடுகிறாள் என்பது முதலில் பிடிபடவில்லை.





'தஸ்லீமா, என்னைக் குழப்பாதே, என்ன சொல்ல வருகிறாய் நீ...'

தஸ்லீமா பேச ஆரம்பித்தாள். அது கரை புரண்டு சென்றது. அரூஸை மிகவும் உயர்வாக்கி அவள் பேசினாள். அவளும் அவனும் உடல் என்கிற இச்சை சூழ் அசிங்கங்களை விட்டும் தூரமாகியவர்கள் என்றாள். ஆவல் கொண்டலைகிற மனித மனங்களை விட்டும் அரூஸ் தூயவனாயிருப்பது நேசம் கொள்ளச்செய்ததென்றாள். அவன் மீதான காதல் உண்மையானது, அங்கு பொய் ஏதுமில்லை எனச் சொன்னாள்.

'தஸ்லீமா, என்னைப் புகழ்வதன் மூலம், பேச்சைத் திசை திருப்ப முயலாதே, நீ யார் என இன்னமும் சொல்லவில்லை, நீ?'

'சொல்கிறேன் அரூஸ், உங்களால் என்னைப் புரிய முடியும் என்கிற நம்பிக்கையில் சொல்கிறேன். உடம்பு என்கிற நிலையைக் கடந்தவர்களுக்கு காலம், தூரம் என்பது இல்லை, ஏன் குறித்த இடமென்பதே இல்லாமல் ஆவதில்லையா? அது போல உயர் படித்தரம் தேடி அலைகிற பெண் நான்...'

அரூஸ் அவளை இடைமறித்தபடி சத்தமிட்டுச் சிரித்தான். தஸ்லீமா தீவிரப் பார்வையுடன் அவனைக் கேட்டாள்.

'எதற்கு, இந்தச் சிரிப்பு?'

'சட உலகின், ஆசையின் அடிவேரே காமம் என்கிறான் சிக்மன் ப்ராய்ட் தெரியுமா?'

'நல்ல கேள்வி இது, எனக்கும் சொல்வதற்கு இலகுவாக்கிய கேள்வி. படித்தரம் தேடியலைகிறவள் என்றுதான் என்னைச் சொன்னேன். எதையும் இலகுவாக உதறிவிட முடிகிற என்னால், அதைக் கழற்றி வீசிவிட முடியவில்லை அரூஸ். அதை உணர்ந்த, என்னைச் சரிவரப் புரியக் கூடிய உன்னால்தான் அது சாத்தியம் என நம்பினேன்...'

தஸ்லீமா தொடர்ந்தும் பேசிக்கொண்டே போனாள். அவளை மீட்சித்து, இரட்சிக்க அவனால் மட்டுமே முடியுமென்றாள். அவளைப் பரிசுத்தமானவளாக்குவது அவனால் மட்டுமே ஆகுமானதென்றாள். - அவனது வாழ்வும், எழுத்தும் சத்தியமானால், வாழ்வு கொடு என இறைஞ்சினாள். அவளின் குரல் கர கரத்து வந்தது. கண்களிலிருந்து கண்ணீர் கன்னங்களினூடாக பெருக்கெடுத்து ஓடிற்று. மூக்கு சிந்திற்று.

இத்தனை அழகிய அபூர்வ பெண்ணின் அழுகை, வேண்டுதலுக்கு முன் அருஸ் என்ன செய்ய முடியும்? அவனின் மனது இரக்கப்படத் துவங்கிற்று. கதிரையை விட்டு விட்டு அவளின் அருகாகினான்.

'அழாதே... தயவு செய்து அழாதே...' என்றபடி முகம் துடைத்தான். அப்போதும் தஸ்லீமாவால் ஆறுதல் பெற முடியவில்லை. அவன் தன்னை விட்டும் தூரமாகி விட்டானோ என்கிற சம்சயம் இருந்து கொண்டே இருந்தது. அதை அவனின் அடுத்து வந்த கேள்வி நியாயப்படுத்த முனைந்தது.

'இதை ஏன் முன்னரேயே சொல்லவில்லை?'

'எப்படி அது சாத்தியமாகும்?'

'ஏன் சாத்தியமில்லை. இப்போது சொல்வதனால் தான் ஏமாற்றினாயோ என நினைக்க வேண்டியிருக்கிறது.'

'என்ன?'

'உனது அழகு, நளினம் எல்லாவற்றையும் வைத்து என்னை ஏமாற்றி வீழ வைத்தபின்..., இது துரோகம் இல்லையா?'

தஸ்லீமா கொஞ்சநேரம் மௌனமாயிருந்தாள். அவள் யோசிக்கிறாள் என நினைத்தான் அவள் சொன்னாள்,

'அன்றிரவு, உங்களை எழுப்பி கதவு திறந்தபின் என்னால் வெளியேறியிருக்க முடியும். நீங்கள் தூங்கவில்லை, என்னை வேவு பார்க்கிறீர்கள் என்பது தெரிந்தே, நான் வளையினூடு வெளியேறினேன். இது தெரிவது நன்மையானதே என நம்பினேன்...'

அருஸின் முகத்தில் புன்னகை இருந்தது. இதழ்க் கடையோரம் நக்கல் தெரிந்தது. தஸ்லீமா முகம் சிவந்தாள். அவளின் உதடுகள் துடிக்க ஆரம்பித்தன. குரலில் உஷ்ணம் தெரியக் கேட்டாள்.

'எதற்கு இந்த நக்கல் சிரிப்பு?'

'அதாவது, எல்லாம் முடிந்து போனதும், உன்னை விட்டும் வெளியேற மாட்டேன் என்கிற தைரியம் கிடைத்ததும் சுயம் திறந்தேன் என்கிறாய்?...'





அருஸ் மேலே பேச முடியாதபடி தஸ்லீமா குரல் வீறிடக் கத்தினாள்.

'ப்ளீஸ், ஸ்ரொப் இட்'

அவளின் வெள்ளை முகம் சிவந்து கிடந்தது. கண்கள் வெறித்தன. நெஞ்சு விம்மித் தணிந்தன. அவள் இந்த வார்த்தைகளை அவனிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. அருஸுக்கு அவளைப் பார்க்க மனது குமைந்து வந்தது. மிகக் கேவலமான வார்த்தைகளை உதிர்த்து விட்ட உணர்வடைந்தான். தலை தாழ்த்தினான். தான் ஏமாற்றப்பட்டு விட்டோமோ என்கிற பதைபதைப்பில் நிலை தவறினோமோ என நினைத்தான்.

'அருஸ், நீங்கள் என்னை அடைந்துவிட்டதாக நினைக்கிறீர்களா? நான் என்னை இழந்து விட்டேன், எனவே சுய கழிவிரக்கம் கொண்டேன் என்கிறீர்களா? அப்படிப் பச்சதாபம் கொள்ள வேண்டாம். நீங்களும், நானும் விரும்பியதால் நடந்த நிகழ்வு அது. இதில் நீங்களோ நானோ இழப்பு, பெறுதி எதுவும் அடைந்து விடவில்லை. இருவருமே சந்தோசகரமாக, பரிபூரண திருப்திக்காக முயல்கிற கூடல் அது. உங்களை முழு மனசுடன் நான் விரும்பியதால், அது சாத்தியமானது. சத்தியமானது. உங்களை, உங்கள் எழுத்தை மேலானதாகக் கருதினேன். அது இத்தகைய கொச்சை, அசிங்கங்களையும் உள்வாங்கியதுதான் என்பது எனக்கு ஆச்சரியத்தை, அதிர்ச்சியை தருவதாயிருக்கிறது...'

தஸ்லீமா ஓய்ந்து போனாள். அருஸுக்கு வெட்கமும், கவலையுமாயிருந்தது. அவள் சொல்வதுதான் உண்மையாயின்..., அவனுக்கு மனது கூசிற்று. அவளின் முகம் பார்க்கத் தயங்கினான். அவளின் மெல்லிய இடை பற்றி, மெதுவாக கட்டிலில் உட்காரச் செய்தான். வலதுகையெடுத்து அவளின் கால் பிடித்தான். தஸ்லீமா 'ஒன்டும் வேண்டாம் போ' என்பதாக அவனின் கையை ஒதுக்கினாள்.

"விடுங்கள் என்னை. நீங்கள் ஒரு மனித மிருகம்"

"உண்மைதான் பாம்பை விட எனது வாயிலிருந்து வந்த வார்த்தைகள் விஷம் கூடியவைதான்..."

அருஸின் குரல் இப்போது குழைந்திருந்தது. தஸ்லீமா அவனது வாயை அடிக்கிற பாவனையில் வலது கையின் சுட்டு விரலைக் கொண்டு

போனாள். அந்த விரலை அரூஸ் வாய் கொண்டு பற்றினான். தஸ்லீமாவின் முகத்தில் இப்போது மெல்லிய புன்முறுவல் இருந்தது.

நாட்கள் மிக விரைவாக ஓடிப் போயின. மூன்று மாதங்களும் மிக மகிழ்ச்சிகரமாகவே கடந்து போயிற்று. அதிகமான எல்லா விடுமுறைப் பொழுதுகளையும் தஸ்லீமா சுவீகரித்திருந்தாள். அரூஸ் மீது அதீத அன்பு மழை பொழிந்தாள். அவனுக்கு அது முதலில் மகிழ்ச்சியானதாகவே இருந்தது. இது எங்கே கொண்டு போகுமோ என்கிற திகில் கூடவே ஒட்டியபடி கிடந்தது. இவளை, இனி என்ன செய்வது? இந்தச் செல்லுகையின் அடுத்த தொடர்ச்சி என்ன? மனைவி, குழந்தை என்கிற வாழ்வின் தொடருக்கு இது சரிப்படுமா?.. இந்தக் கேள்விகளுக்கு விடை தெரியாதவனாகவுமிருந்தான் அரூஸ். உம்மாவை, சகோதரிகளைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு அவர்களுக்காக சாறி வாங்கியிருந்தான். ஊருக்கு கொடுத்தனுப்புவதை விட, தானே போய்வருவது உசிதமென நம்பினான். உம்மாவைப் பார்த்ததும் மனதில் நிம்மதி கிடைக்குமென எதிர்பார்த்தான். உம்மாவின் இரு கால்களிலும் தலை சாய்த்துப் படுத்தால் போதும், அவருக்கே உரிய மணம் அவரைச்சூழ உண்டு. அதை சுவாசித்தால் போதும். எத்தனை கனிவான பார்வை அது. அவரின் 'என்ன மகன்?' என்கிற ஒற்றை வரியே மனசைத் தடவித் தரப் போதுமானது. எப்போதும் உதிர்க்கிற 'சந்தோசமா இருங்க மகன்' என்கிற சொற்களே எல்லாக் குழப்பங்களையும் தீர்க்கப் போதுமானது. தஸ்லீமாவைப் போல ஒரு சுடு சொல் அவரிடமிருந்து வந்ததில்லை. எனது நண்பனைத் தூரப்படுத்துகிற, தலையீடு செய்கிற உரிமையை எப்படி எடுத்தாள். எத்தனை வெஞ்சினமான சொல் அது?

'ஹலோ அரூஸ்' என்கிற கேள்வியில் திணுக்குற்றான். தஸ்லீமாவின் குரல் அது. அரூஸ் தலை உயர்த்திப் பார்த்தான். எப்படி இங்கு வந்தாய் எனக் கேட்க நினைத்தும் தவிர்த்தான். எல்லாவற்றுக்குமே முடிவுகள், வியாக்கியானங்கள் வைத்துக் கொண்டிருப்பவள். தான், தனது அபிப்பிராயங்கள் மட்டுமே சரியென நம்பி, பராயணம் பண்ணிய வாழ்வு வாழ்பவள். எந்தக் கேள்விக்கும் நேரடி பதில் தராது, பதில் கேள்வியில் தன்னை நிலை நிறுத்தி அதில் பெறுகிற வெற்றியின் மிதப்பில் வாழ்கிறவள்... அரூஸுக்கு யாரைப்பற்றியும் இவ்விதம் தான் ஒருபோதும் சிந்தித்ததில்லையே என்கிற நினைப்பு மேலெழ வெட்கமுற்றான். இவளின் மீது மெல்ல மெல்ல விருப்பமின்மை சூழ்வதை நோட்டமிட்டான். எப்போதிலிருந்து மாறினோம்? ஆம், நண்பன் சமீமைக் காயப்படுத்தித்





துரத்திய போதிலிருந்து... அவன் வாழ்வில் மறக்கவே முடியாத நவம்பரின் கடைசி வெள்ளி இரவு அது...

காரியாலயத்திற்கு அப்பால் சந்தித்து நாட்களாயிற்றென்ற தவிப்பில் அறைதேடி வந்திருந்தான் சமீம். அவனிடம், அரூஸ் கேட்டிருந்த 'ஏழாவது உலகம்' நாவல் கைவசம் இருந்தது. மொத்த வருவாயில் அரைவாசியை புத்தகங்களுக்காகவே செலவிடுகிறவன் அவன். அதைப் பெருமைக்குரிய செலவாகவே அரூஸ் கண்டான். மிகவும் மகிழ்ச்சியுடன் அவனை வரவேற்றான். வெளி வராண்டாவில் இருவரும் உட்கார்ந்து பேசத் துவங்கினர் பேச்சு, சுவாரஸ்யமாக இலக்கின்றி வளர்ந்து கொண்டே போனது.

- பத்திரிகையில் வந்த சாகித்ய அகடாமி புத்தகத் தேர்வின் குழறுபடி

- சுந்தர ராமசாமி செருப்புப் போட்டுக்கொண்டு, ஊத்தையை மிதிக்காதபடி தாண்டித் தாண்டி நடப்பது.

- சில நாக் கூசும் வார்த்தைகளை எழுதிவிட்டு பிரபல்யம் தேடுகிற ஒழுங்கு

- 'தமிழ்த் தேசியம்' என்பதை முதலில் பேசிய இடதுசாரிகள்...

இருவருக்கும் தேனீரும், சிகரெட்டும் தேவைப்பட்டது. தஸ்லீமா உள்ளாக அறையுள் இருந்தாள். அவள் ஏனோ சமீம் இருக்கிற போதுகளில் பிரசன்னமாகிப் பேசுவதை விரும்புவதில்லை. அரூஸும் அதைப் பொருட்படுத்தியதில்லை. அரூஸ் அறையுள் வந்தான். தஸ்லீமாவிடம் தேனீர் போட்டுத் தரும்படி கேட்டான். மீள வந்து உட்கார்ந்தான் மீண்டும் பேச்சு வளர்ந்தது.

- மௌனியின் அகமியப் பார்வையினூடு புற உலகைத் தேடுகிற தேடல்.

- மிகப் பயங்கர ஆயுதமாக தகவல் தொழில் நுட்பம் மாறிப் போனமை...

தேனீர் வரவில்லை. அரூஸ் மீண்டும் உள்ளானான். தஸ்லீமா கால்களை நீட்டி கதிரையில் சாய்ந்திருந்தாள். மனதில் கோபம் எட்டிப் பார்த்தது. அடக்கியபடியே கேட்டான்.

'தேனீர் போடவில்லையா?...'

'கண்டவெனெல்லாம் உங்கட கூட்டாளியா? இவனுக்கெல்லாம் நான் தேனீர் ஊற்றமாட்டேன்...'

அரூஸின் முகம் சிவந்து, உடல் பதறத் துவங்கிற்று. கையை ஓங்க நினைத்தும், அடக்கியபடியே சொன்னான்,

'தயவுசெய்து, உனது ஊத்தையான வாயைப் பொத்து...'

நிச்சயமாக சமீமுக்கு இவளின் ஆங்காரத் தொனி கேட்டிருக்கும். அரூஸ் அவசரமாக வெளியே வந்தான். சமீமின் முகம் பார்க்க வெட்கமுற்றான். அரூஸைக் கண்டதும், சமீம் கதிரையை விட்டெழுந்தான்.

"அரூஸ் ஆத்திரப்படாதே! இது இயல்பானதே, நான் பின்னர் உன்னைச் சந்திக்கிறேன்..."

என்றபடி அவனின் கைகளைப் பற்றினான். அரூஸால் சற்று நேரம் பேச முடியாதிருந்தது. அவளின் முகம் பார்க்க மனம் விரும்பவில்லை. வெளியே சமீமுடன் செல்ல முடிவெடுத்தான். வாழ்க்கையில் முதன் முதலாக உடுத்த சாறன், சேர்ட்டுடன் காலி வீதியில் இறங்கி நடந்தான். சமீமிடம் நிறையத் தரம் மன்னிப்புக் கேட்டான். அவன் தெளிவானான். 'இதில் எதுவுமேயில்லை' என்பதையே பதிலாக்கினான். அரூஸுக்கு அப்போதும் உள்ளாக அசூசை இருந்து கொண்டேயிருந்தது.

அரூஸ் அறைக்கு வந்தபோது அவள் போய்விட்டிருந்தாள். அதன் பின்னர் எட்டு நாட்கள் அவளைச் சந்திக்கவில்லை. மனதில் நிம்மதியில்லை. வேலை முடிந்து தனியாக கடற்கரையில் உட்கார்ந்திருந்தான். உள்ளாக அவன் குமைந்து கொண்டிருந்தான். மனதில் மலர்வு மெல்ல மெல்ல கழன்று கொண்டிருந்தது. தனது வாசிப்பு, எழுத்து, தேடல் எல்லாமே தூரமாகி வருவதாகத் தோன்றிற்று. அவன் விரும்புகிற தனிமை, சோகம் நிரம்பியதாக ஆகும் போலிருந்தது. இங்கும் தேடிவருவாள் என அவன் எதிர்பார்க்கவில்லை. எதுவித சந்தோசமுன்றி அவள் முகம் பார்த்தான். பின்னர் உட்கார் எனச் சைகை செய்தான். அவள் உட்கார்ந்தாள். இருவரும் கொஞ்ச நேரம் பேசவில்லை. பின்னர் அவள் கேட்டாள்,

'என்ன, என்மீது இன்னமும் கோபமா?..'





அரூஸ் அவளைச் சற்று நேரம் வெறித்துப் பார்த்தான். பின் சொன்னான்,

'நீ என்ன சமாதானம் சொன்னாலும், அது மன்னிக்கக் கூடியதா? எத்தனை மோசமான, கீழான வார்த்தைகள் அவை'

அவள் தலை கவிழ்ந்திருந்தது. கைவிரல்கள் மணலை அளைந்தன. அவள் சொன்னாள்,

'அன்று நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாதுதான். பின்னர் எவ்வளவு கவலைப்பட்டேன் தெரியுமா?..'

அரூஸ் நம்ப முடியாதபடி இருந்தான். அவன் முதலில் சூடு பரவச் சொன்னான்,

'என்னை மொத்தமாகவே ஏமாற்றி விட்டாய். உன்னில் இந்த நடத்தையை நான் எதிர்பார்க்கவேயில்லை...'

தஸ்லீமா மேலே பேசவில்லை. அவன் அமைதியடையக் காத்திருந்தாள். பின்னர் சொன்னாள்,

'உங்கள் அன்பும் நேசமும் பொழுதுகளும் எனக்காக மட்டுமே இருக்க விரும்பினேன். நீங்கள் ஓய்வுப் பொழுதையெல்லாம் எழுத்து, வாசிப்பு, சமீம் என்றாக்கி விட்டதில் கோபம் கொண்டிருந்தேன். அதனால்தான் அப்படிப் பேசிவிட்டேன். தயவுசெய்து மன்னியுங்கள்'

'இதில் என்னைவிட, அதிகம் காயப்பட்டது சமீம்தான். நீ அவனிடம்தான் மன்னிப்புக்...'

அரூஸை அவள் பேசவிடவில்லை, இடையே ஊடறுத்தபடி சொன்னாள்,

'நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நான் அவரிடம் கேட்பது, உங்களுக்கும் இழுக்கல்லவா?...'

'சமீம் சரியாகவே சொன்னான். பெண் என்பவள் சுயம், சுகம் தேடுபவள் மட்டுமென்று...'

'வேறென்ன சொன்னான்...'

'பாம்பை நம்பலாம். உங்களை நம்பவே கூடாதென்று. எனக்கு இரண்டுமே ஒன்றாகி வாய்ந்தவளல்லவா நீ... எனக்கு இதுவும் வேண்டும்... இன்னமும்'

தஸ்லீமா அவசரமாக அவனை அண்மித்தாள். அவன் வாயை விரல்களால் பொத்தியபடி சொன்னாள்.

'தயவுசெய்து அரூஸ். வீணாக வார்த்தைகளைக் கொட்டிவிடாதீர்கள். நான் உங்களவள் அல்லவா? என்னை அவமதிப்புக்குள்ளாக்குவதை நீங்கள் எப்படிச் சகிக்க முடியும்...?'

அரூஸ் அவளின் விரல்களை விலத்தினான். குரலில் கசப்பு மேலிடச் சொன்னான்.

'நான் சற்று நேரம் தனியே இருக்க விரும்புகிறேன் பேசாதிருக்கிறாயா?..'

தஸ்லீமா உடனேயே கேட்டாள்

'நீங்கள் என்னைப் பற்றி அஞ்சுகிறீர்களா?..'

'தெரியவில்லை, குழப்பமுற்றிருக்கிறேன்...'

இருவரும் அமைதியாகினர். கடலலையின் சப்தம் தவிர வேறு ஒலியில்லை. தஸ்லீமா அவனைப் பார்ப்பதும், கடலைப் பார்ப்பதுமாயிருந்தாள். அரூஸ் முழங்கால் மடித்து, கைகளை கால்களில் படியவிட்டு குந்தியிருந்தான். பார்வை கடலை நோக்கிக் கிடந்தது. அந்த இறுகிய கனத்தை அவளாள் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

'நான்தான் பிழையை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்கிறேனே... அப்படி இருந்துமா?...'

'நான் பயப்படுகிறேன், இதுவே தொடர்கதையாகி விடுமோ என்று'

'அப்படி ஒருக்காலும் இராது. எனது நிலையையும் யோசியுங்களேன்...'

'என்ன, அது?'

'உங்கள் மீதான தீவிர அன்பால் அல்லவா அது நிகழ்ந்தது... இனி இப்படி ஒருபோதும் பேசமாட்டேன் போதுமா?..'





அரூஸ் அவளை ஏறிட்டான். ஒரு வகையில் அது உண்மையே எனப்பட்டது. அன்று கோபத்தில் முகம் சிவந்து அவள் சீறிய சீறலையும், இன்றைய கெஞ்சுதலுடனான பணிவையும் பார்க்க இவள் உணர்வுகளுக்கு ஆட்பட்டு வாழ்கிற பெண் எனப்பட்டது. இவள் என்னதான் குழைந்தாலும், கண நேர உணர்வில் இவளின் சொல்லாடல்கள் மேலும் குழப்பமே தரப்போகின்றன எனத் தோன்றியது. அவளின் இந்த அதீத அன்புப் பிச்சைப் பாத்திரம் ஒருபோதும் தன்னால் நிரப்பப்பட முடியாதது எனக் கண்டான். வாழ்க்கை இனி சிக்கலானதாகி விடுமோ என்கிற அச்சம் எழுந்தது. இனி இதனை எதிர்கொள்வது ஒன்றே வழி என்கிற நினைப்பு வர, அவளை நோக்கி புன்முறுவல் செய்தான். அவனின் நீண்ட மௌனம், அதைத் தொடர்ந்த புன்னகை தஸ்லீமாவுக்கு தைரியம் தந்தது. இன்னும் அவனை நெருங்கியபடி கேட்டாள்.

'என்ன, பார்சல் இது?'

'உம்மா, சகோதரிகளுக்கான சாறிகள்...'

'ஊர் போகப் போகிறீர்களா?...'

'ஆமாம். காரியாலயத்திலும் மூன்று நாட்கள் விடுமுறை எடுத்திருக்கிறேன்.'

'கண்டிப்பாக போயே ஆகணுமா?..'

'என்ன கேள்வி இது. உம்மாவைப் பார்த்து ஆறு மாதங்களாயிற்று. இனியும் போகாமலிருக்க என்னால் முடியாதம்மா...'

தஸ்லீமா கவலை கொண்டாள். பேச்சற்று உட்கார்ந்திருந்தாள். அரூஸுக்கு சற்றே பாவமாகக் கூட இருந்தது.

'மூன்று நாட்கள் தானே... பொறுக்கக் கூடாதா?'

இதற்கும் பதில் தரவில்லை. முகத்தில் கண்ணீர் வராததுதான் குறை. அரூஸ், அவளின் கைகளைப் பற்றியபடி சொன்னான்.

'இந்த சாறியைக் கொடுத்ததும் வந்து விடுகிறேன்...'

'நாம் சேர்ந்தபின் வருகிற முதல் பெருநாள் இது. நீங்கள் இல்லாமல்...'

குரலில் சோகம் அப்பிக் கிடந்தது. அரூஸ் பிடி கொடாதபடி சொன்னான்,

'வாங்கிய சாறியைக் கொடுக்கவாவது போக வேண்டாமா?...'

'சாறியை என்னிடம் தாருங்கள். நாளையே அவர்களுக்குக் கிடைக்கும், தயவுசெய்து அடுத்த வார விடுமுறையில் போய் வாருங்கள்...'

அரூஸ் யோசிக்கத் துவங்கினான். தஸ்லீமா கெஞ்சத் துவங்கினாள். அரூஸ் 'சரி' என்றான்.

'அதுசரி, சாறியை எப்படிக் கொடுத்தனுப்புவது?..'

'நீங்கள் அந்தக் கவலையை விடுங்கள். மாமி நாளைக் காலை இந்தப் பார்சலில்தான், தூங்கி எழுந்ததும் விழிக்கப் போகிறார் பாருங்கள்...'

'அதுதான், எப்படி?'

'நான்தான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேனே, ஒரு அழகிய இளம் பெண் நினைத்தாள்...'

'அம்மா, தாயே... நான் ஒப்புக் கொண்டேன்...'

தஸ்லீமா கலகலவென நகைத்தாள். அரூஸ் புன்னகையுடனிருந்தான்.

இருவரும், கடற்கரையை விட்டும் வெளியேற இரவு பத்து மணியாயிற்று. அரூஸ் ஹோட்டலில் சாப்பிட்டான். அவள் ரீ குடித்தாள். அவனின் அறைக்கு இருவரும் வந்தனர். சந்தோசமாயிருந்தனர். அரூஸிடம் கடிதமெழுதி வாங்கிக் கொண்டாள். பார்சலையும் ஆழ்ந்த முத்தத்தையும் பரிமாறினர். தஸ்லீமா விடை பெற்றுப் போனாள்.

அதிகாலை சமீம் செல்போன் சிணுங்குதலில் தூக்கம் கலைந்தான். உம்மா தொலைபேசினார். சாறி, கடிதம் கிடைத்த விபரம் சொன்னார். அவரின் குரலில் சந்தோசம் தெரிந்தது.

'மகன், யார்ட்டக் கொடுத்தனுப்பினீங்க?'





'யாரும்மா, கொண்டு வந்து தந்தது?'

'யாரும் தரல்லியே... காலம்பற கதவத் திறந்தனா, படியில பார்சல். முதல்ல ஆச்சரியம், அப்புறம் சந்தோசமாயிட்டன்பா'

'பிடிச்சிருக்காம்மா?'

'மனசு நிறைஞ்சிடுச்சுப்பா. அது சரி, நீங்க வரல்லியா?..'

'வாற கிழமை விடுமுறையில வாறம்மா லீவு எடுக்கக் கஷ்டமாயிடுச்சு...'

'என்னவோ..., சந்தோசமா இருங்க மகன்...'

'எனக்கென்ன... ராஜா மாதிரி இருக்கன்மா'

அரூஸ் படுக்கையை விட்டு எழும்பாமல் விழித்தபடி கிடந்தான். உடன் பிறப்புகளின் எண்ணம் வந்தது. எல்லோரும் ஒன்று சேர்ந்திருப்பார்கள், வீடே இரண்டு பட்டுப் போகும், ஏக களோபரமாயிருக்கிற சந்தோச ஆரவாரப் பொழுதுகள் அவை என நினைத்தான். பெருமூச்சு எழுந்தது. இங்கு அதனை யார் ஈடுசெய்வது? சமீம்? அவன் அந்த நிகழ்வின் பின்னர் அறைக்கு வருவதில்லை. வெளியில், அவனது அறையில் மட்டுமே சந்திப்புகள். தஸ்லீமா?.. மேலே யோசிக்கப் பயமாகக் கூட இருந்தது அவனுக்கு.

மூன்று மாதங்கள் எவ்விதப் பரபரப்புமின்றிக் கடந்து போயின. அரூஸின் மனதில் மீளவும் வாசிப்பு, எழுத்தின் மீதான தேடுகைகள் எழத்துவங்கின. வாங்கி வந்த புத்தகங்கள் கெஞ்சுவதாகத் தோன்றிற்று. விதை மீளவும் வேர் விடத் துவங்கிற்று. முதலில் நாட்குறிப்பு, பின்னர் ஒரு சிறுகதை, கட்டுரை... மெதுவாக ஆனால் ஆழமாக மீளவும் அவனின் உள் மனத் தேடுகை நிரம்பத் துவங்கிற்று. தஸ்லீமாவுக்கு முதலில் இது கஷ்டமானதாக இருந்தது. தான் இருப்பதுவே தெரியாதபடி அவனின் மூழ்குதல்கள் வேறொன்றில் இருப்பது காண பொறாமையாகக் கூட இருந்தது. எனினும் மீளவும் ஒரு பிரச்சினை வர வேண்டாமே எனச் சகித்திருந்தாள். இருவருமாக உலாச் சென்றது, படம் பார்த்தது எல்லாமே குறைந்து வர உள்ளாய்ப் பொருமி நின்றாள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. ஏப்ரல் மாதத்தின் பெரும் கோடைக் காலமது. தஸ்லீமாவுக்கு அழைப்பு விடுப்பதாகச் சொன்னவன், எழுத

உட்கார்ந்ததும் மறந்து போனான். இரவுப் பொழுது முகத்தில் கோபம் தெரிய தஸ்லீமா அறை தேடி வந்ததும், ஞாபகம் கொண்டான். அவன் பேச முன்னரே பொரிந்தாள் அவள்.

'காலையிலிருந்து உங்கள் அழைப்புக்காகவே காத்திருந்தேன், தெரியுமா? இப்போது என்னைத்தவிர, மற்றதெல்லாமே முக்கியமாகிப் போயிற்று உங்களுக்கு...'

அரூஸ் பதில் சொல்லவில்லை. இவள், அன்பை பகிரங்கப்படுத்துதலை யாசிக்கிறவள். இவளை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது என்று பட்டது.

'தயவுசெய்து மன்னித்துக் கொள். உண்மையில் மறந்தே போய் விட்டேன்...'

'அதுதான் கேட்கிறேன், என்னை எப்படி மறக்க முடியும்?... இப்போது நான் தேவையில்லை உங்களுக்கு...'

'இப்போது என்றால்?..'

'அதை நான் வேறு சொல்ல வேண்டுமாக்கும்?'

அரூஸ் புன்னகை புரிந்தான். பின்னர் சொன்னான்,

'நீயே இதை வேறுமாதிரி எனக்குச் சொன்னவள். இப்போது ஆண்டாண்டு காலமாக மரபுரீதியில் வளர்ந்த புத்தி இப்படிச் சொல்கிறது. இருவருமாக இன்பம் துய்த்தபின், ஆணை மட்டும் விரல் சுட்டி உன்னை அப்போது சந்தோசப் படுத்தினேன் பார் என எப்படிச் சொல்ல முடிகிறது உன்னால்?'

தஸ்லீமா அமைதியானாள். அவன் ஆயாசமுற்றிருக்கக் கண்டாள். அவனுடன் வெளியில் செல்கிற எண்ணம் அவளிடம் இருந்தது.

'சரி, நாம் எங்காவது வெளியில் சென்று வருவோமே...'

'எங்கு?'

'கொன்கோர்ட்டில் சினிமா. பின் ஹோட்டலில் இரவுணவு...'





சற்றுத் தயங்கியவன் அவளது சந்தோசம் தொலைய வேண்டாம் என்பதால்,

'சரி...' என்றான். கதிரை நகர்த்தி எழும்பும்போது தனது திருமண விருப்பம் கேட்டு எழுதப்பட்டிருந்த உம்மாவின் கடிதத்தை மேசையில் கண்டான். இவள் பார்க்க வேண்டாமே என்கிற கவலை மனதில் ஒரு மூலையில் இருந்து எழத் துவங்கியது. தனக்கு திருமணம் நிச்சயமான செய்தியை எப்படி எடுத்துக் கொள்ளப் போகிறாள் என்கிற அரிப்பு இருந்து கொண்டே இருந்தது.

தஸ்லீமா அவன் அறையை ஒழுங்குபடுத்தினாள். கட்டில் விரிப்பு, உடுப்புகள், அடுத்ததாக மேசைக்கு வந்தபோதுதான், உறை பிரிந்து கிடந்த கடிதம் கண்டாள். பார்த்திருக்க மாட்டாள். உள்ளிருந்த புகைப்படம் அரைவாசி வெளித் தெரிந்து ஆவலைக் கூட்டிற்று. தயக்கம் விடுபட்டுப் போயிற்று. பிரித்தாள். படித்தாள். பெண்ணின் புகைப்படம் நோக்கினாள். முதலில் கவலை பிறந்தது. மனம் ஊமையாய் நின்றழுதது. கண்களில் கண்ணீர் சுரந்தது. முகம் இருண்டு வந்தது. அப்படியே கதிரையில் உட்கார்ந்தாள். இவ்வளவு தூரம் போயிற்றா? என்கிற நினைப்பில் அழுகை பீறிட்டெழுந்தது. தஸ்லீமா அனைத்தையும் உள்வாங்கினாள். தன்னை சுய நிலைக்குக் கொண்டுவர முயன்றாள். கடிதத்தைப் பழையபடி உறையிலிட்டு மூடி வைத்தாள். கதவு திறபடுகிற சப்தம் கேட்டதும் வலிந்து வரவழைத்த மலர்ச்சியுடன் அவனை எதிர்கொண்டாள். அரூஸ் மேசையை ஒரு முறை நோட்டமிட்டான். பின்னர் அவள் முகம் நோக்கினான்.

'ஒரு நிமிசம்...' என்றபடி உடுக்க ஆரம்பித்தான்.

அன்றைய இரவுப்பொழுது வழமையைப்போல இருக்கவில்லை. குறைவாகவே பேசினர். மௌனமாகவே சினிமா பார்த்தனர். உண்டனர். விரும்பாத அமைதி, தானாகவே இருவரிலும் குடி கொண்டிருந்தது. தஸ்லீமா அவனை, ஹோட்டலில் வைத்து வீடு போய்விடும்படி வேண்டினாள். பின்னர் வந்துவிடுவதாகச் சொன்னாள். அரூஸுக்கும் அது அப்போதைக்கு நல்லதாகப் பட்டது. மனதிலுள்ள பதட்டம், அமைதியின்மை ஓரளவு குறையுமென நினைத்தான். அவளைத் தவிர்த்து விடுவதில் விருப்பம் ஏற்பட்டு வருவதாக அவனுக்குப் பட்டது.

அரூஸ் தூங்காது தஸ்லீமாவின் வரவுக்காகக் காத்திருந்தான். கட்டிலில் முதுகு சாய்த்து சாய்ந்திருந்தான். அறையின் கதவு, ஜன்னல் திறந்தே கிடந்தது. திடீரென ஜன்னலருகே சலனம் கேட்டுத் திரும்பினான்.

ஜன்னலின் மரச் சட்டத்தின் மேலாக பாம்பின் தலை இருந்தது. உடம்பு வெளியே கிடக்க வேண்டும். அதன் கண்கள் அவனையே வெறித்துப் பார்த்தன. அதில் ஒரு தீவிரமும், ஏக்கமும் பரவியிருப்பதாக அவனுக்குப் பட்டது. அதன் தலை இப்போது உள்ளே வரத் துவங்கிற்று உடல் பின்னாக வழுக்கியபடி முன்னே நகர்ந்தது. பின்னர் சுவரில் தலை கீழாக... கட்டிலின் ஓரத்தினூடு, பின்னர் கட்டிலுக்கு... அரூஸின் அருகாகியதும், உடலை நீட்டிப் பார்த்தது... மூச்சைப் பலமாக உள் இழுத்தது. உடல் அப்படியே கிடக்க அதன் தலை சற்றே மேலெழுந்தது. தலை நாற்புறமும் சுழன்றது. அளவில் பருத்து வந்தது. முதலில் சடைமுடி, பின்னர் நெற்றி, பிறகு கண்கள்... கன்னங்கள்... கழுத்தின் மேலாக தஸ்லீமாவின் தலை உருவாயிற்று. பின்னர் நீண்ட சங்கை ஒத்த கழுத்து... அரூஸ் விழி மூட மறந்து பார்த்தபடி இருந்தான். தஸ்லீமா கடைசியாக கால்வரை உருமாறி வந்ததும் கட்டிலில் இருமுறை உருண்டு புரண்டாள். அவளின் நெஞ்சு விம்மித் தணிந்தது. அரூஸை விழித்து நோக்கினாள். அரூஸ் 'என்ன இது?' என்பதாக விழிகளில் கேள்வி நிற்க நோக்கினான்.

'என்ன தஸ்லீமா இது?'

அவனின் குரல் மெதுவாகவே கேட்டது. அவள் பதில் சொல்லவில்லை. அவனை வெறித்தாள். அதில் காதல், கனிவு எதுவுமில்லை. அடிபட்ட உக்கிரம் தெரிந்தது. 'அடப்பாவி என்கிற சுட்டுகை இருந்தது. திடீரென அவள் சொன்னாள்,

'நீங்கள் நான் நம்பியபடி இல்லை. துரோகி நீங்கள்?'

'என்ன சொல்கிறாய் நீ?'

என்றபடி கட்டிலில் போர்வையை அவள் புறம் கொடுத்தான். அவள் உடலை மூடியபடியே சொன்னாள்.

'எனக்குத் தெரியும். உங்களுக்குத் திருமணம் நிச்சயம் பண்ணியது தெரியும்'

அரூஸ் கொஞ்ச நேரம் பேச மறந்தான். கட்டிலில் கிடந்த அவளை வெறித்தான். 'என்ன எதிர்பார்க்கிறாள் இவள்? இவளுடன் திருமணமா? குடும்பம், குழந்தை என்கிற வரையறை இவளுக்குச் சரிப்பட்டு வருமா? ஏன் புரிய முயற்சிக்கிறாளில்லை. எத்தனை பைத்தியகார எதிர்பார்ப்பு இவளுடையது?' அரூஸ் சொன்னான்,





'தஸ்லீமா என்ன பேசுகிறாய் நீ... எனக்கென குடும்பம் ஒரு வாழ்க்கை தேவையில்லை என்கிறாயா?...'

'ஏன் நீங்கள் இதைப்பற்றிப் பேசவில்லை...'

'உனக்கு முன்னரே தெரியும் என நம்பினேன். நீ அறிந்தே இருப்பாய்...'

'உண்மைதான். உங்கள் மீதான அதீத அன்பும், காதலும் என் எண்ணத்திற்கு மூடி போட்டு விட்டது...'

அவளின் குரலில் ஏக்கம் தெரிந்தது. அரூஸ் மேலும் குழப்பமுற்றான். இவளைன் எப்படி எதிர்கொள்வது என்கிற கவலை எழுந்தது. தஸ்லீமா மேலும் கேட்டாள்

'உங்கள் மீது எத்தனை தூரம் பைத்தியமாயிருக்கிறேன் என்பது, உங்களுக்குத் தெரியுமா?...'

'தெரியும்...'

'அப்படி இருந்தும், இது என்ன முடிவு? எதற்கு இந்தத் திருமணம்?'

'அப்படியானால்...'

அரூஸின் பதிலில் தொக்கி நின்ற அத்தனையையும் தஸ்லீமா புரிந்து கொண்டாள். அவன் மேலே பேச அவள் விரும்பவில்லை. அவளே சொன்னாள்,

'நீங்கள் எனக்கு மட்டுமேதான். என்னால் உங்களை, உங்களது அன்பை இன்னொருத்தருடன் பங்கு போட முடியாது. அதை அனுமதிக்கவும் மாட்டேன்...'

'இது எத்தனை மடத்தனமான உலறல்'

தஸ்லீமா அவனை உற்றுப் பார்த்தாள். அவன் தலை தாழ்த்தினான். அவள் சொன்னாள்,

'பரவாயில்லை, நான் அப்படியே இருந்துவிட்டுப் போகிறேன்'

அரூஸுக்கு. உடல் நீண்ட நாகம் பாதம் துவங்கி கழுத்து வரை தன்னைச் சுற்றி வளைத்துக் கொண்டு முகத்தெதிரே படமெடுத்து நின்றாடியபடி 'என்ன?' என வினவுவதாக எண்ணம் பிறந்தது. முதலில் தனது உடலைச் சூழ உள்ள பிடியைத் தளர்த்த வேண்டுமென நினைத்தான். சிகரட் பற்ற வேண்டும் போலிருந்தது. கட்டிலை விட்டும் எழுந்தான். சிகரட் பற்றியபடி அறையுள் உலாவினான். பின்னர் அவளைக் கேட்டான்.

'சரி தஸ்லீம், இப்போது நான் என்ன செய்ய வேண்டுமென்கிறாய்... நீ விரும்புவதைச் செய்கிறேன்...'

தஸ்லீமா பதில் சொல்லாது அவனை நோக்கி புன் முறுவல் செய்தாள். அரூஸும் சிரித்தான். சிகரட்டை அறையின் மூலையில் வீசினான். அவளின் அருகே நெருங்கினான். கட்டிலில் சரிந்தான். மெதுவாக தலையில் முத்தமிட்டான். தஸ்லீமா சிணுங்கினாள். இதுவரை இத்தனை அவசரமாக, முகம் உணர்வு மாறி இழைத்ததில்லை அவன். அவள் சந்தோசமாக அவனை உள்வாங்கினாள்.

தஸ்லீமாவின் மேலாக அரூஸ் கிடந்தான். அவளின் தலையைக் கைகள் கோதின. இரு கைகளும் காதுகளில் கூச்சமூட்டின. தஸ்லீமா உடல் நெளிந்தாள். அரூஸ் கைகளைக் கீழிறக்கினான். கழுத்தின் இரு புறமும் இரு கைகளும் சிரிப்பு மூட்ட முயன்றன. பின்னர் இறுக்கமாக குரல்வளை பிதுங்க வேண்டி இறுக்கின... தஸ்லீமாவால் முதலில் நம்பக் கஷ்டமாயிருந்தது. அவன் முகத்தில் தெரிந்த தீவிரம் கண்டு உண்மை உணர்ந்தாள். உடல் தூக்கிப் போட ஒரு முறை துடித்தாள். பின்னர். கழுத்தின் குரல்வளை உடைபடாதபடி அங்கு பலம் சேர்த்தாள். அதற்கு முன் ஆம்... தலை உதறி விடுபட்டதும் தலையை உயரே தூக்கினாள். அவனின் கழுத்து அவளின் வாயருகே வந்து. முழுப் பலம் திரட்டி வாயினை விரித்தாள். அவளின் குரல் வளையினை வாயின் பற்களால் ஆழப் பற்றினாள். இரத்தம் பீறிட நஞ்சு செலுத்தினாள். அரூஸுக்கு உண்மை பிடிபட கொஞ்ச நேரமெடுத்தது. அதற்குள் அவன் உடல் விஷத்தில் விழத் துவங்கியிருந்தது. முதலில் க்ண் மயக்கம், பின்னர் தலையில் பேரிடி - பெருந் தாகம்... அசைவு மட்டுப்படுவது புரிந்தது, அவளின் மேலாக உடல் சரிய அரூஸ் விழுந்தான்.

மறுதினம், செய்தி கேட்டு சமீம் ஓடி வந்தான். அவனின் ஆருயிர் நண்பன் அரூஸ் உடல் நீலம் பாரித்திருக்க, வாயில் நுரை தள்ளியிருக்க கட்டிலில் மரணித்திருந்தான். அவன் அருகாக கதைகளில் படங்களில், வாசித்து, பார்த்து மட்டுமே அறிந்திருந்த இச்சாதாரிப் பாம்பு கிடந்தது.





**எச்சரிக்கை:-**

முற்றும் போட ஆசைதான். என்னிடம் கதை சொன்ன சமீம் மாமாவிடம் இதை வாசிக்கக் கொடுத்தேன். வாசித்து முடிந்ததும் அவர் கேட்டார்,

'பாம்பு செத்துப் போனதென்று உன்னிடம் யார் சொன்னது?'

நான்: அப்படியானால் அந்தப் பாம்பு...

சமீம் மாமா: அரூஸின் உடலில் சூடு இருந்தது. ஆனால் பாம்பு குளிராக விறைத்தல்லவா கிடந்தது.

நான்: 'என்ன...?'

சமீம் மாமா: 'அது எப்போதோ செத்துப்போன வேறொரு பாம்பு. அவள் அதை அங்கு போட்டிருக்கக் கூடும்'

நான்: 'அப்படியானால் அந்தப் பாம்பு...'

சமீம் மாமா: 'என்னைக் கேட்டால்? அது யார் வீட்டில், இப்போது என்ன பெயரில் வாழ்ந்து கொண்டிருக்கிறதோ...'

'நான்: ஆஹ்...!'

- இப்போதுதான் உண்மையில், 'முற்றும்.'-

# அவளும் இரு குரோட்டன்களும்

நுஸ்கி நேரத்தைப் பார்த்தார். ஒன்பது இருபது. இனிக் 'கடை'யை மூடவேண்டியதுதான். நான்கு மணிக்குத் திறந்தது. ஐந்து மணித்தியாலங்களாக ஒரே இடத்தில் அமர்ந்தபடி வருகின்ற நோயாளர்கள் வாய்நாற்றத்துடன் தங்களது நோயை விபரிக்க, காதைக் கூர்மையாக்கி. பார்வையை நோயாளிமீது நிலைக்க விட்டபடி கேட்டுக்கொண்டிருப்பது எத்தனை பொறுமைக்குரியது. எத்தனை விதமான நோய்கள், நோயாளிகள்? நுஸ்கிக்கு வாழ்க்கை வெறுத்துப் போய்விட்டிருக்க வேண்டும். ஆனால் அவருக்கு வாழ்க்கை மீது இன்னமும் பிடிப்பு இருந்தது, சந்தோசம் இருந்தது.

தனது அறையை, நுஸ்கி மிக அழகானதாகப் பேணினார். சுவருக்கு இளம் பச்சை நிற வர்ணம், ஜன்னல் கம்பிகளை பற்றியபடி வளருகின்ற கொடிமரம். உள்வரும் காற்றுடன் இழைத்தபடி ஆடுகின்ற அதன் சிறிய இலைகள். ஒரு மூலையில் நீண்டு வளைந்தபடி சூரியகாந்தி மரத்தைப் போன்ற மின் விசிறி. நாலடி, நீளமாய் மேசை. அதன் மேல் மூங்கிலாலான பேனை வாங்கி. இரண்டொரு புத்தகங்கள். மேசையின் நேர் மேலாக, ஆண், பெண் பேதங்கடந்து 'இந்தா இருக்குப் பார்க்கிறாயா?' என நிக்கரை நீக்கிக் காட்டியபடி சிரிப்பாய்ச் சிரிக்கின்ற குழந்தைகளைத் தாங்கிய கலண்டர். பின்புறமாக பூக்களைத் தாங்கியபடி திரைச்சீலை. திரை நீக்கின் ஆறடி நீளக் கட்டில் சுவரைத் தொட்டபடி. இவை எல்லாவற்றையும் விட, முழுக்கவாய் மழித்த முகத்துடன் குழந்தைத் தனமாகச் சிரித்தபடி நுஸ்கி. 'என்னப்பா உடம்புக்கு? நல்லாத்தானே இருக்காய்?' என்ற படி வரவேற்கின்ற, மனதைத் தொடுகின்ற அவரின் பேச்சு.





அவரின் அறையினுள் பிரவேசிக்கின்ற யாருக்குமே அவரைப் பாராட்ட மனசு வரும். அறையின் சூழலே நோயாளியின் பாதி நோயைப் போக்கடித்து விடும். எதையுமே ஒழிவு மறைவின்றிச் சொல்ல வைத்துவிடும். நுஸ்கி கைகளை மேலுயர்த்தி சோம்பல் முறித்தார். மனசும், உடலும் ஓய்வு வேண்டி நின்றன. திடீரெனக் கதவு தட்டப்படுகின்ற சத்தம் கேட்டது.

'எஸ்...'

கம்பவுண்டர் அஸ்ரப், கதவைத் திறந்து தலையை மட்டும் உள்ளே நீட்டியபடி நின்றான்.

'ஆர். ஓ. அமீன் வந்திருக்கார்...'

'வரச் சொல்... வரச் சொல்... அவர், என்னோட ஒண்டா யூனிவர்ஸிட்டில படிச்சவர் தெரியுமா?...'

அஸ்ரப் வெளியேறினான். சிறிது நேரத்தின் பின் அமீன் உள்ளே வந்தார்.

'இருடாப்பா. கன நாளுக்குப் பிறகு. என்ன உன்ர உடம்புக்கு?'
அமீன் சிறிது நேரம் பேசவில்லை. நுஸ்கியைப் பார்த்தபடி இருந்தார். நுஸ்கி காத்திருந்தார்.

'உடம்புக்கு ஒண்டுமில்லடா. இப்ப நீ ப்ரியா?'

நுஸ்கி அமீனை வெறித்தார். அமீன் எதையோ பேச அதிக நேரம் கேட்கிறார். அறைத் தோழன் என்பதை விட தூரத்துச் சொந்தம் வேறு. இதுவரை வெளியூரில் இருந்தவர் இப்போதுதான் முதல் முறையாக 'நோயாளி' என்ற ஸ்தானத்தில் வந்திருக்கிறார். இவரின் அடித்தளத்தைப் பார்த்தால் விடயம் பெரிது போலிருக்கிறது. நுஸ்கி திடீரென அழைப்பு மணியை அழுத்தினார். அஸ்ரப் உள்ளானான்.

'அஸ்ரப் இனி யாரையும் உள்ளே விடாதே! முன் கதவுகளைச் சாத்திவிடு'
அஸ்ரப் வெளியேறினான்.

'இப்போது சொல். நான் முழுக்கவாய் ப்ரிதான்'

அமீன் திடீரெனப் பேசவில்லை. நுஸ்கியையும், ஜன்னலில் படர்ந்திருந்த கொடியையும் மாறி மாறிப் பார்த்தபடி சற்று நேரமிருந்தார். நுஸ்கி, அமீன் பேச வெட்கப்படுகிறாரோ என்ற சம்சயம் எழுந்தது.

'இப்ப 'றிட்டயர்'' ஆயிட்டாய் இல்லையா? ஊர் வந்து எவ்வளவு காலமாகிறது?'

'ஒரு மாதம்தான். மாளிகைக் காட்டில்தான் குடியிருக்கிறோம்...'

'றோம் என்றால் யாருடன்...'

'மனைவியும், கடைசி மகளும்'

'சரி, பொழுதெல்லாம் எப்படிப் போகுது?'

'சும்மாதான் வீட்ட இருக்கிறன். காலையில மார்க்கெற், ரீ.வி., நிறைய வாசிக்கிறன்... அவ்வளவுதான்...'

'பிறகென்ன பிரச்சினை வந்தது?'

'நுஸ்கி, உடம்புக்கு ஒண்டுமில்ல. மனசு சரியாயில்லடா'

நுஸ்கி மௌனமானார். அமீனே பேசட்டு மெனக் காத்திருந்தார்.

'நுஸ்கி, தயவுசெய்து நான் சொல்றதக் கொண்டு, என்ன வித்தியாசமா நினைக்கப்படாது. நான் ரொம்ப நாளா இதால கஷ்டப்பட்டுட்டன்டா. யார்ட்டப் போய்ச் செல்றதுண்டு தெரியாம... எனக்குள்ளாவே உக்கிப் போயிடுவன் போலரிக்கு...'

அறையின் அமைதி கடினமாயிருந்தது. அவரது பேச்சு அறுந்துவிடாதபடி இருக்க, 'கேட்ட படிதான் இருக்கிறேன்' என்பதைத் தெரியப்படுத்தவென இடையிடையே 'உம்... ஆ... ஓ.ஹோ... அப்படியா... பிறகு...' எனச் சொன்னவராக நுஸ்கி ஆயத்தமானார்.

'ஏன்ரா வீட்டுல ஏதும் பிரச்சினையா?...'

'சே... அப்படி ஒன்றுமில்ல. நீ என்ர றூம் மேற், அதவிட, உன்னோட 'முள்ளில் படுக்கையிட்டு...' புத்தகமும் பார்த்த நான். அதாலதான் இத உன்னட்ட சொல்லலாம்ண்டு பட்டிச்சு...'

நுஸ்கிக்கு சந்தோசமாயிருந்தது. தனது எழுத்து வெற்றி பெற்றதான உணர்வு கிடைத்தது. நிறைவை ஓரமாய் வைத்தபடி அமீனை வெறித்தார்.

'அது சரி, பிரச்சினை என்னண்டு இன்னமும் சொல்லல்லியே நீ...'





'சொல்றன், சொல்றன்! அதுக்கு முதல்ல' எனக்கு ஒண்டு தெரியனும். தாவரங்களுக்கும் ஜீவன் இருக்குதுண்டத நீ நம்புறியா?'

'நீ ஜீவனெண்டு எதைச் சொல்கிறாய்? உயிர்த் தன்மையையா?'

'சே... சே..., உணர்வு சம்பந்தப்பட்டது நுஸ்கி...'

'அமீன், எனக்கு திடீரெண்டு பதில் சொல்ல முடியல்ல. நீ என்ன நினைக்கிறாய்?'

'இருக்கணும் நுஸ்கி. நம்முட பாசம், அன்பு, கோபம், தாபம், குரோதம், காமம்... இந்த மாதிரி எல்லாமே அதுகளுக்கும் இருக்கணும்...'

'அமீன் இது எப்படிச் சாத்தியம். இந்த உணர்வுகளை உணர ஐம்புலனும் அவசியமில்லையா?'

'அதான், அதான். நீ சரியான இடத்திற்குத்தான் வாறாய். புலன் வாங்கி நம்மளுக்கு வேற வேறயாகி அஞ்சாப் போச்சு. ஆனா அதுக்குப் பிரிவா இல்ல. அதுல எல்லா இடமுமே உணரக்கூடியதுதான். அதாவது மொத்த மரமுமே ஒரு புலனங்கம் தான்...!, அமீன் இதைக் கூறிய போது குரல் அழுத்தமானதாகயிருந்தது. வலியுறுத்துவதாக நுஸ்கிக்குப் பட்டது.

'அமீன், அப்ப மூளைன்றது உணர்வோட சம்பந்தப்பட்ட தேயில்லையா?...'

'நுஸ்கி, உணர்தல் வேற. மூளையின்ர தொழில் வேற தெரியுமா? நாம உணர்தலுக்கேற்ப நடக்குறமில்ல. அதுக்குக் காரணமே இந்த மூளைதான் தெரியுமா?...'

'அமீன், எனக்குக் குழப்பமாயிருக்குது...'

'நம்மட மூளை உணர்வுகள ஏவலாளியா வச்சிருக்குது. அதால புத்திங்கிறது, நேர்மையா நம்மள உணர விடுதில்லங்கிறன்'

'இப்பவும் எனக்குத் தெளிவாகல்ல...'

'நம்மட மனுசி கதைக்கிற கதையில இல்லண்ட கோபம் வருது நமக்கு. ஆனாலும் புள்ளைகள் நன்மை - தீமை, பழையதுகள் எல்லாம் நினைவுல வந்து அதாவது இந்தப் புத்தி குறுக்கறுக்கிறதால கோபப் படவே முடியாமப் போச்சில்லியா?...'

நுஸ்கிக்கு இழை பிரிந்தது. அமீனை நினைத்து ஆச்சரியமாயிருந்தது. ஆர்வமாயினார்.

'ஓம்டா... ஓம்டா...'

'ஆனாத் தாவரங்கள் அப்படி இல்லடா. தன்ர உணர்வுகளுக்கு எந்தத் தீங்குமே அதுகள் செய்யுறதில்ல. குழந்தைப் புள்ளைகள் மாதிரி அதுகள்'

'அமீன், நீ அதிகமா வாசிக்கிறாய், போலரிக்கு?'

'எப்ப அத விட்டது நான். இப்ப ஓய்வுலயும் நிக்கிறனா, அதவிடப் பொழுது போக்காட்ட விருப்பமானதா வேறென்ன இருக்கு?'

'என்ன மாதிரிப் புத்தகங்கள் பார்க்கிறார்.?'

'எதுண்டுல்ல. குமுதம் லைட் ரீடிங்குல வாற 'துணை நடிகைகள்ள மாரெல்லா மியூசிக்குக்கேத்தாப்போல ஒண்டா எப்படி ஆடுது'ண்டதுலஇருந்து. கோணங்கிட 'உப்புக் கத்தியுள் மறையும் சிறுத்தை' வரை படிக்கிறன். வேற மொழிப் புத்தகங்கள். பொழுது ஜாம் ஜாமுண்டு போகுது.

இதுல தாவரங்களும். அதுர உணர்வுகளும் எங்க வந்தது?'

'நுஸ்கி, நானும் ஒரு தாவர ஆராய்ச்சியாளன் தெரியுமா? அதவிட ஜே. கிருஷ்ணமூர்த்தி சொல்கிறார். காய்க்காத தென்னை மரத்துட்ட ஒரு நாள் வந்து உனக்குக் காய்க்கிறதுக்கென்ன, இவ்வளவு செழிப்பா இருக்கிற நீ, காய்ச்சாத்தானே நிறைஞ்சதாயிருக்கும்ண்டாராம் ரெண்டு மாசத்துல குலை குலையாத் தள்ளிட்டுதாம். டிஸ்கவரி செனல்ல காட்டுறான் 'மைக்ரோவேவ்'வ தாவரத்துல இணைச்சிட்டு இலையக் கிள்ளினா அது கீரடி வாரடிண்டு கத்துதுண்டு... ஒரு விஞ்ஞானி ரோசாவுக்குத் தண்ணி ஊத்துறப்ப நாளாந்தம் 'உனக்கெதுக்கு முள்ளு?'ண்டு கேப்பாராம். அது, பூத்திச்சாம், முள்ளில்லாம...' அமீன் பேசும்போது உணர்வு வயப்பட்டிருப்பதை நுஸ்கி அவதானித்தார். நுஸ்கி நம்ப வேண்டுமே என்ற எதிர்பார்ப்பு அதில் இருந்தது. நுஸ்கிக்கு ஓரளவு சந்தேகம் இருந்து கொண்டேயிருந்தது.

'அமீன், இதுல உனக்குப் பிரச்சினை எங்கிருந்து வந்தது?...'

அமீன் நுஸ்கியைச் சற்று நேரம் பார்த்தபடி இருந்தார். அவரின் விரல்கள் மேசையில் கீறியபடி இருந்தன. தலை திடீரெனத் தானாகவே தாழ்ந்தது.





'நுஸ்கி, ரெண்டு மரத்தப் பார்த்தா எனக்குப் பயமாயிருக்குடா. அதுகள் 'பாவி, எங்கள இப்படி ஆக்கிட்டியேடா'ண்டு கேக்கிறாப் போலரிக்கு'

'என்னது?'

நுஸ்கி நிமிர்ந்து உட்கார்ந்தார். அவரது அனுபவத்தில் இப்படி ஒரு சம்பவம் கேட்டதில்லை. இது கூட ஒரு 'மேனியா' வகைதானே? மனப்பிரமையில் பேசுகிறாரா இவர்? பேச்சின் தெளிவைப் பார்த்தால் அப்படி நம்பவும் முடியவில்லை. நுஸ்கிக்கு யோசிக்க வேண்டும் போலிருந்தது. அழைப்பு மணியை அழுத்தினார், அஸ்ரப் உள்ளானான்.

'அஸ்ரப், ரெண்டு டீ கொண்டு வா'

அறை அமைதியாயிருந்தது. அமீன் ஏதாவது மன அழுத்தங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டுமென்றே நுஸ்கி நம்பத் துவங்கினார். இவரை இன்னும் பேசவைக்க வேண்டும். இதன் ஆணிவேர் எதுவெனப் பிடிபட்டால் ஓரளவு தெளியக் கூடும். டீ வந்தது. இருவரும் பேசாமலேயே குடித்து முடித்தனர்.

'அமீன், இது 'ஏன்'ண்டு நீயாகவே யோசிச்சியா?'

'யோசிச்சன். இதே மரத்த என்ர இருபது வயசில மிகவும் நெருக்கமாகப் பார்த்தது ஞாபகமிருக்கு. அதே மரங்கள்தான் ஆனா இப்ப கொஞ்சம் உசரமா வளர்ந்திருக்கு...'

'இதே மரமா?...'

'ஆமா இதே குறோட்டன்ஸ்தான். கொஞ்சம் கிழட்டுத்தனம் தெரியுது மற்றப்படி இதே இடைவெளியில இரண்டையும் பார்த்தது, மனசுல மாறாமலேயே இருக்கு...'

'இருபது வயசுல பார்த்த மரம்... எல்லாமே நினைவுல இருக்கா?

அமீனின் முகத்தில் திடீரெனக் களை கூடிற்று. சந்தோசம் அதில் தெரிந்தது.

'ம்..., நுஸ்கி. ஏ.எல். சோதனை எடுத்துட்டு லீவுல நீண்ட காலமது. கூட்டாளி நளீம்ர வீட்ட பெட்மின்ரன் விளையாடிட்டு ஆறரைக்கெல்லாம் சைக்கிள்ள திரும்புவன். அப்பதான் அந்த அழகுல நான் வீழ்ந்தது. டானா வடிவுல மூலைச் சுவர். ஆறடி உயரத்தில் ரெண்டு குறோட்டன்ஸ் நடுவுல, அது நஜீமா. அவக்கு படிய வார்ந்து பின்னால

கலைச்சு விட்ட முடி. அதுட நெஞ்சளவில மதிலிருக்கும். அது மதில்ல கைய வச்சபடி வீதியப் பார்த்து நிக்கும். அது ரொம்ப அழகுடா. பனை மரம் மாதிரி திமிர் பிடிச்ச அழகு அது, ஆண் மாரிங்கிறாப் போல நீண்டு மெலிந்த உடம்பு. விலா எண்பே தெரியாத படி, தெம்பிலிக் கணக்கா மாரு. நெற்றியில அவரை இலை நரம்பு மாதிரி அஞ்சு கோடு. மல்லிகைப் பூக்கணக்கா முகம் முழுக்கச் சிரிப்பப் பதுக்கி வச்சிட்டு என்னமா நிப்பா தெரியுமா? அந்த மரங்கரெண்டாலயும் அது அழகா, இல்ல மரங்கள் இவளால அழகாயிட்டுதாண்டு குழம்பினன். அந்த இடமே ஒரு பிடிமானத்துக்குரியதாப் போச்செனக்குத் தெரியுமா?...'

நுஸ்கிக்கு கதை சுவாரஸ்யமாயிருந்தது. விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தன் என்பது மனதை என்னமாய் மாற்றியிருக்கிறது. நஜீமா அவருக்கு பனைமரம், தெம்பிலி, அவரை, மல்லிகை, பனைமரம்... ஆஹா... சூழலின் ஆற்றலைப் பாராட்ட எண்ணம் வந்தது. காதலியைக் கூட அஃறிணையில் வைத்துப் பேசச் சொல்கிறது. அல்லது மரியாதை நிமித்தம் அவளை 'அது' வென்கிறாரா?...'

'பிறகென்ன நடந்தது...'

'தினமும் அதால வந்த நான். எப்படா ஆறரையாகும்ண்டு எப்படித் தவிச்சிருக்கன் தெரியுமா? அவவும் தவறினதுல்ல. என்ன ஏமாத்தினதில்ல. பட்டுண்டு ஒண்டாயிட்டம் நாங்க. நான் மதிலுக்கு வெளியே - றோட்டுல. அவ உள்ளுக்க நிண்டு பேசுவம். அவட வீட்டமைப்பும் இத அங்கீகரிச்சிருக்கணும். தடையொண்டும் அங்கால வரல்ல...'

'அப்ப எங்கிருந்து வந்தது?'

'நான் ரொம்பச் சந்தோசமாக இருந்தன்டா அப்ப. வானத்துல உசரமாப் பறக்கிற நெனப்பெனக்கு. உடம்பு வாகுதான் அதுக்குத் திமிரே தவிர, மனசு பூப்போலடா' எத்தனதரம் அவளைச் சீண்டியிருக்கன், காயப்படுத்தி இருப்பன் தெரியுமா? ஒரு வார்த்த என்ர மனம் நோவும்படி அவ பேசினதில்ல. 'சும்மா போடா'ண்ட படி, சிரிச்சுண்டேயிருப்பா. ரெண்டு பேரும் பைத்தியம் பிடிச்ச மாதிரிப் பழகினம் அவள்ட்ட நெருக்கமாகவே பழகின நான், தெரியுமா?...'

அமீனின் குரல் குழறிற்று. கரகரப்பாயிருந்தது. நுஸ்கிக்கு பனிப்பாறை உடைந்து வருவதாகத் தோன்றிற்று. அவராகவே இன்னும் கொட்டிவிடட்டும் எனக் காத்திருந்தார்.





'நுஸ்கி, எல்லாமே எட்டு மாசம்தான். என்ர வீட்டால தடுத்துப் போட்டாங்க. நானாக்காரன் அதுர வீட்ட போய்ச் சத்தம் போட்டுப் பேசிட்டு வந்தான். ரொம்பக் கொடுமை அதுல, 'மேனா மினுக்கிய ஆம்புளய வளைச்சிப் போடவாடி வாசல்ல நிக்க வைக்கியள்'ண்டு கேட்டதுதான். அவ அதுக்குப் பிறகு முகமே காட்டல்ல. வீதிக்கே வரல்ல. வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு போயிட்டா. நான் தவிச்சுத் திரிஞ்சன். அவங்கட வீடே முகம் கொடுக்கல்ல. குறோட்டன் இரண்டும் தனியா நிண்டுச்சு. எத்தனை சத்தியம், வாக்குக் கொடுத்தவன் நான். அது எல்லாமே அதுகளுக்குத் தெரியும். நஜீமா அசரவேயில்லை. 'என்னோடக் கோபமா? விருப்பமத்துப் போச்சா?' எத்தன பேரவுட்டுக் கேட்டன் தெரியுமா? பதிலே சொல்லல்ல. ஊமையாவே போயிட்டுது அது. என்னையும் பேராதனைக்குப் பெட்டிகட்டி அனுப்பிட்டாங்க. எனக்கு அவட பித்தம் தெளிய ரெண்டு மாசம் தேவைப்பட்டாச்சு...'

'அமீன், அப்ப மறந்துட்டாய், தெளிஞ்சுட்டாய் இல்லையா?...'

'அப்படித்தான் நம்பினன். என்ன மதிக்கல்லியேண்ட ஆத்திரமும் இருந்திச்சு. இதவிட மில் முதலாளியிட மகன் ஆமினாவக் கள்யாணம் முடிச்சதும், சுத்தமாவே மறக்க முடிஞ்சிச்சு. அஞ்சு வருஷத்துல திடீரெண்டு இன்னொரு குழப்பம் வரும் வரை...'

'என்ன குழப்பம்...'

நஜீமாட புருஷன் திடீர்ண்டு மௌத்தாப் போயிட்டான். புள்ளையே இல்ல அவங்களுக்கு. நோயாளிப் புருஷன் அவன். நம்மளால பேர்வாங்கப் போய் இப்படி ஒரு சொத்தையப் பண்ணும்படி ஆச்சேண்டு தவிச்சன் கொஞ்ச நாள்...'

'அப்பவே உனக்கு குற்றவுணர்வு ஆரம்பிச்சிட்டுதுல்லியா?'

'ம்... என்னால ரெண்டு கிழமையாத் தூங்க முடியல்ல. சாப்பிட முடியல்ல. பிறகு குடும்பம், வேலைப்பழு எல்லாமே நிவர்த்திச்சுது...'

'அமீன், புதுசாக் குழப்படி எங்கால வந்தது?...'

'சுத்திச் சுத்தி சுப்பர்ர கொல்லங்கிற மாதிரி, கடைசிக்கட்டம் ஊரோட வந்தனா, மனசு அலையத் துவங்கிட்டுது, பாரமாயிருக்குடா எனக்கு...'

'எப்படி... நினைவு வருதா?...'

'இல்ல நுஸ்கி, எங்க நான் போறண்டாலும் நஜீமாட வீதியாலதான் போகணும், வரணும். அதே டானா மூலை. அதே மரங்கள்.

இலையெல்லாம் உதிர்ந்திட்டு, உச்சியில மட்டும் பச்சைய வச்சிட்டு நிக்குதுகள். அதுகள நிமிர்ந்து பார்க்க முடியல்ல என்னால. நான் நஜீமாவோடப் பழகினது. பேசினது. எல்லாமே இதுகளுக்குத் தெரியும். கேட்டுட்டே இருந்ததுகள். 'அடப்பாவி, இப்படி ஆக்கிட்டியேடா?'ண்டு கேக்கிறாப் போலரிக்கு. அதுரசந்தோசம் கெட்டதுக்கே நான்தான் காரணம்ண்டு சொல்ற மாதிரியிருக்கு. எனக்குப் பயமாயிருக்கு நுஸ்கி...'

அமீனின் விரல்கள் நடுங்குவதை நுஸ்கி கண்டார். நுஸ்கி பேனையின் மூடியைத் திறப்பதும் மூடுவதுமாக உட்கார்ந்திருந்தார். 'என்ன மனமிது? அவளின் இளமையைப் பாழ் படுத்தி விட்டோம் என்ற குற்றவுணர்வா இது?'

'அமீன், நீ வேறு வீதியைப் பயன்படுத்தலாம்தானே...'

அமீன் நுஸ்கியை ஏளனமாகப் பார்த்தார். நுஸ்கிக்கு இதைச் சொல்லியிருக்க வேண்டாமோ என்ற எண்ணம் வந்தது.

'நுஸ்கி, குரங்கும், குளிசையும் கதை தெரியுமா உனக்கு? ஏன் இலேசான வழியை விட்டுவிட்டு, இதால வாறம்ண்ட நினைப்பே போதாதா?'

நுஸ்கி அமீனை வெறித்தார். எல்லாவற்றையும் ஒப்புவித்த பாவனையில் அமீன் இருந்தார். தனது மனதும் அழுத்தமாயிருப்பதை உணர்ந்தார்.

'அமீன், குற்றவுணர்வுகளில் தவிக்கிறாயா?...'

'இருக்கலாம் நுஸ்கி. ஊரில் பேர் வாங்கின காதல் அது. அவள் அந்த நோயாளியைப் பண்ண வேண்டி வந்ததும் என்னால் தானே...'

'அதுக்கு...'

'அந்த 'ஜெம்'மைக் கூழாங் கல்லாக்கி விட்டோமோண்ட வருத்தம்...'

'அமீன், மனுசனுங்கிறது தப்பு செய்யுற பொறப்புத்தானே. அது, வருந்தித் திருந்துறதுங்கிறதே பெரிதுல்லியா...'

'நுஸ்கி, சமாதானப் படுத்திக்கச் சொல்றியா?...'

'அப்படியில்ல அமீன். நீ நிறைய நேரம் தனிமையாயிருக்காய் போலரிக்கு. அதால, பழையதெல்லாம் ஞாபகப் படுத்துறாய். வாழ்க்கையின்ர பிந்திய காலத்தில் ஏதாவது பிடிமானம் அவசியம், அமீன்'

'நீ என்ன, மிகவும் சிறிதாப் பார்க்கிறாய் இதை?'





'இப்ப மௌத்து பற்றிய பயமும் சேர்ந்துட்டுதா? பயமாயிருக்குனக்கு! தயவுசெய்து, மதக் கடமையில, இல்லாட்டி பொதுச் சேவை ஒண்டுல நேரத்தச் செலவிடன்...'

அமீன் சற்று நேரம் பேசவில்லை. நுஸ்கிக்கு 'உபதேசிக்கிறோமோ' என்ற அச்சம் எழுந்தது. பரவாயில்லை என்ற எண்ணமும் வந்தது.

'அதாவது, என்னை ஏதாவது ஒன்றில் அடிமைப்படச் சொல்கிறாயா?...'

'அமீன். நீ அதை அப்படித்தான் பார்க்கிறாயென்றாலும் எனக்குக் கவலையில்லை, அதில் தப்பேயில்லை. சொந்தத் தாயை விட அறுபது மடங்கு அன்பானவன் இறைவன்! எந்தப் பாவத்தையும், திருந்தினவனா இருந்தா, மன்னிக்கிறேன்'ண்டு சொல்லியிருக்கான். இறையாதரவு மனச் சாந்தியைத் தருமோ இல்லியோ?...'

'என்னவோ சொல், எனக்குத் திருப்தியேயில்லை...'

'உனக்கு நான் என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஆனால், தாவரங்களின் உணர்வுகளையே மதிக்கிற உன்மீதா வன்மம் பாராட்ட மனசு வரும்? அந்தத் தாவரங்கள் உனது உணர்வுகளை மதிப்பிடவில்லை. என்ன விடு, நீ என்ன செய்யலாமென்கிறாய்?...'

'நுஸ்கி, உன்னிடம் கவிதைத் தனமான மனசு இருக்கிறது என்பதால்தான் சொல்ல வந்தேன். நீ சொன்னதன் படி இனிப் பொதுச் சேவை, மதத்துல மயங்கிப் பார்ப்பமே...'

அமீன் சொல்லிவிட்டு மெல்லிசாகச் சிரித்தார். நுஸ்கியும் சிரித்தார். திடீரென அமீன் விடை பெறும் பொருட்டு எழுந்தார். நுஸ்கி வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தார். அதன் பிறகும் கூட, அமீனுக்குச் சரியான பரிகாரம் வழங்கினோமா என்பதில் நுஸ்கிக்குச் சந்தேகம் இருந்து கொண்டேயிருக்கிறது.

# கண்டு கொண்டேன்

அன்பின் கண்மணிக்கு.

தங்களின் கடிதம் கிடைக்கப்பெற்றேன். உங்களது, நமது பிள்ளைகளினது சுகமறிந்து சந்தோசம். இங்கு நானும் நலமே. எல்லாம் வல்ல இறைவன் எப்போதும் நம்முடனிருப்பானாக! உங்களின், குழந்தைகளின் அருகாமை இல்லாததில் நிறைய மனசு உடைந்தவனாகவே இதை எழுதுகிறேன்.

'காலமும் தூரமும் கூடுதல் ஆகாது' என மூத்தோர் சொல்வதுண்டு. அது ஒரு புறம் உண்மையேயாயினும் - தீமையிலும் ஒரு நன்மை என்பதைப் போல நமது இந்தப் பிரிவு சில படிப்பினைகளை எனக்குக் கற்றுத் தராமலில்லை. இன்று எதைத் தேடி ஓடிவந்திருக்கிறேன், நான்? அதன் பெறுமதி என்ன? என்பவைகளைப் போதிக்காமலில்லை. நம்மிடையேயான கடந்த கால எல்லா நிகழ்வுகளும் என் மனதில் எழுந்து நின்று, 'அடப்பாவி இந்த அழியும் பணத்திற்காக, எதையெல்லாம் நீ இழந்திருக்கிறாய் தெரியுமா?' எனத் தொடர்ந்தும் கேட்டபடியே இருக்கிறது. இப் பிரிவு உங்கள் மீதான, பிள்ளைகளின் மீதான அன்பை காதலை அதிகரிக்கச் செய்திருக்கிறது.

இங்கு வந்து சேர்ந்த முதல் மாதம் என்னால் சரியாகவே தூங்க முடிந்ததில்லை தெரியுமா? படுக்கையில் புரண்டு புரண்டு தூக்கத்தை தேடினேன். உயரே கண்கள் நிலை குத்தியிருக்க நெடுநேரம் படுத்தபடி கிடந்தேன். தனிமை மெல்ல மெல்ல மனதைச் சூழும். இரவின் இருட்டு அதில் குடையாய்க் கவிழ்ந்து, உள்ளாய்ப் படரும். வெறுமை கொள் -





மனது மொத்த உடலையும் வியாபிக்கும். கண்களை மூடப் பயமாயிருந்தது. என்னை விட்டு ஒவ்வொன்றாகக் கழன்று செல்வதாக உணர்வு, நீங்கள், நமது மழலைகள், எனது புத்தகங்கள், கடைசியாக நானே இல்லாது போய், காரிருளில் என்னைத் தொலைப்பேன். மனிதன் சமூகப் பிராணி. ஆயினும் சுயத்தில் அவன் சுயநலவாதிதான் என எத்தனை முறை சொல்லியிருக்கிறேன். நான் இப்போது உணர்ந்து தவிக்கிற தவிப்பும் எனது அநாதைத் தனமும் என்னை எள்ளி நகையாடுகின்றன. என்னைச் சூழவாய், ஆதாயத்திற்காக ஆலாய்ப்பறக்கிற, பரபரப்புக் கூட்டம். இங்கு அன்பு இல்லை. இந்தப் புதுச் சூழலுடன் இணைந்து கொள்ள எத்தனை கஷ்டமுற்றேன், தெரியுமா?

நாம் பிரிந்து கொள்கிற கடைசி இரவு அது. கட்டிலில் முதுகு சாய்த்து, கால் நீட்டியபடி நீங்கள். அந்தக் கால்களில் தலை வைத்தபடி நான். அந்த நீள் இரவில் பேசிய பேச்சுக்கள் இன்னமும் என் காதில் கேட்டபடியே இருக்கிறது.

'உங்களால், இருக்க முடியுமா? என்னை விடுங்கள் இந்தச் செல்வங்களை விட்டு விட்டு இருந்து விடுவீர்களா?'

'நீங்கள் குணத்தில் சின்னப் பிள்ளை. சாப்பாடு உடுப்பு வேளைக்கில்லாத போதே முரண்டு பிடிக்கிற மனசு. அங்கே எப்படி? அதுவும் தனியாக என்ன செய்வீர்கள்.?'

'இருப்பீர்களா, இரண்டு வருடங்கள்? நான் நம்ப மாட்டேன்'பா' ஒரு மாதத்துள் ஓடிவரப் போகிறீர்கள், பாருங்கள்.'

எத்தனை ஆத்மார்த்தமான வார்த்தைகள் அவை. கையில் வெண்ணெய் இருக்க நெய் தேடி அலைகிற படித்த முட்டாள் நான். எனது தேவை எது என்பதிலேயே தெளிவில்லாதவன். நான் தேடிவந்த பணமும் பட்டமும் எனக்கு நிம்மதி தரவில்லை. இவை நாம் சேர்க்கச் சேர்க்க முடிவிலி இன்றித் தொடர்பவை என்றே படுகிறது.

நான் வளர்ந்த சூழல் அன்பை எனக்குப் போதித்ததில்லை. பணம் கொண்டிருப்பவன் மட்டுமே அங்கு மதிப்புடன், ஆச்சரியத்துடன் நோக்கப்படுபவனாக இருந்தான். எனக்கு வேறு வழி தெரியவில்லை. கல்வி மட்டுமே நான் கடைந்தேற வழி என நம்பினேன். எவ்வித பராக்குமின்றி - வேறெந்தத் தேடலுமின்றி பட்டங்களைக் குவித்தேன். இங்கு வந்ததும் நான் பெற்ற பட்டங்களும், அவை ஈட்டித்தந்த

பணங்களும் எத்தனை தூரம் என்னைக் கீழாக்கி வைத்திருக்கிறது எனக் கண்டு கொண்டேன். உங்களால் இதை நம்ப முடிகிறதா? ஆம், ஸகி, எனது பணத்திற்கு அடிமைப்பட்ட மனம், அதை மூடுதிரை போட்டு சமாதானம் காண வெளிக்கிட்ட செயற்பாடுகளாகவே அத்தனையும் காண்கிறேன். நல்ல கணவன், தந்தை, நண்பன், அல்லது எல்லாமும் சேர்ந்த நல்லதொரு மனிதனாக நான் இருந்தேனில்லை. இங்கு 'சாப்பிட்டீர்களா? சுகமா?' எனக் கேட்க சக மனிதரில்லை. அவர்களின் அவசர, ஆதாயம் பார்க்கிற வாழ்க்கையை விட, எனது தேட்டமும், அணுகுமுறையும் நல்ல மனிதர்களைப் பெறுதலில் எப்போதும் தோற்றேதான் வந்திருக்கிறது. மொத்தத்தில் முகம் குப்புற வீழ்த்தப்பட்டு, எல்லாம் இழந்து நின்ற இலங்கை வேந்தன் போல - ஐரோப்பாவில் அனாதையாக நிற்கிறேனடி. அப்படியானால் எதுதான் எனக்கு சாந்தியை அல்லது முக்தியைத் தரப் போகிறது? இதற்கு இரவின் போது, என் நெஞ்சில் தலை சாய்ந்திருக்க, நீங்கள் என்ன சொல்வீர்கள் என்பதை நினைத்துப் பார்க்கிறேன்.

'நம்மிடம் உள்ளதே, நமக்குப் போதுமல்லவா? உள்ளதைக் கொண்டு சந்தோசமாக வாழ்வோமே...'

முறுநகை கொள்கிறீர்களா? உங்களின் மலர்ந்த அழகு முகம் எனக்காகக் கவலை கொள்கிறதா? நீங்கள் சொன்னது போல, நான் இன்னமும் குழந்தைதான் என எண்ணுகிறீர்களா? எப்படியாயினும் எனது அருகாயிருந்த உங்களின் பண்புகளைப் பாராட்டத் தெரியாத - அதன் உள்ளிருந்த வாழ்வின் உண்மைகளை உணர முடியாத பாவியாக நின்றிருக்கிறேன். என்னை, உங்களை, நமது குழந்தைகளை, உயிருடன் கொன்றுவிட்டு, மேலாயிருக்கத் தேடுகிறேன் என்பது, எத்தனை அபத்தமானது.

எல்லாம் வல்ல இறைவன் உங்களை மனைவியாக்கியது மட்டுமே, எனக்குக் கிடைத்த மிகப் பெரிய அருள் என இப்போது விசுவாசிக்கிறேன். எனது கல்வியும், பட்டமும் என்னால் மதிப்பிடவே முடியாத பரிசாக உங்களை மட்டும் எனக்குத் தந்துள்ளதாக நம்புகிறேன். ஒன்று அருகிலிருக்கும் போது அதன் அருமையை நாம் உணருவதில்லை என்பது எவ்வளவு நிஜம். நமது மத ஆச்சாரங்களினூடு கணவனின் சந்தோசமே வாழ்வின் பேறு என வாழ்கிற உங்களை விட, வானவர்களும் வானும் ஆசி வழங்குகிற நம் மழலைகளை விடவா எனது ஆசை பெரிதாகி விட்டது? எத்தனை சந்தோசமாகக் கொண்டாடியிருக்க வேண்டிய வாழ்க்கையது. அந்த உயிர்த்துவத்தை விட்டு விட்டு ஜடப்





பொருட்களின் பின்னால் மதி மயங்கிக் கிடந்ததை நினைத்து வெட்கமுறுகிறேன். தலையில் வைத்துக் கொண்டாட வேண்டிய உங்களை - நமது மழலைகளை விட்டும் எத்தனை தூரமாகி விட்டேனடி...

என் சுற்றம் - உன் சுற்றம் என்கிற பேதமின்றி எல்லோரையும் முகம் மலர வரவேற்கிற பண்பு. யாருடைய தேவையின் போதும் முதலில் நீண்டு கொள்கிற உங்கள் கை. பிச்சைக்காரனாயினும் கூட 'சாப்பாடு ஆயிற்றா?' என அன்பு வழிய விசாரிக்கும் நேர்த்தி. அப்போதெல்லாம் எத்தனை கொடூர வார்த்தைகளை செந்தணலாக உங்கள் முகத்தெதிரே வீசியிருப்பேன்.

'இப்படிக் கொடுத்தா, நாளைக்குத் தெருவுக்குத்தான் வரணும்'

'இந்தப் பரோபகாரத்துல குறைச்சலில்லை. இதுக்காகவே வேறொரு தொழில் பார்க்கணும்...'

எல்லாம் தாங்கினீர்கள். உங்கள் தந்தை மூலம் நான் அடைந்த எந்த செல்வமும் அதனால் குறைந்து போய் விடவில்லை. ஏழைகளின், உதவி பெற்றோரின் பிராத்தனை பலமானது என்பதுவும் தெரிந்திராத பாவி நான். ஆனால் இது எதனாலும் மாறாதபடி நீங்கள் இருந்தது எனது நல்ல காலம் தான். சே... அப்படியல்ல மாற - மாற்ற முடியாத மகராசி நீங்கள்.

அன்பே, எப்படி உங்களிடம் அந்த அள்ளிக் கொடுக்கிற குணம் வந்தது? எத்தனை சிடு மூஞ்சித் தனமாக உதடுதுடிக்க, முகம் சிவந்து நான் பாய்கிற போதிலும் மாறா அன்பு கொள்ள எப்படி மனம் வந்தது?

அன்பே, இதுவரை எனது மனம் கோண ஒரு வார்த்தை நீங்கள் சொன்னதில்லை. எனது சிறு உடல் நோவிலும் என்னமாத் தாங்கினை. என்னைச் சிறு குழந்தையாக்கி மடிதாங்கி அரவணைப்பில் பாதி நோய் தீர்த்தனை. வேளை தவறாது எனக்கு உணவு இட்டு என் பசி தீர்த்தனை. வீட்டை வெகு நேர்த்தியாக எப்போதும் பராமரித்தனை. நமது மழலைகளை, பிறர் மெச்சும்படி மானிட விழுமியங்கள் பதிய வளர்த்தனை. வெறியுடன் கூடிய உடற்பசிக்கு, முழு ஈடுபாட்டுடன் என்னுடன் கலந்தனை. எனக்கு இத்தனை இருந்தும் எதைத் தேடிய பாய்ச்சலிது? எத்தனை பெரிய ஏமாளி நான், இல்லையா? உங்களைப் போல அன்பு செய்ய என்னால் முடிந்ததில்லை. 'உங்கள் கடமை இவை அத்தனையும்' என்ற இறுமாப்பில் இருந்திருக்கிறேன். இதை எவ்வளவு குற்றவுணர்வுடன் எழுதுகிறேன் தெரியுமா? ஆயினும் வெட்கப்பட

வில்லையடி, கண்ணே நீங்கள் 'இந்த மனுசன் இவ்வளவு அன்பு, ஆசையை உள்ளேயா வைத்திருந்தது? சரியான ஊமைப் பேர்வழிதான்' என நினைக்கக் கூடும். அல்லது, பெண் மற்றவரைப் புரிதலில் விரைவானவள் என்பதனால் அப்போதே என்னை அறிந்திருக்கக் கூடும். எப்படியானாலும், இவற்றைச் சொன்னால்தான் மனம் அமைதியுறுமடி.

அன்பே,

நாமும், நமது சுற்றமும் எத்தனை அர்த்தம் செறிந்த - பெறுமதியான குடும்ப அமைப்பைக் கொண்டிருக்கிறோம் தெரியுமா? அதை உணர வேண்டுமானால், சற்றே சுய சிந்தனையுள்ள இங்கு, வாழ்கிற குடிமகனைக் கேட்டால் தெரியும். என்னுடன் இரசாயனவியலில் கலாநிதிப் பட்டம் பெற்ற ஆங்கிலேய மாது ஒருத்தி வேலை செய்கிறார். அவர் இங்குள்ள பாடசாலை, ஊடகங்கள், மொத்தமாக வாழ்க்கை அமைப்பே மக்களை அடிமுட்டாளாக்கி இயந்திரத்தனமாக ஒரு போதையுடன் வாழக் கற்றுக் கொடுக்கிறது என்பார். நமது வாழ்க்கை அமைப்பு தெய்வீகமானது. (ஐடியல் என்று பாவித்தார்) எனவும் சிலாகிப்பார். உண்மைதான் நமது கிராமிய மகனுக்கு, கொழும்பு பற்றிய கனவு. கொழும்புக்கு ஐரோப்பா, ஐரோப்பாவிற்கு நமது ஆன்மீகத்தில்... இது கடைசியாக முடிகிற குடும்ப அமைப்பினூடான தெய்வீக அமைப்பில் நின்றும், அதன் அருமையை உணராது போனேனே...

எனக்கு இங்கு வர முன்னர், எல்லா சொகுசுகளும், நிரம்பிய, சந்தோசகரமான, வேஷங்களற்ற மேலான வாழ்வு இவர்களுடையது, என்ற நினைப்பு இருந்தது. சந்தோசம், தனி மனித சுதந்திரம், சமூகத் தளைகளிலிருந்தான விடுதலை இவையே பெரிது என்ற நினைப்பிருந்தது. ஆனால் 'அலங்கார முடியாம் உள்ளே பார்க்க ஈரும் பேனும்' என்பது போல இவர்களின் நிலை கண்டு இடிந்து போனேனடி. உலகில் மிகவும் பரிதாபத்துக்குரிய மக்கள் இவர்கள்தான் என்றால் நம்புவீர்களா? எல்லா வசதிகளும் நிரம்பிய வீடு, அழகிய வாகனம், வருடமொருமுறை உல்லாச யாத்திரை என மேலே பார்க்கப் பொறாமைப்படும் படி தான் இருக்கும்.

எந்தத் தேவையையும் ஒரு தொலைபேசியினூடாகவே அவன் பெற்றுவிட முடியும் ஆனால் அதை இறுக்க அவன் தொடர்ந்தும் கடனாளியாகவே இருக்க வேண்டியிருக்கும். ஒரு வீடு பெற்றானானால், முப்பது வருடங்கள் மாதாந்தம் கடனிறுக்க வேண்டி வரும். மிகப் பெரிய சூது இது. மக்களை இதனுள் விழச் செய்ய, அழகிய, தந்திரமிக்க விளம்பர யுக்தி. அதிலும், பெண் விடுதலை என்கிற பெயரில்,





பெண்களைக் கேடயமாக்கி அவர்களைச் சூறையாடுவதுதான் மிகப்பெரிய சோகத்திற்குரியது. பெண்ணின், மேலான - இயல்பான எல்லாப் பண்புகளையும் இழக்கச் செய்து அவர்களை இயந்திர பொம்மைகளாக உலாவவிட்டு, குடும்ப அமைப்பையே வெறுக்கச் செய்து... மிகக் கொடுமையை அவர்களுக்கு இழைத்திருக்கிறார்கள். இதை எனது அறை நண்பனுடன் (ஏற்கனவே சொன்ன ஆங்கிலேய இந்தியன்தான்) பேசிய போது ஏற்றுக்கொள்ளாததுடன் என்னை பிற்போக்குவாதி எனவும் நாமம் சூட்டினான். அவர்களின் வாழ்க்கையமைப்பை கொச்சைப்படுத்துகிறேன். (ப்ளேம்) என்று கூறினான். அவனது ஆங்கிலேயக் காதலி உடனிருக்க நான் பேசியதில், கோபம் கொண்டிருக்கக் கூடும். அவனின் பிறந்த நாளுக்காக, கிளப் ஒன்றில் கூடியபோது, பேசியதில் ஆத்திரம் ஏற்பட்டிருக்கக் கூடும், நான் மேலே பேசவில்லை. ஆனால் அன்றைய தினத்தை என்னால் மறக்க முடியவில்லை.

மூடப்பட்ட நீண்ட அறை அது. உச்ச சப்தத்தில் அலறுகிற ஒலியமைப்பு. பல வர்ண ஒளி சுழன்று வீசியது. சற்றே இருளும் கலந்த சூழல். திடீரென'ட்ரம்' அதிர ஒரு கறுப்பு நிற பெண் இரு துணி உடையுடன், கையில் ஒலிவாங்கியிருக்க முன் தோன்றினாள். ஓங்கிய அழகிய வீரிடுகிற குரலில் அவளுடைய பாடல் துவங்கிற்று.

'நீ எங்கிருக்கிறாய்? நான் தூக்கம் தொலைத்தாயிற்று அதிகம் புகைத்தபடி பாடுகிறேன்.'

அவளின் முக்கால் நிர்வாண உடல் தாளம் தப்பாது, கண்கிறங்கியிருக்க ஆடிற்று. ஏற்கனவே வயது, பால், வேறுபாடின்றி போதை வயப்பட்ட கூட்டம் அவளின் குரலால் ஆட்டம் இன்னும் கிறங்கியது. மகுடிக்கு வயப்படத்துவங்கியது. பெண் கூவினாள் 'கமான், எவ்ரி பொடி...' ஆட்டம் எல்லாப் பரப்பிலும் பரவிற்று. உடல் எகிற, கைகள் இடை பற்ற, 'உள் நரம்புகள் வெளியேறட்டும்' என்குமாப் போல் வேகம் பிடித்தது. துள்ளல் ஆரவாரம், வேகம்... என்னால் இருந்துக் கொள்ள கஷ்டமாயிருந்தது. இசை தன்னை இழக்க வைக்கும்தான். இதுவா அந்த நிலை? குடி வெறியுடன் தன்னை இழக்கிற நிலையா இது? எனது எல்லாக் குழப்பங்களும் தெளிவுபெற அந் நிகழ்வு போதுமானதாயிருந்தது.

ஆமடி கண்ணே, இசை நமது உள் மனதைத் தொட்டு ஆழ் மனது வரை சென்று ஆன்மாவுடன் நம்மைக் கலந்து விடச் செய்பவை. உடல் என்பது காணாது போய், எவ்விதப் பரபரப்புமின்றி பூரண ஆழ் அமைதியில் ஆழ்கிற நிலையது. இசைக்கு வயப்பட்டு அதிலுள்ள நரம்புகளும் பீறிட்டெழுகிற நிலையை நாம் நினைத்தே பார்க்க முடியா.

அவர்கள் உடல் ஆட, உள் ஆசையுடன் ஆடுகிற ஆட்டம், அவர்களின் வாழ்வு நிலை சார்ந்தது. மொத்த வாழ்வையும் பிரதிபலிப்பது. என்னால் மேலும் அங்கீகரிக்க முடியவில்லை. நண்பனிடமும், அவன் தோழியிடமும், 'சுகமில்லாதிருக்கிறது' எனச் சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நண்பன் அதை நம்பவில்லை நமுட்டுச் சிரிப்புடன் 'அது சரி' எனச் சொல்லி அனுப்பினான்.

இதை உங்களிடம் நான் சொல்லக் காரணமிருக்கிறது. உங்களால் இதை தெளிவாக உணர முடியும். உலகாதாய நாட்டமும், அதேயளவில் ஆன்மா பற்றிய தேடுகையும் கொண்டலைகிற ஒரு சராசரி மனிதனின் பட்டறிகிற பாடத்தை நீங்கள் உணர வல்லவர். வாழ்வின் சகலதையும் உணர்த்தலில் அறிந்தபடி - மூடியாய் நின்றிருக்கிற என் பெண்ணே, நான் இப்போது எவ்வித வெட்கமுமின்றி ஒப்புக் கொள்கிறேன். வாழ்வின் திருப்தி, சந்தோசம் எது என்பதை முழுக்க அறிந்தவனாக மாறியிருக்கிறேன். நீங்கள் இருந்து பாருங்கள், இது அத்தனையையும் தூக்கிக் கடாசி விட்டு திடீரென உங்கள் முன் வந்து நிற்கப் போவதை. அப்போதும் அதே புன்னகையுடன், 'இதிலென்ன ஆச்சரியம்? எனக்குத் தெரியாதா?' என்பதாகத்தான் நிற்பீர்கள்.

கடைசியாக எனது மனதிலுள்ளவற்றை ஒளிவு மறைவின்றி நீண்டதாகச் சொல்லிவிட்டேன். அது கூட நீங்கள் தூரமாக இருக்கிறீர்கள் என்பதனால்தான் நிகழ்ந்ததாகப்படுகிறது. இனி உங்கள் கடிதத்திற்கு வருகிறேன். நேரத்திற்கு சாப்பிடுகிறேன். பொழுதுகள் வேலை, தூக்கம் என்று கழிகிறது. எனக்கு வாசிப்பின் மீதுள்ள வெறி தாங்களறிந்ததே. அது நேரமின்மையால் குறைந்து போன ஏக்கம் இருந்துகொண்டேயிருக்கிறது. நீங்கள் என்னதான் எழுதினாலும், பிள்ளைகள் பற்றிய கவலைகள் குறையவேயில்லை. அவர்களின் வளர்ச்சிகள் என் கண்முன் நிகழவில்லையே - அதில் என் பங்கு குறைந்துள்ளதே என்ற ஏக்கம் இருந்து கொண்டேயிருக்கும் போலிருக்கிறது. தலையிடி இப்போதும் வருகிறதா? தயவு செய்து அலட்சியம் பண்ணாது தொடர்ந்தும் மருந்து எடுங்கள். நான் இவ்வளவு சொன்னாலும், நான் நலமாகவே இருக்கிறேன், என்பதை நம்புங்கள். வேறென்ன? உறவினர், தோழிகள், யாவரும் நலமாயிருப்பர் என்ற நம்பிக்கையுடன் முடிக்கிறேன்.

உங்கள் அன்பு

O





# என் ஆசியமுத்தே!

நிலவின்றிய வானம். நட்சத்திரங்களுமில்லை, நிமிர்ந்து பார்க்க மேலே இருட்டாகத் தெரிந்தது. நன்கு தடித்த மேலங்கி (ஸ்வெற்றர்) அணிந்திருந்தும் உடம்பு குளிரால் நடுங்கியது. கூதலான காற்று முகத்தில் சில்லிட்டது. வீதியெங்கணுமே விளக்குகள் வெளிச்சம் பரப்பி நின்றன. கடைகளின் விளம்பரப் பலகைகள் வர்ணம் பூசி ஜொலித்தன. நான் விரைவான எட்டுகள் வைத்து நடந்தேன். நண்பன் அஹ்சன், சொல்லித்தந்திருக்கிறான். நடையை விரைவாக்கினால் குளிரின் தாக்கம் குறைவாகவே உணரப்படுமென்று. நகர மையத்தை அடைந்திருந்தேன். அன்றையைப் போலவே, இன்றும் 'பப்' எனப்படுகின்ற இங்கிலாந்தின் இள ஆண், பெண்களினது இதயம் - பரபரப்பான துடிப்பைத் தொடங்கி விட்டிருந்தது. இரவு பதினொரு மணியாதலால் கூட்டம் நிரம்பி வழிந்தது. அநேகம் பேர் வாயிலில் காத்திருந்தனர், நானும் கூட. சரியாக முப்பது நிமிடங்களின் பின் என்னால் உள்ளே செல்ல முடிந்தது. எழுத்தாளனாயிருப்பது இலங்கையைப் பொறுத்தவரை இலாயக்கற்றவர்களின் வேலையாயிருக்கக் கூடும். ஆனால், இங்கு நிலைமை தலை கீழ். ஆச்சர் என்கிறவர் செய்த விலைமாதுத்தப்பைப் பக்கம் பக்கமாக பத்திரிகைகள் விமர்சித்தன. மிகப் பெரிய ஹீரோக்கள் அவர்கள். அவர்களுக்கு ஏகப்பட்ட மரியாதையும், ஆச்சரியமான விழிப்பும் இங்கிருக்கின்றன. என்னைக் கூட வாயிற்காப்போன், மரியாதையுடன் உள்வாங்க அதுவே காரணமாயிருக்கக் கூடும்.

இதே கிளப்பிற்கு, முன்னர் ஒருமுறை நண்பன் அஹ்சனுடன் வந்திருந்தேன், அவனைத் தவிர்த்துத் தனியாக இருமுறை. இது எனது

நான்காவது வரவு. அதற்கு ஒரு வலுவான காரணமிருக்கிறது. முதன் முறை வந்தபோது காலியான மதுக் கோப்பைகளை சேமித்துக் கொண்டிருந்தாள் ஒரு மங்கை. அவள் இந்தியா அல்லது இலங்கையைச் சேர்ந்தவளாயிருக்க வேண்டும். அவளது முகமெங்கிலும் அமைதியுடன்கூடிய ஒரு வசீகரமிருந்தது. நடையில் ஒய்யாரம் தவழ்ந்தது. திரும்புகின்ற பக்கமெல்லாமே வெள்ளைநிறத் தோல்களாயிருக்க அவள் தனியாக, ஒரு தனிச் சுடராக எனக்குத் தோன்றினாள். இறுக்கமாக உடலைப் பற்றியபடி ரீசேட் அணிந்திருந்தாள். அது மார்பின் மேல் பகுதியை மூடமுடியாது தவித்தது. இடுப்புப் பிரதேசம் திறந்து கிடந்தது. தொப்புளின் கீழான ஸ்காட், ஒரு சாண் அளவில் மூடியிருந்தது. அவளின் பொது நிறத்திற்கு இத்தனை 'காமாந்தரமான' உடுப்பு இவளுக்கு ஆகாதது என்றே எனக்குப் பட்டது. ஒரு தெற்காசியப் பெண்ணுக்கு இங்கு வேலை செய்ய வேறாக ஒரு துணிச்சல் இருக்க வேண்டும். அவளது வசீகரத்தை விட, அவளிடமிருந்த அகம்பாவம் எனக்கு ஆச்சரியம் தந்தது, ஆவலைத் தூண்டியது. மொத்தமாகச் சொல்லின், அவளுக்காகவே - அந்த விதிவிலக்குக்காகவே அடிக்கடி அங்கு பிரசன்னமாகத் தொடங்கினேன்.

கிளப்பின் மூடப்பட்ட அறை மெல்லிய வெளிச்சத்தில் மயக்கமூட்டிற்று. 'பொப்' இசையில் மொத்த இடமுமே அதிர்ந்து கிடந்தது. பால் பேதம் மறந்து எல்லோருமே மதுவில் மயங்கிக் கிடந்தனர். ஆட்டத்தின் உச்சியில் மறந்து கிடந்தனர். எனக்கு ஆட்டம் தெரியாது, குடிக்கும் பழக்கமுமில்லை. 'கோக்' ஒன்றில் கொஞ்சமாய் தேசிப் பழச்சாறு விட்டு வாங்கியபடி, ஒரு மூலையைத் தேடி உட்கார்ந்தேன். அவளை எனது கண்கள் தேடின.

தூரத்தே அவள் தெரிந்தாள். எனது பார்வையின் தேடல் புரிந்திருக்குமென நம்பினேன். வழமையைப் போலன்றி, இந்தச்சந்திப்பின் போது அவள் சினேகிதமாகப் புன்னகைத்தாள். நானிருந்த மேசையை நோக்கி வந்தாள். நான் ஆவலுடன் காத்திருந்தேன். 'நீங்கள் குடிப்பதுமில்லை, நடனமாடுவதுமில்லை, எனக்காகவா வருகிறீர்கள்?'

வெற்றுக் கிளாஸைப் பொறுக்கியபடி, அவள் நேரடியாகவே என் முகம் பார்த்துக் கேட்டாள். நான் ஆச்சரியம் கொள்ளவில்லை. இது 'திமிசுக் கட்டை' என எதிர் பார்த்தே இருந்தேன். பதில் சொல்லாது சற்று நேரம் அவளைப் பார்த்தேன். பின் கூறினேன்.

'எப்படிக் கண்டு பிடித்தாய்?'





அவள் பதில் சொல்லாமல் நேராக நோக்கினாள். இதழின் கடையோரம் விரிய நக்கலாக என்னைப் பார்த்தாள். இதற்கு என்ன அர்த்தம் கொள்வது? உன்னைப்போல் எத்தனை பேரைப் பார்த்திருப்பேன் என்றா? அவள் திடீரெனப் பேசினாள்.

'இதற்கு உளவியல் வேறு படிக்க வேண்டுமா?' இதைச் சொல்லிவிட்டுப் பின்னால் வாரி விடப்பட்ட கூந்தல் பிட்டத்தில் அலைமோத, சிரித்தபடி சென்றாள் அவள். நான் வியந்து நின்றேன். அவளின் சிரிப்பும், பதிலும் எனக்கு சந்தோஷத்தையும், ஓரளவு தைரியத்தையும் தந்தன, காத்திருந்தேன்.

சனங்கள் களைப்புடன் தள்ளாடியபடி வெளியேறத் தொடங்கினர். நேரம் மூன்றை அண்மித்தது. வாயிலில் நின்ற 'நீக்ரோ' (வாயிற் காப்போன்) ஒருவன் மது வழங்குமிடத்தில் நிற்பது தெரிந்தது. மூன்று மணிக்கு கடையை மூடிவிடுவார்கள். நினைவிழந்தவர்களை வெளியேற்ற வேண்டும், நான் எழுந்துகொள்ள ஆயத்தமானேன். அவள், என்னை நோக்கி வருவது தெரிந்தது. தாமதமாகினேன். வந்தவள் எனக்கெதிராக இருந்த கதிரையில் உட்கார்ந்தாள், பேசினாள்.

'சரி இப்போது சொல்லுங்கள் எதற்காக என்னைப் பார்க்க வேண்டும்?' 'நான் இலங்கையைச் சேர்ந்த...' எனது பேச்சை இடைநிறுத்தியபடியே அவள் பேசினாள்.

'எனக்குத் தெரியும். அவன் சொன்னான். என்னிடம் ஏதாவது கதையை எதிர்பார்க்கிறாயா?' அவளின் கை வாயிற்காப்போனைச் சுட்டி நின்றது.

'சீசீ... அப்படியில்லை உங்களைப் பார்த்ததும் பேச வேண்டும் என்று பட்டது...'

'எதைப் பற்றி...'

நான் தயங்கியபடியே சொன்னேன்
'உன்னைப் பற்றியே! நமது கலாசாரம் இந்த அளவு துணிவுள்ள பெண்ணையுமா பெற்றெடுத்துள்ளது...'

படீரென வெடிச் சிரிப்பு சிரித்தாள் அவள். நான் முகம் சிறுத்தேன். அவளை வெறித்தேன்.

'இன்னும் நீங்கள் பத்தாம் பசலித்தனமாகவே இருக்கிறீர்கள். 'ஸ்ரிப்' (ஆடைகழற்றும்) நடனம் கூட, நம்மவர்கள் ஆடுகிறார்கள் தெரியுமா?'

'எனக்குத் தெரியும்'

'அப்படியானால் இதென்ன அபத்தமான கேள்வி?'

'உனது முகம், பார்வை எதுவுமே அதற்கானதில்லையென்று படுகிறது. நீயாகவே இதைப் பலவந்தமாகச் செய்கிறாயென்று நினைக்கிறேன். அவர்களை என்னால் ஓரம் கட்டிச் செல்ல முடியும். எனது உள்ளுணர்வு உன்னை அப்படிப் பார்க்க விடவில்லை'

இப்போது அவள் மௌனமானாள். எனது எண்ணம், முடிவு யாவும் சரியானவையே என்பதில் நம்பிக்கையும், நிறைவும் பெறத் துவங்கினேன். அவள் என்னை உற்று நோக்கியபடி இருந்தாள். சற்று நேரம் இருவருமே மௌனமாயிருந்தோம். பின் அவளே சொன்னாள்.

'எனது பெயர் ரொஸான். நானும் இலங்கைதான். உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சியடைகிறேன்'

என்றபடி கதிரையைப் பின்னேநகர்த்தி எழுந்தாள். வலதுகை என்புறம் பிரிவதைச் சொல்ல நீண்டிருந்தது. எனக்கு அவளை இத்துடன் விட்டு விட எண்ணமில்லை. எவவே கையைப் பற்றிக் குலுக்கியபடியே கூறினேன்.

'ரொஸான் தயவுசெய்து நாம் மீண்டும் சந்திக்க வேண்டும் உன்னுடன் பேச ஆவலாயிருக்கிறேன்'

முதன் முதலாக அவளின் முகத்தில் சோகம் கண்டேன். கண்களில் இரங்கும் தோரணை தெரிந்தது. இத்தனை பகட்டு, ஆடம்பரம், கூத்துகளிடையேயும் அவள் தன்னைக் கரைத்து. நிஜத்தை மூட முனைகிறாள் என்று என் நம்பிக்கை மேலும் வலு கூடிற்று.

'சரி, உங்களது தொலைபேசி இலக்கத்தை தாருங்கள். நானாகவே தொடர்பு கொள்கிறேன்'

எழுதிக் கொடுத்தேன்.

'குட் மோர்னிங். மீண்டும் சந்திப்போம்'

அவள் விரைவாக திரும்பினாள், சிரித்தபடியே.





'குட் மோர்னிங்' என்றேன். அறைக்குள் வந்த பின் அன்றிரவு என்னால் சரியாகத் தூங்க முடியவில்லை.

இரு நாட்களாயிற்று. ரொஸானிடமிருந்து எந்த தகவலுமே இல்லை. இன்று திங்கட்கிழமை 'பப்' சற்றே ஓய்ந்திருக்கும். மீண்டும் இன்றிரவு செல்வதெனத் தீர்மானித்திருந்தேன். அதற்கிடையில் அஹ்சன் என்னைத் தேடுவதாகத் தகவல் கிடைத்திருந்தது. அவனைச் சந்திக்க வேண்டும். குளிர், படுக்கையை விட்டு எழும்பவிடவில்லை. திடீரென ரொஸான் ஒன்பது மணிக்கு தொலைபேசியில் பேசினாள்.

இன்று சுகயீன விடுமுறை எடுத்துள்ளதாகவும், பதினொரு மணிக்கு 'கிறீன் பார்க் அண்டர் கிறவுண்' (நிலத்திற்குக் கீழான) புகையிரத நிலையத்தில் சந்திக்கும்படியும் வேண்டினாள். சோம்பல் போயிற்று. கூதல் ஓடிற்று. நன்றாக முகச்சவரம் செய்து குளித்தேன். பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்தேன். பத்து நாற்பதுக்கெல்லாம் குறித்த இடம் வந்து காத்திருந்தேன். சரியாகப் பத்து ஐம்பத்தேழுக்கு ரொஸான் வந்து சேர்ந்தாள். பஞ்சாபி உடை, சல்வார் கிற் அணிந்து வந்திருந்தாள் காலில் 'சரி' என அடையாளமிடப்பட்ட சப்பாத்து அணிந்திருந்தாள். கட்டி முடியப்படாத கூந்தல் இருபுறமும் அலைமோத, மிக அழகாகத் தெரிந்தாள். பெண் அழகு, அதிலும் உயரமான பெண் இன்னமும் அழகு. ஒரு மயில் சிறகு விரித்தபடி என்னை நோக்கி வருவதாக தோன்றிற்று. மயிலின் வாயில் சுவிங்கம் இருந்தது.

'ஹலோ...'

'ஹலோ...' கைகளைக் குலுக்கிக் கொண்டோம். அவளே பேச்சைத் துவங்கினாள்.

'எங்காவது போய்ப் பேசுவோமா?'

'அதுதான் நல்லது. எனக்கு லண்டன் புதிது. ஆதலால் நீங்களே இடத்தைத் தீர்மானியுங்கள்'

'பக்கிங்ஹாம் பலஸ்'

'ஓகே...'

'ஆனால் ஒன்று, இன்றைய முழுச் செலவுமே என்னுடையதுதான்'

இதற்கு உடன்பட எனது மனம் ஒப்பவில்லை.
'அது எப்படி' என்றபடி இழுத்தேன்.

'யோவ்! இதுல, மரியாதங்கிறதெல்லாம் பிளைற்ல ஏறும்போதே கழற்றி வச்சிட்டு வந்திருக்கணும். இங்க எல்லோருமே...'

நான் கைகூப்பியபடியே கூவினேன்.

'தாயே தெரியாது உளறிவிட்டேன். மன்னித்துக்கொள்ளும். உங்களது முடிவே எனதும்'

ரொஸான் சிரித்தாள். இருவரும் புகைவண்டிக்காகக் காத்திருந்தோம். லண்டன் பெரிதாக ஆச்சரியம் தரவில்லை எனக்கு. 'பழையதைப் பேணுகிற பேர்வழிகள்' என்று, எல்லாக் கட்டடங்களையும் ஒரே தினுசில் கட்டியிருப்பது போரடித்தது. ஆனால் மரங்களுக்கு அவர்கள் வழங்கியிருந்த முக்கியத்துவம் மலைப்பைத் தந்தது. அநேக சுவர்கள் பழைய மரங்களுக்கு இடம் விட்டு மரியாதையாக ஒதுங்கி நின்றன. டயானாவின் தோட்டம், நடந்த பாதை, வாழ்ந்த மாளிகை எல்லாமே பார்த்தோம், பேசியபடியேதான். ஆனால், எனக்குப் பேச்சு இன்னமும் சரியான திசையில் செல்லவில்லை என்ற நினைப்பு இருந்துகொண்டே இருந்தது. இப்போது இருவரும் பூங்காவின் புற்றரைமீது உட்கார்ந்திருந்தோம். பகல் சாப்பாட்டிற்கென இரு 'பர்கர்'களை ஏற்கனவே வாங்கியிருந்தோம். நாம் சாப்பிடத் தொடங்கினோம்.

'ரொஸான் தனியாகவா இருக்கிறாய்?'

'ஆம்'

'அம்மா, அப்பா'

இதற்குப் பதில் உடனடியாக ரொஸானிடமிருந்து வரவில்லை. சற்று நேரம் என்னை உற்று நோக்கியபடி இருந்தாள் பின் முகம் இறுகியபடி இருக்கப்பேசினாள்.

'அன்வர் நீ இன்றும் சரியாகவேயில்லை. இது மூன்றாவது முறை. எதற்குச் சுற்றி வளைக்கிறாய். பச்சையாகவே நீ பிட்டுக் கேட்கலாம். என்னைப் பற்றி என்ன தெரியவேண்டும் உனக்கு'





'கோபமுறாதே ரொஸான். நீ கூட இவ்வளவு நம்பிக்கையாக என்னுடன் பழக, வேறு ஒரு காரணமும் இல்லை என்கிறாயா? என்மீது ஒரு நம்பிக்கை, பிடிப்பு இருக்கப்போய்த்தான் பழக முன்வந்திருக்கிறாயென நினைக்கிறேன். அதைப்போலவே நானும், உன்னை முழுவதுமாக அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். நீ இங்கு நீயாக இல்லையென்று படுகிறது. எதையோ மூடவேண்டி, வேஷமிட்டுள்ளதாகப் படுகிறது. உனது கண்கள் அதையே...'

நான் திடீரென இடைநிறுத்தினேன். அவளின் நிமிர்ந்த பார்வை தாழ்ந்திருந்தது. விரல்கள் சாப்பாட்டில் கோலம் போட்டன. முகம் இருண்டு வந்தது. அதைப் பார்த்து நான் வேதனைப் பட்டிருக்க வேண்டும். ஆனால், சந்தோஷம் கொண்டேன். அவளின் இந்த இறுக்கத்தைத் தளர்த்துவோமானால் திறந்து விடுவாளென்று பட்டது. நான் அவளிடம் கெஞ்சத் தொடங்கினேன்.

'ரொஸான், தயவுசெய்து, நீயார், என்ன பிரச்சினை, உனது ஆரம்பம் எல்லாவற்றையும் சொல்லலாமே'

ரொஸானின் தொண்டைப் பகுதி தாழ்ந்து உயர்வதைக் கண்டேன். எனக்குத் திடீரெனக் கவலை பிறந்தது. அவள் விசும்பி அழத் தொடங்கினாள். இந்த அளவு மாற்றம் நான் அவளில் எதிர் பாராதது. சற்றே அதிர்ந்து போனேன்.

'ரொஸான் அழவேண்டாம். இது பொது இடம், நாலுபேர் பார்க்கிறார்கள்...'
தொடர்ந்து விசும்பலுடன் மூக்கைச் சிந்தினாள். நான் சாப்பிட்டதும் துடைக்க ரவல் பேப்பர் வைத்திருந்தது நல்லதாப் போயிற்று நீட்டினேன். 'வேண்டாம் போ' என்று தட்டிவிட்டாள். அவளது கைக் குட்டையை எடுத்தாள். நீளமாக மூக்கைச் சிந்தித் துடைத்தாள். மௌனமானாள். பார்வை வெறித்துக் கிடந்தது.

'சரி... எனக்கு எதுவுமே வேண்டாம்... நீ முதலில் சாப்பிடு'
நான் பின்வாங்கத் தொடங்கினேன். இந்த ஆயுதமாவது வேலை செய்யக் கூடுமென நினைத்தேன். என் கணக்குச் சரியாயிற்று. சற்று நேரத்தின் பின்னர் ரொஸான் ஒவ்வொன்றாகச் சொல்லத் தொடங்கினாள். மிகவும் வேதனைக்குரிய அவலமான படலமது. எனது இடைப்பட்ட ஆச்சரியங்களை, சோகங்களை 'இச்'சுக்களைத் தவிர்த்து விட்டு அவள் சொன்னதை இங்கே சுருக்கித் தருகிறேன்.

ரொஸானின் ஊர் வாழைச்சேனை. வாப்பா ஆங்கில ஆசிரியர். உம்மா ஆரம்பப் பள்ளி ஆசிரியை. அவர்களின் ஒரே பிள்ளை அவள். வாப்பா அவளை அதி புத்திசாலியாக - தைரியசாலியாக வளர்த்தார். ரொஸான் உம்மாவைவிட வாப்பாவை அதிகம் நேசித்தாள். அவளுக்கு உடன் பிறப்புகள் - நண்பர்களில்லாக் குறைகளெல்லாமே அவரால் ஈடுசெய்யப்பட்டன. அவளுக்குரிய வரையறை, பண்புகள், படிப்புகள் எல்லாமே அவரால் போதிக்கப்பட்டவைதான். அவரின் புத்தகப் பரிசுகள் வகுப்பில் முதலாமிடத்திலேயே அவளை வைத்திருந்தன. பாட அறிவுமட்டும் போதித்துத் தரவில்லை அவர். உம்மா, வாப்பா இருவரின் அன்பிலும் வீடே சந்தோஷத்தில் மூழ்கிக் கிடந்த காலமது. உம்மாவின் இருபது வருட சேவைக்காலம் முடிய உம்மா ஓய்வில் நிற்க முடிவுசெய்தார். இதற்காகக் கடிதம் கொண்டுபோன உம்மாவை, வந்தாறுமூலையில் இந்திய கேர்ணலுக்காக வைத்த கண்ணிவெடி கொண்டுபோயிற்று. அப்பா உடைந்து போனார். ஆயினும் ரொஸானின் பொருட்டு எல்லாமே சுமந்தார் அவர். ரொஸான் நாளாந்தம் கல்லூரிக்கு வாப்பாவுடன் சைக்கிளில் போனாள். பின்னேர வகுப்பு முடிந்து தனியாக ஐந்து மணிக்கெல்லாம் வந்துவிடுவாள். நல்ல ஆங்கிலத்தேர்ச்சி, தமிழ்ப்புலமை. ரொஸானை பாடசாலையே கொண்டாடிற்று.

ஒருநாள், பாடசாலையில் வைத்து வாழைச்சேனை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதாகவும், அருகிலுள்ள வீடுகள் பற்றி எரிவதாகவும் சேதி கேட்டாள். மூன்று மணிக்கெல்லாம் வகுப்பின் இடையே வெளிக்கிட்டு ஓடினாள் ரொஸான். வீடு நெருப்பில் வெந்து கிடந்தது. வாப்பாவை தேடினாள், அவரின் சைக்கிள் தூரத்தே தெரிந்தது. அதன் மேலாக இடறியபடி கிடந்தார் அவர். அவரின் முதுகிலே துப்பாக்கிச் சன்னம் துளைத்திருக்க, வாய்பிளந்திருக்க... ரொஸான் துடித்துப் புரண்டாள். அவள் வாப்பாவை விரும்பிய அளவு யாரும் நெருக்கமானவரில்லை. எந்த மனிதருமற்ற சூழலில், தனியாகக் கிடந்து 'வாப்பா... வாப்பா...' எனப் புலம்பினாள் அவள். அப்போதுதான் அந்த மூன்று மனித மிருகங்களும் அவளை நெருங்கின. இழுத்துச் சென்றன. அடுத்த நாள் காலை கண்விழித்த போதுதான். எத்தனை கொடூரமாகச் சேதப்படுத்தப்பட்டோம் என்பதை அறிந்தாள் அவள். அதுவரை யாரையும் அடையாளம் தெரியாதபடி நினைவிழந்து கிடந்திருந்தாள் அவள்.

உறவுகள் அவளின் கற்பு காக்க வேண்டி எல்லாவற்றையுமே மூடி மறைத்தன. ஒரு மாதம் வைத்திய சாலையில் இருக்கவேண்டியிருந்தது. அம்மா இல்லை, வாப்பா போயிற்று. படிப்பும் போயிற்று. அவளின்





எல்லாம் போயின. ஆயினும் யார்மீதும் ஆத்திரம் எழவில்லை, அவளுக்கு.

ஒரு கிருஷாந்திக்காகக் கூட எத்தனை உறவுகள் புதையுண்டு போயின. ஆயினும் கிருஷாந்தி உயிருடன் இல்லை, என்பதால் அவள் கற்புப் பற்றிப் பிரச்சினை இல்லை என்பதால் பூதம் வெளியேறிற்று.

என்னைப் போல் மூடிக்கிடக்கிற சோகங்களின் தொகை அதிகமென்றறிந்தாள். அவள், பழிவாங்க வெளிக்கிடாமைக்கு வாப்பாவையே காரணமாகக் கொண்டாள். ஏனெனில், அப்படி வளர்த்திருந்தார் அவர். தேளும், ஞானியும் கதைபோல வாழக் கற்றுக் கொடுத்திருந்தார் அவர். கடைசியாக 'கெட்டாலும் பட்டணம் சேர்' என்பதாக, மாமாவின் கொழும்பு வீட்டிற்குக் குடிபெயர்ந்தாள். அவளின் ஆங்கில அறிவு ஒரு வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் வேலை வாங்கிக்கொடுத்தது.

மாமா வீட்டிற்கு அடுத்த வீடு முனசிங்க என்கிற சிங்களவருக்கானது. அவருக்கு மூன்று மகள்கள். ஜே.வி.பியை ஒழிக்கிறோம் என இராணுவம் வெளிக்கிட்ட காலமது. முனசிங்கவின் இரு பெண் மக்களைக் கொண்டு போயினர். மூன்று நாட்களின் பின் ஒருத்தி மட்டும் ராகம வைத்தியசாலையில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. முனசிங்கவுடன் மாமாவும், ரொஸானும் பார்க்கப் போயினர். அதிர்ந்து போனாள் ரொஸான். இப்படியுமா ஒரு பெண்ணை இம்சிப்பது? உடைந்து கிடந்தாள் அவள். தங்கையைக் கண்ணெதிரிலேயே இம்சித்துக் கொன்ற கதை சொன்னாளவள். அவள் கூட தப்பித்தது தெய்வச் செயலேயெனப் புத்தாவைத் தொழுதாள்.

ரொஸானால் மேலும் நிற்க முடியவில்லை. அவளின் சோகம் அங்கே சிறியதாயிற்று. அவள் மூன்று நாட்கள் சோர்வுற்று, தனியாகக் கிடந்தாள். பின்னர்தான் மாமாவிடம் சொல்லி வெளிநாடு செல்ல ஆயத்தமானாள். ஊரிலிருந்த காணி, வீடு எல்லாவற்றையுமே விற்றாள். மாமா புண்ணியாத்மா, ஏஜென்ஸிகாரனை நம்பினார். ஆனால் அவளுக்குத் தெரிந்திருந்தது. அவன் கூட பெண்தின்னி என்று. அவளால் 'அது பரவாயில்லை' என்றே நினைக்க முடிந்தது. அவனுடன் ஒரு வாரம் இந்தியாவில் சுற்றிவிட்டு கடைசியாக இங்கு வந்திருந்தாள்.

இவ்விடத்தில் அவள் நிறுத்தியபோது இருவரும் நெடுநேரம் பேசாதிருந்தோம். இந்த குறுகிய - இருபத்தைந்து வயதிற்குள் இவள்

இத்தனை காயங்களையா சுமந்தாள் என்ற மலைப்பு எழுந்தது. எனது மனம் கனத்திருந்தது. அவள் மீதான பரிதாபம் இன்னும் மேலோங்கிற்று.

'ரொஸான், உடைந்து போய்விடாதே! உனது சோகம் ஆழமானதே! ஆனால் அத்தனை ஆண்களையும் வெறுக்கக்கூடியதாகவா மாற்றி விட்டிருக்குமது?'

'இது என்ன கேள்வி' என்பதாக அவள் பார்வையின் தீவிரம் இருந்தது. அவள் பார்வையை நேராக எதிர்கொண்டேன்.

'வன்மம் தீர்க்கிறேன்' என்று உன்னையே அழித்து விடாதே! எல்லாக் காலமும் தனியாகவே நின்று மொத்த ஆண்கள் மீதே வன்மம் கொண்டு... அந்த நிலைமை வேண்டாமென்கிறேன்...'

'நீ கருமமே கண்ணாயிருக்கிறாய். என்ன சொல்ல வருகிறாய், நீ! நீ கூட ஆண்தானே, உங்களுக்கொல்லாம் வளர்ப்பிலேயே திமிர் ஊட்டி வளர்க்கிறார்கள். பெண் போகம் என்றாலே மிருகமாகி விடுகிறீர்கள். பெண் உங்களுக்கான கொத்தடிமை என்ற நினைப்பு. அவள் சிங்களத்தியா, தமிழச்சியா, சோனகத்தியா எதுவாயிருந்தாலும் சரி, உங்கள் திமிர், வெறிக்கு வடிகால் மட்டுமே அவர்கள். இது மனதில் ஊறி ஊறி எங்குமே அது நாறிக்கிடக்கிறது. தனியாகச் செய்தால் 'கற்பழிப்பு' என உள்ளே தள்ளிவிடுவார்கள் என்பதால் - இந்தமாதிரி தருணங்களில் உங்கள் மிருகங்களை ஆறுதல் படுத்துகிறீர்கள்... சே...'

நான் பேசாதிருந்தேன். காத்திருந்தேன். கோபம் தணியட்டும். வன்மம் விலகட்டும். சற்று நேரத்தில் ஓய்ந்தாள். எனது மௌனம் யோசிக்க வைத்திருக்கும். அவளே கேட்டாள்.

'என்னைப் பிழையாக நினைக்கிறாயா?...'

'இல்லை, ஆனால், என்னை நீ விளங்கவில்லை என்றே படுகிறது...'

திடீரென அவளின் குரல் சற்றே உயர்ந்தது.
'எதை விளங்கவில்லை. நீ என்ன சொல்ல வருகிறாய்? உன்னை விரும்பச் சொல்கிறாயா?'

'என்னால், விரும்பச் சொல்லி வற்புறுத்த முடியாது. ஆனால், உனது தந்தையைப் போலவும் ஆண்களில்லாமல் இல்லை என்பதைப் புரியப்பார் என்கிறேன்.'





'தயவுசெய்து, புலம்பாதே! மதாஹரி, நனா படித்திருக்கிறாயா? பெண் உடம்பால் பலஹீனமானவள், உணர்வு வயப்பட்டவள் எனச் சொல்லி, அழகுப் பதுமையாக்கி அல்லது தற்கொலை, வெடி குண்டு தாரியாக்கி.... சே...! உங்களால் பெண்ணைக் கொண்டாடத் தெரியவில்லை, வியாபாரம், அரசியல் நவீன உலகு எல்லாச் சொல்லாடல்களின் ஆழமும் பார். அப்போதுதான் இந்த ஆண்களின் கொடூரம் எந்த அளவு போய்விட்டதென்று புரியும். எனக்கு எனது தந்தை ஒரு 'ஜெம்' அப்படி மனிதர்கள் மரித்துப் போய்விட்டதாகவே நினைக்கிறேன்...'

'ஏன் அப்படி...'

'இன்றைக்கு மொத்த உலகமே 'ஓடு... ஓடு... முன்னால் ஓடு' என்பதைத்தான் சொல்லிக் கொடுக்கிறது. எத்தனை பேர், நசுங்கினாலும் சரி, அவர்களுக்கு வெற்றி மட்டுமே குறி. இதையே இன்றைய எல்லாக் கல்விமுறையும் போதிக்கிறது. வெற்றியை இலகுவில் பெற பெண்கள் முக்கிய முதலீடு...'

'ரொஸான் என்ன பேசுகிறாய் நீ! தயவுசெய்து பேச்சைத் திசைதிருப்பாதே...'

ரொஸான் பேசவில்லை. இருவரும் சாப்பாட்டை முடித்திருந்தோம். கைகளைக் கழுவித் துடைத்தாள், நானும். ரொஸான் மீதிகளைக் கொட்டிவிட்டு வந்தாள். மேலே பேச இருவருக்குமே சங்கடமாயிருந்தது. ரொஸான் உட்காரவில்லை. 'போகலாமே' என்பதாக, என்னை நோக்கினாள். எனக்கு இன்னமும் தயக்கமிருந்தது.

'ரொஸான் எனக்குப் பதில் சொல்லவேயில்லை நீ'

'என்ன பதிலை எதிர்பார்க்கிறாய். நான் வேண்டுமா உனக்கு...'
எனக்கு மனதில் ஆயாசம் கிளம்பிற்று. எப்படி இவளிடம் புரியவைப்பது. பொறுமையிருக்குமா? யோசனையாயிருந்தது.

'ரொஸான் எனக்காக ஒரு அரை மணிநேரம் உட்காரலாமே...'
உட்கார்ந்தாள். முகம் வெறுமையாகவே இருந்தது.

'ரொஸான், உண்மையைச் சொல், இந்த வாழ்க்கைமுறை, உனதுதொழில் எல்லாமே பிடித்தமாகவா இருக்கிறது...'

'இல்லாமலா... தொடர்ந்திருக்கிறேன். இங்கு நாளைக்கொரு தொழில் தேட முடியும், தெரியுமா?'

'தெரியும். உங்களது அகராதியில் W.W.W என்பது வேறு என்றும் தெரியும்'

'என்ன அது. எனக்குத் தெரியாதே...'

'பெண். வேலை காலநிலை (women, work, weather) மூன்றுமே இங்கு நிரந்தரமில்லை என்கிறார்கள்...'

ரொஸான் பட்டெனச் சிரித்தாள். எனக்கு இதுவே நல்ல தருணமெனப்பட்டது.

'ரொஸான். நீ நினைப்பது போல எண்ணமேயில்லை எனக்கு. நீ கூட உனது விருப்பம் போலவே இருந்துகொள். ஆனால். உன்னை விரும்பினேன் என்பதை ஒரு மூலையிலாவது போட்டுவை..."

இதைச் சொல்லிவிட்டு மௌனமாயிருந்தேன். அவளும் சற்று நேரம் பேசாமலேயே இருந்தாள். தீவிர சிந்தனை தெரிந்தது திடீரெனக் கேட்டாள்.

'என்மீது கோபமா? ஏன் 'உம்' மென்றிருக்கிறாய்?'

'அப்படியல்ல பெண்ணே... உன்னை நினைக்கப் பயமாகக் கூட இருக்கிறது...'

'அப்படிச் சொல் 'இவ்வளவுதானா இவள்' என்று ஆகியிருக்கும். அன்வர் நான் மிகவும் காயப்பட்டிருக்கிறேன். அசிங்கப்பட்டிருக்கிறேன்...'

'தெரியும் ரொஸான்...'

'தெரிந்துமா? என்ன. என்மீது அனுதாபப்படுகிறாயா?'

'இல்லை ரொஸான். ஒருக்காலுமில்லை. எனக்குக் குடும்பம். வாழ்க்கை. காமம் என்பதிலெல்லாம் வேறாக எண்ணமிருக்கிறது. என்னை நான் நம்புகிறேன். அது சொல்கிறது. நீ நல்லவள். எனக்குரியவள் என்று...'
ரொஸான் என்னைப் பேசவிடவில்லை. ஆஹ் ஹாஹ்... ஹா... வெனச் சிரித்தாள். நான் பேச்சை உடனே நிறுத்தினேன். முகம் மாறினேன்.

'சரி போகலாமா?' என்றபடி எழுந்தேன். அவளும் எழுந்தாள். எங்களிடையே மௌனம் திடீரெனச் சூழ்ந்து கொண்டது. அமைதியாக நடந்தோம்.

'அன்வர். எனக்கு ஏதாவது குடிக்க வேண்டும் போலிருக்கிறது...'





'ரொஸான். இங்கேயே நின்று கொள். நான் வாங்கி வருகிறேன்' என்றபடி தனியாகத் துவங்கினேன்.

'நீ ஒன்றும் வாங்க வேண்டாம். நானும் கூட வருகிறேன்...'

'ஓகே! வரலாமே'

'ம் அதைச் சிரித்தபடி சொல்லலாம்தானே'
இதுவே பெண். ஆத்திரத்திலும் அழகு. பின்னர் மனம் நொந்து. இழைந்தபடி குழைவதிலும் அழகு. அவளை ஆசையுடன் பார்த்தேன். ஆயினும் பேசவில்லை. அவளே கேட்டாள்.

'அன்வர். என்னால் முடிவு செய்யமுடியாதிருக்கிறது. ஆசைப்பட்டு. இன்னொரு இடியைத் தாங்க என்னிடம் தைரியமில்லை. நீ அதேமுடிவிலிருக்கிறாயா? இன்னும் காலமெடுத்து. இதை யோசிக்கலாமே...'

நான் அவள் விரல் பற்றினேன்.
அவளின் முகத்தை நேராக நோக்கினேன் பின் அமைதியாகச் சொன்னேன்.

'ரொஸான் எனது முடிவில் மாற்றமில்லை. நீ தயங்குகிறாயென்றால். யோசிக்க வேண்டுமென்றால் - பரவாயில்லை. என்னால் காத்திருக்க முடியும்.'

'எவ்வளவு காலம்'
'அது. உன் இஷ்டம்'

'சரி. உன்னை நீண்ட காலம் சோதிக்கமாட்டேன் இரு வாரம். தயவு செய்து...'

'அது. நல்லதுதான்'

இருவருமாகத் திரும்பினோம். பிரியும் தரிப்பிடத்தில் நீண்ட பார்வைகளைப் பரிமாறியபடி பிரிந்தோம். அவளைப் பொறுத்தவரை நான் நினைத்த. எண்ணிய எல்லாமே சரியாக அமைந்திருந்தன. அவள் என் புறம் வருவாள். என்னை ஏற்கத் தயாராவாள் என்கிற நம்பிக்கையுடன் காத்திருக்கத் துவங்கினேன்.

# அதனை, ஆராதனை செய்!

(இந்தக் கதையை எழுதுவதா அல்லவா என்கிற குழப்பம், தொடர்ந்தும் நாலரை வருடங்களாக இருந்து கொண்டேயிருந்தது. கடைசியில் தயக்கத்தை தகழி சிவசங்கரம் பிள்ளை தீர்த்து வைத்தார். அவரின் 'காதல் பற்றி': என்கிற சிறுகதையை வாசித்ததும், இதை எழுதியே ஆகனும் என முடிவுசெய்தேன். என் தயக்கத்திற்கு மூன்றாம் பால் தூக்கலாகி விடுமோ என்பதுவும், இதையெல்லாம் போய் ஒரு மனிதன் எழுதுவதா? என அதிமேதாவிகள் விளாசுவார்களோ என்கிற எண்ணமும் காரணமாயிருந்தன. ஆதலால் முதலில் தகழி அவர்களுக்கும் (அவரது கதைக்கு முழு எதிரானது என்கிற போதும்), நண்பன் றிபாய் அவர்களுக்கும் என் நன்றிகள்.)

இந்தக் கதையின் நாயகன், உங்களுக்குப் பத்திரிகை, தொலைக்காட்சி போன்றவற்றினூடு பரிச்சயமான பிரபல அரசியல்வாதியும், என்னுடன் பால்ய காலமிருந்து, இன்றுவரை சிநேகமாயிருக்கிற றிபாய். எங்களின் நட்பு, அதன் காலவரையறை ஆகிய எல்லாவற்றையும் எங்களூர் மட்டும் அறியும். ஏனெனில் அத்தனை உயரமானவனில்லை, நட்சத்திர, அந்தஸ்தும் வாய்த்தவனல்ல நான்.

நானும் றிபாயும் ஆண்டு ஒன்றிலிருந்து பத்துவரை ஒரே வகுப்பாகக் கற்றவர்கள். இந்தப் பத்து வருடங்களும் வகுப்பில் எப்போதும் அருகருகாகவே இருக்கைகள். இடையில் சண்டை, பிரிவு? வராமல் போயிருக்குமா? அப்படியும் கூட நினைவிலிருந்து பார்த்தால், வேறிடம்





உட்கார்ந்ததில்லை என்பதே உண்மையானது. ஐந்தாம் வகுப்பென்று நினைக்கிறேன். ஒரு சண்டையில் வேறு வேறாக உட்கார்ந்தோம். முகம் பார்க்க தவிர்த்தோம். மூன்று நாட்கள் பேசாதிருந்தோம். அந்தப் பொழுதில் மிகப் பெரிய மனச் சோர்வும், தனிமையும் சேர்ந்து உருவாக்கிய வெற்றிடம் மூட, மற்றவரிடம் 'புலம்பித்' (வீர வசனம் பேசி) திரிந்தோம். கடைசியில் மூடிய தாழி உடைந்தது. தவிப்பாக இணைந்தோம். இனி என்ன பிரிவிலும் - 'ஒருக்காலும் வரவே கூடாது' என்ற போதிலும் - இருக்கை மாறல் கூடாது என எழுதி சத்தியம் செய்து, பாதுகாத்து வைத்தோம். ஊடல்கள் (கலவியாளர்கள் இச் சொல்லை நட்புக்குப் பிரயோகம் பண்ணியதில் கோபம் கொள்ளாதிருக்கட்டும், நாங்கள் மீள உடனேயே சேர்ந்து விடுவதால் பிரயோகம் பண்ண வேண்டியதாயிற்று) இரு நாட்களில் ஓடிப் போயின. பாடசாலை நகமும், சதையும் என்றது. ஊர் இரட்டையர் எனக் கொண்டாடியது. அது தொடர எனது வீடும் ஒரு காரணமாயிருக்க வேண்டும்.

பைசலுடன், அதாவது என்னுடன் கூடவே பிறந்தவர்கள் பத்துப் பேர். உம்மா, வாப்பா என ஒரு டசின் ஆட்களால் பெருகி நின்ற வீடு என்னுடையது. எனவேதான் நண்பன் றிபாயை திடீரென உள்வாங்குவதில் அது தயக்கம் கொள்ளவில்லை. றிபாய் பெரிய அரசியல்வாதியாக மாறியதனால் ஏற்பட்ட பிரிவு ஆரம்பத்தில் குறையாகவே எங்கள் வீட்டில் இருந்தது. பின்னர் அல்ல.

றிபாய் படிக்கும் போது விளையாட்டில் ஆர்வமுடையவன். உதைபந்து, கிரிக்கெற், நீள, உயரம் பாய்தல்கள். அதைவிட நிறைய பாடப் புத்தகம் தவிர்த்து எல்லாவற்றையும் வாசிக்கிறவன். நேரம், காலம், எந்த இடம் எதுவுமின்றி தன்னையே மறந்து படிக்கிறவன். அவனது கண்களில் எப்போதும் ஒரு தேடல், ஆர்வம் இருப்பதை நீங்கள் இப்போதைக்கும் காணமுடியும். எல்லோரையும் கனிவு ததும்ப நோக்க வைக்கும் முக வசீகரம். அதிலும் விசேடமாக, அழகு சேர்ப்பது அவனின் வட்டக் கரிய பெரிய முட்டைக் கண்களிரண்டு. எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடுவதாக அவனின் பேச்சு இருக்கும். ஆட்களிடமோ - அல்லது சபையிலோ வார்த்தைகளைத் தோரணம் செய்து, எளிமையாய்த்துவங்கி... எதையும் விளங்க வைக்கும் ஆகர்சிக்கிற குரல், எதன் போதும் அதிர்ந்து போய் விடாத மன ஒருமை..., இது போதாது? பாடசாலை அவனை உயரே தூக்கிப் பிடித்தது. சிரேஷ்ட மாணவர் தலைவன், மாணவர் மன்றச் செயலாளர், உதைபந்தாட்ட தலைவன்..., ஆஹா றிபாயைத் தெரியாதவர் யாரும் இலராகினர், அங்கு. கூடவே ஒட்டிய படி இந்தப் பைசலும். எனக்கு அதனால் அப்போது ஓரளவு பெருமையும் இருந்தது.

பின்னேரப் பொழுதுகளில், சைக்கிலில் நான் முன்னாக உட்கார்ந்து வர (என்னை மிதிக்க விடமாட்டான்) கிடைக்கிற குசல விசாரிப்புகளில் மகிழ்ந்ததுண்டு, நனைந்ததுண்டு.

தொள்ளாயிரத்து அறுபத்தைந்து எங்களுக்கு நன்றாக விடியவில்லை. பத்து வருட ஜோடி இருக்கைகளைப் பரீட்சை முடிவு பிய்த்துப் போட்டது. நெஞ்சு நிறைய ஏக்கம், கவலைகளைச் சுமந்தபடி உயர்தர விஞ்ஞானப் பிரிவில் நானும், வர்த்தகப் பிரிவில் ரிபாயுமாக உட்கார்ந்தோம் (வீட்டில் அழு மூஞ்சியாக நின்று கொண்டு 'வர்த்தகப் பிரிவை பயில விரும்புகிறேன்' எனச் சொல்லி வாப்பா, உம்மா, நானாமாரிடம் வாங்கிக் கட்டிக் கொண்டது வேறொரு தனிக் கதை)

ரிபாய்க்கு படிப்பின் மீது பெரிய நாட்டமிருந்ததில்லை. பரீட்சையை ஏனோதானோ வென்றுதான் முடித்தான். என்னால் அப்படிச் செய்ய முடியா. எனக்கு முன்னே, நன்கு படித்து உயர் தொழிலில் இருக்கிற இரு நானாமார், படிப்பினால் நான் பெறப் போகிய உலகாதாயத்தை, உடல் நோவின்றி வாழ்க்கையை எதிர்கொள்ள, அது இலகு படுத்திக் கொடுக்குமென்பதை நன்கு அறிந்த, என்னால் மதிக்கப்படுகிற என் வீடு முன்னால் நின்று கொண்டு பயமுறுத்தியது. ஆதனால் நான் படித்துத் தொலைக்க வேண்டியதாயிற்று. ஆனால் ரிபாய் கொடுத்து வைத்தவன். அவன்மீது எந்தவிதத் திணிப்புமிருக்கவில்லை. சற்றே வசதியான, போடியார் அவன் வாப்பா. நான் அவனது நண்பன், எனது குடும்பத்தாருடன் தொடர்பாயிருக்கிறான் என்பதுவே அவனது வீட்டில், அவனை எந்தக் கேள்விக்கும் உட்படுத்தாதவையாக்கின.

உயர்தரப் பரீட்சை முடியுமட்டும் மொத்தப் பாடசாலையின் ஏக இளவரசனாக ரிபாய் இருந்தான். மாணவர் மன்றமா? விளையாட்டுப் போட்டியா? நன்கொடை அறவீடா, சுற்றுலாவா?.., எதற்கும் 'ரிபாயைக் கூப்பிடு' எனப் பாடசாலையின் முக்கிய அச்சாணியாகினான் எனது ரிபாய். எனக்கு ஆற்றாமை எழவில்லை. எனது முழு முதல் நண்பன் அவன். அவனால் ஓரளவு பெருமையும் எனக்குக் கிடைத்திருந்தது. கடைசியாக, பரீட்சை முடிவு மேலும் எங்களைத் தூரமாக்கிப் போட்டது. நான், ஓரளவாக சித்தி பெற்றேன். வீடு, விவசாய விஞ்ஞானம் கற்கவென்று பல்கலைக்கழகத்திற்கு பெட்டிகட்டி என்னை அனுப்பிற்று. ரிபாய் தோற்றுப் போயிருந்தான். அதற்காக எந்தவித வெட்கமும், மனச் சஞ்சலமும் பெறவில்லை அவன்.

அது சரி, ரிபாய் அடுத்து என்ன செய்தான்? அவனின் முடிவு, நெடு நோக்கிலான, தீர்க்கமானதாயிருந்தது. ஊரின் எல்லா இளைஞரணிகளும்





அவன் வரவை வேண்டி நின்றன. எந்தவித தயக்கமுமின்றி, சமூகத்தின் முக்கிய தூணாகினான் அவன். நான்கு வருட பட்டப்படிப்பை முடித்து விட்டு நான் வந்தபோது ஊரின், நகரசபை உறுப்பினராகி விட்டிருந்தான் ரிபாய். ஊரின் சன சமூக அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள் எல்லாவற்றிலும் தலைவன், அல்லது காரியதரிசி இல்லாது போயின் நிருவாக உறுப்பினன் என ஏதாவது ஒன்றில் அவனிருந்தான். ஆதலால் அவனின் வெற்றி இலகுவானதாயிருந்தது. இப்படியாக எல்லாமும் இதுவரை சரியாகவே, என்னைப் பொறுத்தவரை (மறவாது இதை, ஞாபகமாகவே வைத்திருங்கள்) இருந்தது. எதுவரை? அவன் இமானாவை மணமுடிக்க முடிவு செய்தவரை.

எங்களது வீட்டின் முன் அறையில் நானும் அவனுமாக உட்கார்ந்திருந்தோம். உம்மா தேநீர்க் கோப்பைகளுடன் வந்தார். மேசையில் வைத்து விட்டுச் சொன்னார்,

'எடுங்க மகன்'

ரிபாய் வாயருகே கிளாஸைக் கொண்டு போக, அடுத்ததாக உம்மாவின் கேள்வி வந்து விழுந்தது.

'தம்பி, முஸ்னத் எம்.பிட மகளக் கட்டப் போறீங்களாமா?...'

ரிபாயின் கிளாஸ் தழும்பிற்று. முகத்தில், முதலில் வெட்கமே குடிவந்தது. பின் திடீரெனச் சமாளித்தவனாகச் சொன்னான்.

'இன்னும் முடிவாகல்ல' ம்மா. முடிவானதும் சொல்லாம்'ண்டு இருந்தன்'

'நீங்க 'ஓம்' சொல்லிட்டியளா?.'

'ஆமா. எனக்கு அவரப் பிடிக்கும்'

இதைச் சொன்னபோது அவன் தலை தாழ்ந்திருந்தது. உம்மா கொஞ்ச நேரம் எதுவுமே பேசவில்லை. அவ்னிடமிருந்து இந்த பதிலை அவர் எதிர்பார்க்கவில்லை போலும். பின் சுதாகரித்துக் கொண்டார். "இந்தக் கால பிள்ளைகள்' என நினைத்திருக்க வேண்டும். ஆனால் நான் அவனை விட்டு விடத் தயாரில்லை. உம்மா உள்ளே செல்லட்டுமெனக் காத்திருந்தேன்.

அவனை வழமையாக உட்காரும் கடற்கரைக்கு அழைத்து வந்தேன். நேரம், இரவு எட்டு மணி. பிட்டத்தில் ஒட்டிய மணலைத் தட்டி விட்டபடி ஆட்கள் கூடுகளில் அடைந்து கொள்ள புறப்பட்டாயிற்று. நிலவு கடலில் ஒளியைப் பரவி விட்டிருந்தது. மகிழ்ச்சியில் குலுங்கிச் சிதறிய கண்ணாடிச் சில்லுகளாய், கடல் சிரிப்பில் தளும்பி நின்றது. கடல் காற்று கடலின் வெண்ணிற ஆடையைப் பிடித்திழுக்க, கரையில் சில்மிஷம். காற்றின் ஊடல் தாள முடியாது கடலலை இரைச்சலாய் ஒலி எழுப்பிற்று. (என்னதான் 'சுனாமி'யைத் தந்தாலும் இன்றைக்கும் அதன் அழகே அழகுதான்) விரல்களால் மணல் ஒதுக்கி இருவரும் உட்கார்ந்தோம். அதுவரை பெரிதாக இருவரும் வேறேதும் பேசிக் கொள்ளவில்லை. றிபாய், 'என்ன கேட்பேன் என்ன பதில் சொல்வது' என்பதை யோசித்தபடி வந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அன்றைக்கு அத்தனை தெளிவான பதில்களை அவன் தந்திருக்க முடியாது. நான் அவனைக் கேட்டேன்.

'நீ அமானாவைத் திருமணம் செய்ய சம்மதித்து விட்டாயா?'

'ஆம் பைசல்'

'அவள் பெரிய அகங்காரி'

'எதனால் அப்படிச் சொல்கிறாய்?'

'யாரையும் பொருட்படுத்தாதவள். முகத்தெதிரே எடுத்தெறிந்து பேசுகிறவள்'

'மிகவும் நேர்மையான பெண் அவர். மனதுக்குப் பட்டதை உள்ளபடி வாழ முனைபவர். எனவே மற்றவர் அப்படி இல்லாத போது, கோபம் வந்துதான் தீரும்'

'பெரிய அழகி என்கிற கர்வம் பிடித்தவள்'

'அது உண்மைதானே.., அவர் அழகானவர் என்பதில் அவரின் பெருமை சரியானதில்லையா?'

றிபாய் மரியாதையாக 'அவர்' என்றே விழித்து வருவதை அவதானித்தேன். அதைப் பொருட்படுத்தாதவனாக அவனிடம் மேலும் சொன்னேன்.





'வேண்டாம் றிபாய். பணக்கார, பெரிய இடத்துப் பெண் என்கிற நினைப்பில் திமிர் கொண்டவள். உன் குடும்ப வாழ்வு சிதைந்து போகும். கஷ்டப் பட்டுப் போவாய்'

அவன் எதையும் கேட்கிற நிலையில் இல்லை. ஏற்கனவே முடிவு செய்து விட்டிருந்தான். எனது உபதேசங்களுக்கு நன்றி சொன்னான். கடைசியில் வாழ்க்கையின் தத்துவம் ஒன்றே ஒன்றுதான் என்கிற தினுசில் எனக்கு பதில் சொன்னானவன்.

'பைசல், உலகில் இத்தனை கோடி ஜனங்களில் நீ யார்? நான் யார்? இந்த மிகப் பரந்த கடற்கரையில் சிறிய இரு மணிகள். யாருக்கும் அது பொருட்டானதில்லை. நமது எல்லாக் கற்றல், உடை, சாப்பாடு, இருக்கை பற்றிய பிரக்ஞை..., ஏன் உனது எழுத்துக் கூட, குறித்த ஒரு சுற்றளவிலாவது 'நான் பெரிய ஆளாக்கும், தெரியுமா?' என்பதைத் தெரியப்படுத்தவே...'

'றிபாய் நீ என்ன சொல்ல வருகிறாய்?'

'நமது அடிப்படைத் தேவையான பசி, தூக்கம், காமம் உட்பட அனைத்தையும் இலகுவாய் அடைகிற போட்டியே வாழ்க்கை. அதை நான் அடையப் போகிற அந்தஸ்து இலகுவாக்கி வைக்கும்..."

'அதற்காக...'

'அமானா மிக உயர் குடும்பம் சார்ந்தவர். எனது வாழ்வும் அதனால் உயர்வு பெறும். எல்லா சுகமும் கனவும், சுருக்கி மாதச் சம்பளத்தில் தங்கிணத்தோம் பாடுகிற வாழ்வை என்னால் ஜீரணிக்கவே முடியாது. அதை விட...'

'அதை விட...'

'எனது பலம், ஆற்றல், திறமை அத்தனையையும் பயன்படுத்த ஒரே அரிய வாய்ப்பு இது. இன்னும், இன்னும் மேலே போகப் போகிறேன்...'

றிபாயின் கண்களில் தீவிரம், கனவு இருந்தது. உறுதி குடிகொண்டிருந்தது. நான் மேலே பேச முடியாது மௌனமாகினேன்.

அடுத்தென்ன?.., றிபாய் அமானாவை மிகுந்த பரபரப்புடன் ஆடம்பரமாகக் கரம் பற்றினான். நான் வீட்டார் பார்த்துத் தந்த

குடும்பத்துக்கு ஏற்ற குலவிளக்கு எனக் கை காட்டிய ஆரிபா கழுத்தில் முடிச்சிட்டேன்.

நாட்கள் மெதுவாக நகர்ந்தன. ரிபாய் மாகாண சபை உறுப்பினன் ஆனான். எனக்கு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளர் பதவி கிடைத்தது. ரிபாயை இப்போது மாதமொரு முறை காண்பதுவே அரிதாகிப் போனது. நான்கு வருடத்தின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினன் ஆகினான். சந்திப்பது வருடங்களுக்கொரு முறை என்றாகியது. ஆனால் நான் மட்டும், சராசரி வாழ்க்கையாக வருடங்களை நகர்த்தியபடி இருந்தேன். வயலும், வாத்தியார்த் தொழிலும் எந்தவித உயர்ச்சியையும் என்னில் தரவில்லை. எல்லா மாதக் கடைசியிலும் கடன் வாங்கி, பின்னர் அதனை இறுத்து, பின் மீளக் கடன் வாங்கி... நண்பன் ரிபாய் அப்போதும் வந்து போய்க் கொண்டிருந்தான். அவன் எந்த உதவியும் எனக்குத் தரவில்லை. தந்தாலும் நான் ஏற்கப் போவதில்லை என்பதை அவன் அறிந்திருந்தான். நான் நம்பிக் கொண்டிருக்கிற சுய கௌரவம், மானம், ரோசம், நல்ல தேட்டம் (இதில் இன்னமுமிருக்கிறதா?) இடம் கொடாது. அல்லது இரந்து வாழ்கிற, எல்லாம் துறந்த, பரந்து பட்ட, பெருமைக்குரிய மனநிலையை நான் இன்னும் அடைந்தேனில்லையாக்கும்.

எனது வாழ்வின் ஓய்வு நிலைக்கு இப்போது நான் வந்து விட்டிருக்கிறேன். எனது நாற்பத்தி மூன்று வருட அரச சேவையில் இன்னமும் எஞ்சி நிற்பது, ஆரிபாவைக் கரம்பிடிக்க முன்னர் என்னால் வாங்கப்பட்ட இந்தத் துவிச்சக்கர வண்டி மட்டுமே. ஆரிபாவைத் திருமணம் செய்தபோது மாமினார் மோட்டார் சைக்கிளைச் சீதனமாகத் தந்திருந்தார். புது மாப்பிள்ளையாக ஆரிபாவுடன் வீதியில் பவனி வந்ததில் அப்போது பரவசமாகத் தானிருந்தது. நாட் செல்ல அது ஏற்படுத்துகிற செலவும், தொல்லையும் தாள முடியாது போயிற்று. இரு கிழமைக் கொரு தரம், சுற்றம் பார்த்திருக்க கராஜுக்கு தள்ளிக் கொண்டு போவது வெட்கத்தைத் தந்தது. அதில் பயணம் போகிறபோது, துளை விழுந்த 'சைலெண்ஸர்' ஏற்படுத்துகிற சப்தம் நாரசாரமாக மாறிற்று. அதை விற்கவும் முடியவில்லை. குப்பையில் தள்ளிவிட மாமினார் சொத்து என்பதால் மனமுமில்லை. எப்போதாவது பயணம் போகிற போது, இதுவரை எரிந்த பெற்றோலின் மீதி அத்தனையையும், சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தது போல், அது கக்கும். கரி படிந்த புகை என் கௌரவத்திற்குரிய உடையை, என்னைக் கரியூட்டின வீதியில், மக்களிடையே தலை தாழ்த்தியபடி பயணம் போக வேண்டியிருந்தது. அதைக் காண்கிற போதெல்லாம் 'இப்படி ஆயிற்றே' என்கிற சோகம் வர ஆரம்பித்தது. தனியான சைக்கிள்





சவாரியின் போதும், 'வண்டிக் கென்னாயிற்று' என்ற கேள்வியால் குமைந்தேன். எப்போதாவது பணம் சேருகிற (ஏதாவது இங்கிரிமென்ற், அலவன்ஸ்... இப்படி) போது மட்டும் போய் வருகிற பொருளாயிற்று அது. ஆனால் எப்போதும், என்னைக் கைவிடாத, ஆத்ம திருப்திக்குரிய ஒன்றாக இந்தத் துவிச்சக்கர வண்டியே இருந்தது. எனது வாழ்வின் பெரும் பகுதிப் பயணங்களில் அதுவே என் கூடவாய் இருந்தது. இப்போது பார்ப்பது குறைவாயினும் நண்பன் ரிபாயை, எங்கள் நட்பை இன்னும் ஞாபகம் கொள்ளச் செய்கிற ஆத்ம திருப்திக்குரிய ஒன்றாக அது இருந்தது.

அவன், ரிபாய் சொன்னது போலவே வாழ்க்கையை வென்று விட்டிருந்தான். முன்னாள் மந்திரி எனச் சொன்னால் அவனை யாருக்கும் தெரிந்து போய் விடுகிறது. அவனின் உடலில் செழுமை கூடி விட்டிருந்தது. என் போலக் கண்ணைச் சூழக் கருவளையமில்லை. அவனுக்கு பூசினாற் போன்ற உப்பிய கன்னங்கள். வெளித் துருத்திய கன்ன எலும்பும், நெஞ்சுக் கூட்டுள், வெறும் கவலையையும் மட்டுமே சுமந்தபடி திரிகிற நான், வாழ்க்கை துப்பிப் போட்ட அவலத்தில் ஒன்று. அவனுக்கு அழகான முதுமை வந்துவிட்டிருந்தது. வெண்ணிற தாடி முக வசீகரத்தை இன்னும் கூட்டியிருந்தது. அரச சௌகரியங்களை இத்தனை வருட காலமும் அனுபவித்ததனால் வந்த செழுமை, அவனின் முதுமையும் அழகாக்கியிருந்தது. பேச்சில் இன்னும் வசீகரம், எல்லா இடங்களிலும் வாசித்த, பெற்ற படிப்பினைகளை பேச்சில் நுழைத்து எதையும் சாத்தியமாக்குகிற நாவண்மை... மொத்தப் பிரதேசமே அவனில் மயங்கிக் கிடந்தது. எப்படி இப்படி ஒரு சாதுர்யம், உள, உடல் திண்மை கிடைத்தது அவனுக்கு. அப்படித்தான் இருந்தானா? என்னால்தான் கண்டு கொள்ள முடியாது போயிற்றா? என்னையே அடையாளம் கண்டு கொள்ள முடியாது போன, அல்லது குடும்பத்தின் திணிப்புக்காக எதையோ தேடப் போனதால் வந்த வினையா இது? ஆதலால்தான் என்னையோ மற்றவரையோ, ஏன் மிக நெருக்கமான மனைவி ஆரிபாவைக் கூட அறியாதவனானேனா? அப்படியானால் இத்தனை வருட வாழ்வும் வீண்தானா? எனது வாழ்வு எனக்கே நிறைவானதாயிருக்கிறதா? பணம்... புகழ்... என்னிடம் இல்லவே இல்லை.

சரி, அப்படியானால் கிடைத்ததை நிறைவு எனக் கொண்டாடுகிற மனசு? அப்படி ஒரு நிலையை என்னால் அனுபவிக்க முடிந்ததேயில்லை. பிள்ளைகள் நான்கு பேருக்குக்கூட சௌகரியமான நிலையைப் பெற்றுக் கொடுக்க முடியாதவனாகி...

நினைத்து நினைத்து அவிந்தேன். மனசு திடீரென வெறுமை கொள்ள ஆரம்பித்தது. இன்றைக்கு றிபாய் என்னைத் தேடி வரப்போகிறான் என்பதனால்தான் இப்படி யோசிக்கிறேன் போலும். றிபாயின் அதி உச்ச வாழ்வும், வசதிகளும் ஆற்றாமையைக் கிளறியிருக்குமா? எனக்கு எதுவும் பிடிபட மாட்டேனென்றது. இந்த வயதுக்கு இத்தனை வெப்பிசாரமும், ஏக்கமும் தேவையற்றதுவோ என எண்ணாமலுமில்லை.

பிற்பகல் ஐந்து மணியளவில் றிபாய் குடும்ப சகிதம் வீடு வந்தான். இரு மூத்த மகள்களும் திருமணம் செய்து கொண்டு ஐரோப்பாவில் வாசம். மனைவியும், கடைசி இரு பிள்ளைகளும் கூடவர, அவன் என்னைத் தேடி வந்ததில் வீடே மகிழ்ச்சி கொண்டிருந்தது. அவன் மனைவி அமானா வயது போயினும், எந்தவிதக் குறையுமற்று, அதே தேஜஸ் உடல் பூராக வழிய பூரணச் சந்திரனாக வந்திறங்கினாள் எந்தவிதப் பந்தாவுமின்றி 'அங்கிள்' என முகம் மலர்ந்த சிரிப்புடன் அவனின் குழந்தைகள், றிபாயின் முகத்திலும் வாழ்க்கையைப் பூரணமாக வாழ்கிற திருப்தி தெரிந்தது. அவர்களால் எனது வீட்டிற்கே ஒரு பொலிவு வந்து விட்டது போலிருந்தது. நால்வரையும் சந்தோசமாக உள்வாங்கினேன்.

றிபாய்க்கு பழைய கடற்கரையைப் பார்க்க மனதில் அவா எழுந்தது. எதையும் மூடிவைத்து வேஷம் போடுகிறவனில்லை அவன். அன்றைய சந்தோசகரமான பொழுதை, இப்போது ஒரு முறை அசைபோட்டுப் பார்க்க நினைக்கிறான். அதைவிட பால்ய கால நண்பனுடன், அன்றைய மனநிலையிலேயே பழகி..., வாழ்வு பூராகவும் தொடர்வது... பெரிய கொடுப்பினைக்குரியது. முதன் முதலாக அவனின் காரில் உட்கார்ந்து பயணித்தேன். கார் வழுக்கிக் கொண்டு செல்ல ஆரம்பித்தது. சாரதி இல்லாமல் அவனும் நானுமாக, கடற்கரையை நோக்கிப் பயணித்தோம்.

முழுக்க குளிரூட்டப்பட்ட வண்டி. மிகக் கனதி கூடியதாயிருக்க வேண்டும். எந்தவிதக் குலுக்கமுமின்றி ஓடியது. சின்னதாகக் கூட சப்தமெழுப்பவில்லை. ஒரு அழுக்கு, தூசு இன்றி பார்க்கிறபோதே மனதில் மகிழ்ச்சியைத் தரவல்லதாயிருந்தது. இப்படியான வாகனத்தில் நான் பயணிப்பது இதுவே முதன் முறை. நான் றிபாயைக் கேட்டேன்,

'இதுதான் உனது காரா?'

'ம்.. நன்றாயிருக்கிறதா?'

'மிகவும்...'





'உண்மைதான். புத்தம் புதிய சொகுசுக் கார் இது. மூத்த மகள், அன்பளிப்பாக அனுப்பியது இது'

'நீ, மிகவும் கொடுத்து வைத்தவன் றிபாய்'

'நிச்சயமாக! நானும் அதை நம்புகிறேன்'

இதன் பின்னர், கடற்கரையை வந்து சேருமட்டும் பெரிதாக ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. பால்ய கால இடத்தை, அந்த ஞாபகங்களை இரை மீட்பதில் சந்தோசம் இல்லாமலில்லை. முன்னர் போல பெரிய பரப்பாக, சுத்தமானதாக கடற்கரை இருக்கவில்லை. ஓரளவு நல்ல இடம் தேடி உட்கார்ந்தோம். றிபாய் சற்று நேரம் மௌனமாகவே இருந்தானவன். என்முகம் பார்ப்பதும், கடலலை பார்ப்பதுமாக பொழுது போக்கினான் பின் சட்டென்று கேட்டான்,

'பைசல், வாழ்க்கை சந்தோசமாக இருக்கிறதுவா?'

நான் உடனே பதில் சொல்லவில்லை. தாமதித்து. விட்டு, பதிலாக, கேள்வியை மீள வீசினேன்,

'எதைச் சந்தோசமென்கிறாய்? வாழ்க்கையின் கடைசி நிலைக்கு வந்து விட்டபின் எதற்கு இந்தக் கேள்வி?'

றிபாய் பட்டென்று சிரித்தான். பின் சொன்னான்.

'அதே தத்துவம். அறிவால் எதையும் மட்டிடுகிற மனப் பாங்கு. நீ இன்னும் மாறவேயில்லை...'

'நீ கூடத்தான்..'

றிபாய் மறுப்பின்றி அதை தலையசைத்து ஆமோதித்தான். பின்னர் சொன்னான்.

'உண்மைதான் பைசல். எனது இருபத்தேழில் அன்று அமானாவைத் திருமணம் செய்ய உள்ளதை, இங்கு வைத்துத்தான் உன்னிடம் சொன்னேன். இன்றைக்கும் அதே சந்தோசம் பூரிப்புடனிருக்கிறேன். எப்போதும் என்னைப் பிரியாத நண்பன்..., ஆஹா... எத்தனை 'துடிப்புடனிருந்த காலமது...'

'எப்படி இது சாத்தியமாயிற்று, றிபாய்?'

'எப்போதும் எதையாவது நோக்கி ஓடிக் கொண்டிருப்பதுவே எனது வாழ்வாயிற்று. எனக்கு வெற்றி... வெற்றி என்கிற ஒன்றே தேவையாயிருந்தது...'

'எது மட்டும் இந்த ஓட்டமிருக்கும்...'

"எனது ஆற்றல், திறமை உள்ளவரை... ஓடு... ஓடு... போட்டியிடு... வெல்லு... மீண்டும் போட்டியிடு... ரொம்பவும் சந்தோசகரமான வாழ்க்கை என்னுடையது பைசல்...'

நான் மௌனமானேன். இன்றைக்கும் அவன் மனதளவில் இளைஞனாகவே இருந்தான். யோசனையுடனேயே கேட்டேன்,

'நீ வேஷம் போடவில்லையே...'

'உன்னிடம் பொய் சொல்வேனா? இந்தக் கடலலையைப் பார், எப்போதும் ஓரிடத்தில் அந்த அலை தரித்ததில்லை. அந்த அலை, வேறிடம் போயிற்று. இப்போது வருகிற அலையில், முதல் வந்து போன அலையின் நீர்த்துளி எதுவுமே இல்லை. எந்த நீர்த்துளியும் ஓரிடம் தரித்ததே இல்லை. நான் இந்த அலை மாதிரி...'

'என்ன தத்துவம் இது?'

'தத்துவம் இல்லை பைசல். அதற்கு இயங்குதல் மட்டுமே தெரியும். எதற்கும் முரண்டு பிடித்ததில்லை. கடலென்கிற சமுத்திரத்தில், தன்னை ஒப்புக் கொடுத்துவிட்டு, எத்தனை இன்பமாக ஆவலாகக் கரைநோக்கி ஓடிவருகிறது. அதேபோல எனது ஆற்றலை ஒப்புக் கொண்டு, வாழ்க்கைக் கடலில் எவ்வித எதிர்ப்புமின்றி இயங்குதலில்...'

'தயவுசெய்து நிறுத்துகிறாயா? நான் கேட்பது உனது சொந்த வாழ்க்கை பற்றி...'

'என்ன கேட்கிறாய் நீ...'

'அமானாவுடனான குடும்ப வாழ்வு?...'





றிபாய் சற்று நேரம் மௌனமாயிருந்தான். சிலவேளை என்னைக் காட்டிக் கொடுக்குமோ இக் கேள்வி என யோசனையாய்ப் போயிற்று. பின்னர் சொன்னான்,

'அமானா, எனக்குக் கிடைத்த மாணிக்கம் 'பைசல்.' அவள்தான் எனது உற்சாக பானம். அவளைத் தவிர, வேறு யாராலும் எனக்கு இத்தனை நிம்மதியான, வெற்றிகரமான வாழ்க்கையைத் தந்திருக்க முடியாது என்றால் நம்புவாயா?'

அவன் இதைச் சொன்னபோது குரலில் சந்தோசம் தெரிந்தது. முகத்தில் பெருமிதமிருந்தது. கண்களில் ஒளி வட்டம் தெரிந்தது. என்னால் அப்போதும் நம்பக் கஷ்டமாகவேயிருந்தது. நான் கேட்டேன்,

'என்னால் இன்னும் நம்பக் கஷ்டமாகவேயிருக்கிறது?'

றிபாய் கொஞ்ச நேரம் பேசாதிருந்தான். எனக்கு வீட்டில் வைத்து முகம் நிறைய பூரிப்புடன், இலட்சுமிகரமாக, இலங்கி நின்ற அமானாவின் நினைவு வந்தது. ஐம்பத்தைந்து இருக்குமா? எல்லாம் கிடைத்துவிட்ட, திருப்தியான வாழ்க்கையினால் பெற்ற உளப் பூரிப்பா அது? எதிலும், எப்போதும் வெளிப்படையாக வாழ்கிற கணவன், எந்த இடையூறையும் சவாலாகச் செய்து முடிக்கிற பக்கத் துணை பெற்றுவிட்டதனலாய பயனா?. றிபாய் மீளக் கேட்டான்.

'உனது பிரச்சினை என்ன? ஏன் இப்படி சந்தேகம் கொள்ள வேண்டி வந்தது?

'இல்லை, அமானா அழகின், செல்வாக்கின் திமிரில் வளர்ந்தவர், நீ கஷ்டமே படவில்லை என்கிறாய்...

பைசல், நான் முன்னரே சொல்லியிருக்கிறேன். அவர் அழகானவர் என்று. அது அவரின் இன்னொரு சொத்து இல்லையா? நான் 'நீர்தான் எத்தனை அழகு' என எல்லாப் பொழுதும் அவரைப் பாராட்டுவதுண்டு. அதை நான் அங்கீகரிப்பது மட்டுமன்றி பாராட்டவும் செய்வது, அவரையே கௌரவப்படுத்துவதாகாதா?'

'பணத்திமிர்...'

'எதனால் இந்த அவச் சொல் வருகிறது. அவர்களின் வீடு, வாகனம், உடுப்பு ஏனைய வசதிகள், தோழமைகளை வைத்தா? நமது சமூக, பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களை விரோதமாகப் பார்க்கிற

மனநிலையை வளர்த்தே வந்திருக்கிறது. அதனால் தான் இப்படி ஒரு கேள்வி...'

நான் அவனை மேலே பேச விடவில்லை, ஊடறுத்தபடி கேட்டேன்.

'எனது கேள்விக்கு இது பதிலல்லவே...'

'அதைத்தான் சொல்கிறேன். பணம் இருப்பது ஒன்றும் பாவகரமானதல்ல. அது வாழ்வின் தொண்ணூறு விகிதப் பிரச்சினைகளைத் தீர்த்து விடும். பணத் திமிர் என்பது பாவகரமானது என்பதைப் பெண்களே அதிகம் புரிந்து வைத்திருக்கிறார்கள். ஏனெனில் தாய்மை சார் மனது அவர்களுடையது....'

'அது சரி, அந்த வாய்த் துடுக்கு...'

'அது முதலில் பெரும் குறையாகவே பட்டது. அவள் கோபம் நியாயமானது எனக் கண்டபோதும், அதைச் சொல்லும் மொழி ஆழமாயிருந்தது, ரணப்படுத்தியது. கோபப்பட்டுப் பேசும் போதெல்லாம், 'இத்தனை அழகு முகம் எத்தனை அசிங்கமாயிற்று பார்' என்பேன்... எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவன் மேலே சொன்னான்,'

'முதலில் 'வழிய வேண்டாம்' என்றாள். ஆத்திரப்படுகிற போதெல்லாம் முகத்தெதிரே கண்ணாடியை பிடித்துக் கொண்டிருப்பேன். பெண், விரைவில் புரிந்து கொள்கிறவள்,...'

'நீ பெரிய கில்லாடிதான். அது சரி, உங்களிடையே ஒரு போதும் பிளவே வந்ததில்லையா?' சற்றே ஆச்சரியம் எழக் கேட்டேன். எனக்கு குரலில் ஏக்கமும் இருக்கிறதோ என்ற சம்சயமெழுந்தது.

'ஏன் இல்லாமல், நிறையத் தரம் வந்துள்ளது. ஆனால் இரண்டு நாட்களுக்கு மேல் நீடிக்க விடமாட்டேன்'

'மாட்டேனென்றால், கடைசியில் நீதான் சரணாகதியா?'

'இதிலென்ன 'ஈகோ' வந்தது. அதற்கு மேல் என்னால் தாங்க முடியாது. முழுச் சரணாகதிதான்...'

'போயும் போயும், மனைவியிடமா?'





'உண்மையை ஒப்புக்கொள்ள என்ன வெட்கம்? அவளின் அருகாமை, காதல், காமம் எல்லாம் எனக்கு வேண்டியவை.. அதைவிட, வள்ளுவன் காமத்தில் ஆண் முதலில் தோற்பது, இறுதியில் வெற்றிக்....'

'நீ எங்கு பொறுக்கிச் சொன்னாலும் சரி, நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்...'

'அதற்கு நான் என்ன செய்யட்டும். எனது எல்லாக் கவலை, சிந்தனை, வாழ்க்கை பற்றிய தேடல் எல்லாமே தொலைந்து போய், எங்கள் அறிவை ஓரமாக்கி நாங்கள் மெய் மறந்து, ஒன்றாக எல்லா ஆற்றல்களையும் ஒன்று மறந்து நிற்கிற பொழுது அது...'

'பெரிய ரஜனீஸ் சுவாமி என்கிற...'

'சே... எனக்கு எந்தச் சாயமும் பூச வராதே. அவளுடன் பிணக்காகினால், எல்லாப் பொழுதுகளிலும் நான் சோர்ந்து விடுகிறேன். மனம் அலை பாய்ந்து கொண்டே இருக்கத் துவங்கிவிடுகிறது. என்னை மீள மீளப் புதுப்பிக்கிறவள் அவள்....'

'நீதான், இத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறாய். தகழி, ஒரு வேளைச் சோறு போல - கடையிலோ வீட்டிலோ சாப்பாடு ஆகினால் சரி என்பது போலப்பேசுகிறார்...'

'கடைசியில் என்னதான் சொல்கிறாய் நீ...'

'உனது எல்லாத் தேடல் அறிவு போன்ற குப்பைகளெல்லாம் ஓரமாக்கி வை. தாய்க்குப் பின் தாரம் என்பதுவும், ரொட்டி தீய்ந்து போயினும் கணவன் அழைத்தால் கூடச்செல் என்பதுவும் என்ன என யோசி, வீதிக்கு வர வேறு பெண்ணில் ஆசை வருகிறதா, மனைவியிடம் ஓடிப்போ என்பது யாது என யோசி. இம்மையின் வாழ்க்கையில் மனைவி அமைவதுதான், சுவர்க்கம் என்பது...'

சே... அவன்தான் என்னமாய்ப் பேசினான். உண்மையாகவே, கடைசியில் அன்று நான்தான் நிறையக் குழப்பமுற்றேன். இதுவரைகாலம் பெற்ற அறிவுகளை ஒன்றாக்கி, என்னைப் புரட்டிப் போட முனைகிறானோ எனவும் நினைத்தேன். இது என்ன தத்துவம்? எழுத்தும், பேச்சும் என்று வருகிறபோது சரி வரலாம், மற்றப்படி வாழ்வு, இத்தனை இலகுவானதா? என்னால் இன்னும் தெளிவுபெற முடியவில்லை! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?



எழுபதுகளிலிருந்து எழுதிவரும் எஸ். நஸீறுதீன், இலங்கை தமிழ் சிறுகதை படைப்புலகில் விசேடமான கணிப்பிற்குள்ளாக் கப்பட வேண்டியவராக அவரது கதைக்கருக் களின் ஊடாக மேற்கிளம்பி நிற்கிறார். இலங்கை தமிழ் சிறுகதை வடிவத்தில் இதுவரை தொடாத தளங்களையும் பேசு பொருளையும் கொண்டது இவரது கதைகள்.

நல்லதோர் வீணைசெய்தே (1996)
பெண்ணே போற்றி (1999)
மறைத்தலின் அழகு (2002)
கவசங்களைதல் (2007) என்பன இவரது சிறுகதை தொகுதிகளாகும்.
நச்சுவளையம் (2004) நாவலும் வெளிவந்துள்ளது.

காத்திரமான விமர்சனமும் படைப்புத் தொடர் பான விரிவான கருத்துக்களும் இல்லாத சூழலில், இந்த முக்கியமான நமது படைப் பாளி அடையாளம் காணப்படாதிருப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

மூன்றாவது மனிதன்
வெளியீட்டகம்

